தினசரி தியானம்

प्रज्ञानं ब्रह्म

இயற்றியவர்

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

தினசரி தியானம்

प्रज्ञानं ब्रह्म

இயற்றியவர்
ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை - 639 115
திருச்சி மாவட்டம்
1998

தபோவனத் தொடர் 60

முதல் இருபத்தாறு பதிப்புகள் வரை 2,70,000
இருபத்து ஏழாம் பதிப்பு 1998 10,000

திருப்பராய்த்துறை
ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம்
காரியதரிசியால் பிரசுரிக்கப்பட்டது.

பிரசார விலை ரூ. 15-00

தபோவன அச்சுப்பள்ளி, திருப்பராய்த்துறை.

முகவுரை

மானுட அமைப்பில் உடலினும் உயர்ந்தது உள்ளம். உடலில் ஏதேனும் குறைபாடு இருந்தால் அதை முன்னிட்டு மனிதன் கீழோனாகக் கருதப் படமாட்டான். ஆனால் மனத்தில் நேர்மையும் ஒழுக்கமும் நல்லறிவும் அமையப் பெறாதிருக்கு மளவு அவன் புன்மையன் ஆவான். மனத்தை மாண்புறச் செய்யுமளவு மனிதன் மேலோன் ஆகிறான்.

உணவு ஊட்டி உடலை வளர்க்கிறோம். அப்படி உடலைப் பேணுவது உயிர்கள் அனைத் துக்கும் பொதுவானது. பின்பு உள்ளத்தைப் பேணுவது மனிதனுடைய தனிச்செயல் ஆகிறது. நல்லுணவையே உடலுக்குத் தரவேண்டும்; உணவு வெவ்வேறு வகைப்பட்டதாக இருக்கவேண்டும். விதவிதமான உணவு நாவுக்கு இனியதும் உடலுக்கு உறுதி தருவதும் ஆகும். நல்லெண் ணமும் நல்லுண்ர்வும் உள்ளத்துக்கு உணவு ஆகின்றன. எத்தனைவிதமான நல்லெண்ணங் களை எண்ணுகின்றோமோ அத்தனை விதங்

களில் உள்ளம் உறுதிபெறும். மனத்துக்கு இனிய நல்லுணவு ஆவது தினசரி தியானம். அன்றாடம் வழிபாட்டுக்குப் பிறகு ஓர் எண்ணத்தை இதனின்று பெறலாம். பிறகு அதைப்பற்றிச் சிந்தனை பண்ணுவது அவசியம். சிந்திக்குமளவு அந்த மூலக்கருத்தில் வெவ்வேறு கிளை எண்ணங்களும் உள்ளத்தில் உதிக்கும். உள்ளத்தினுள் பக்தியையும் ஞானத்தையும் வளர்ப்பதற்கு இது உற்றதோர் உபாயம்.

தேதியை ஆங்கில முறையில் அல்லது தமிழ் முறையில் அவரவர் விருப்பம்போல் பின் பற்றலாம். சில வருடங்களில் ஆங்கிலத் தேதியும் தமிழ்த்தேதியும் ஒத்திருக்கும்; வேறு சில வருடங்களில் ஒருநாள் முன்னது பின்னதாக இருக்கும்.

தினசரி தியானம் என்னும் தலைப்புக் கொடுத்து இயற்றியுள்ள இந்நூலில் அடங்கி இருக்கிற கருத்துக்கள் ஆத்ம சாதனத்துக்கு நன்கு உதவும் என்பது சொல்லாமலே விளங்கும்.

திருப்பராய்த்துறை

20-8-60

சுவாமி சித்பவானந்த

அன்பு

அன்புக் களஞ்சியமே! என்னை நீ அன்பில் தோய்த்து அன்புமயம் ஆக்கிவிடாயோ? அன்பில்லாது நான் எங்ஙனம் உயிர் வாழ்வேன்? உன்னிடத்திருந்தல்லாது அன்பை நாடி நான் வேறு எங்குச் செல்வேன்?

வாழ்வை இனியதாக்குவது அன்பு. கஷ்டங்களையெல்லாம் மீளச்செய்வது அன்பு. குடும்பவாழ்க்கையை மேன்மைப்படுத்துவது அன்பு. உலக வாழ்க்கையைச் சுவைக்கச் செய்வது அன்பு. அழகற்றதற்கு அழகூட்டுவது அன்பு. அன்பு பொலியுமிடம் சுவர்க்கம்; அன்பு மறைந்தவிடம் நரகம். மனமே, நீ அன்பில் ஊறி வளர்க.

அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

— திருமந்திரம்

ஜனவரி 2 மார்கழி 18

தொண்டு

ஆருயிர்க்கெல்லாம் அன்புடன் தொண்டு புரியும் ஆர்வத்தை அண்ணலே, எனக்கு நீ நல்குவாயாக.

சேவை செய்பவன் மனத்தைவிட்டு வேற்றுமை விலகிவிடுகிறது. மன்னுயிரைத் தன்னுயிர்போல் அவன் கருதுகிறான். வேற்றானாக இருந்தவன் சேவையின்மூலம் தனக்கு உற்றவன் ஆய்விடுகிறான். அங்ஙனம் ஒற்றுமை நிலைநாட்டப்படுகிறது. ஐக்கிய உணர்ச்சி வளர்கிறது. அதினின்று நல்லறிவு ஓங்குகிறது. தொண்டு என்னும் பெருவாய்ப்பு எல்லார்க்கும் சொந்தமானது. அதைப் பயன்படுத்தாதவன் வாழ்ந்தும் வாழாதவனாகிறான். மனமே, சேவையே உன்னை மேலோன் ஆக்குகிறது.

உண்டுஉடுத்துப் பூண்டுஇங்கு உலகத்தார் போல்திரியும்
தொண்டர்வினை யாட்டே சுகங்காண் பராபரமே.

— தாயுமானவர்

ஒழுக்கம்

இறைவா, நின்னை நான் நினைந்திருக்கும் வேளையில் நிழல் போன்று ஒழுக்கம் என்னைப் பின் தொடர்கிறது. நின்னை மறந்திருக்கும் வேளையில் ஒழுக்கத்தின் நிழல்போன்று அதை நான் பின்பற்றுகிறேன்.

அவரவர் மனபரிபாகத்துக்கு ஏற்றவாறு ஒழுக்கம் உயர்ந்தது அல்லது தாழ்ந்தது ஆகிறது. ஒருவருக்கும் தெரியாது இரகசியமான இடத்துக்குப்போய்த் தீயில் கை வைத்தால் அது சுடாதிருக்குமா? ஒருவருக்கும் தெரியாது மறைவில் ஒழுக்கம் தவறினால் அது மனிதனைக் கீழ்மைப்படுத்தாது விட்டுவிடுமா? அழகு பார்க்க யாரும் இல்லாத இடத்திலும் மலரானது தன் முழு அழகையும் தோற்றுவிக்கிறது. மணத்தை மோப்ப யாரும் இல்லாத கானகத்திலும் மலரானது தன் முழு மணத்தையும் பரப்புகிறது. மனமே, நீ இறைவனுக்குரிய மலர் ஆவதே உனக்குற்ற ஒழுக்கம்.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்.

— *திருக்குறள்*

சுயேச்சையின் பாகுபாடு

என்னுயிர் நாயகா, உன்னை நான் நாடுகையில் எனது சுயேச்சை கற்புடையதாகிறது. உன்னையல்லாது வேறு பொருளை நாடுகையில் அது கற்பிழந்து விடுகிறது.

கீழ்மையில் செல்லும் சுயேச்சை விலங்குத் தன்மையது. இடைநிலையில் திரியும் சுயேச்சை மக்கள் தன்மையது. மேன்மையில் மிளிரும் சுயேச்சை தெய்வத் தன்மையது. நெஞ்சே, நீ நாடுவது பெரிய பொருளானால் உனக்கு உண்மையான சுயேச்சை வந்து விட்டதென்று தெரிந்துகொள்.

உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி.

—அப்பர்

தேன் ஈ

தெவிட்டாத ஆனந்தத்தைத் தரும் தேவா, நான் தேனீ போன்று தூயதையே நாடு பவன் ஆவேனாக. தூயநிலை கிட்டவில்லை என்று துச்சத்தின்பால் நான் திரும்பலாகாது.

சாணத்தில் உதிக்கும் புழுவை எடுத்துச் சந்தனத்தில் வைத்தால் அது செத்துப் போம். அங்ஙனம் கயவர்களுக்கு நல்லாரிணக்கம் பெருவேதனையாகும். வீட்டு ஈ சில வேளை மலத்திலும் சில வேளை நல்ல தின்பண்டத்தின் மீதும் உட்காரும். இடைத்தர மான மக்கள் நல்லதையும் கெட்டதையும் மாறி மாறிச் செய்கின்றனர். நெஞ்சே, நீ தேன் ஈ போன்று நல்லதையே நாடு நம் இறைவனுக்கு நீ சொந்தமாவாயாக.

எத்திக்கும் தானாகி என்னிதயத் தேயூறித்
தித்திக்கும் ஆனந்தத் தேனே பராபரமே.

— தாயுமானவர்

தன்னைத் திருத்துதல்

இறைவா, உனது சிருஷ்டியில் குறைபாடு காண்கிற நான், என் மனத்தகத்து உள்ள கேட்டைத் திருத்தியமைக்க நினைப்பதில்லை. என்னே! என்னை நான் ஒழுங்குப்படுத்தும் இயல்பைத் தந்தருள்க.

பதைபதைப்பே வடிவெடுத்தவன் மற்றவர்களைச் சீர்படுத்துவதில் கண்ணுங்கருத்துமாயிருக்கிறான். அறிஞன் தன்னைத் திருத்துதலில் கவனத்தைச் செலுத்துகிறான். தன்னைத் திருத்துமளவு உலகம் திருந்தியதாக ஒருவனுக்குக் காட்சிகொடுக்கிறது. புறக்கரணங்களை நேர்மைப்படுத்தினால் மட்டும் போதாது; மனத்தின்கண் எழும் வீணான எண்ணங்களையும், சுயநலத்தையும் அகற்ற வேண்டும். மனமே, உன்னை நீ நேர்மைப்படுத்திக்கொள்.

ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்துத்
தூங்காமல் தூங்கிச் சுகம்பெறுவதெக்காலம்.

— பத்ரகிரியார்

கள்ளன்

தாணுக்காரன் முன்னிலையில் திருடன் தனது தகாத தொழில் புரிவதில்லை. இறைவா, இமைப் பொழுதாவது உன் முன்னிலையைவிட்டு நான் மறையமுடியாது. நீ பார்த்திருக்க, என்னை யாரும் பார்க்கவில்லை என்று நான் பயன்படாச் செயல்புரியலாகாது. உன் கண்காணிப்பை உணர்ந்து நான் கள்ளனாகலாகாது.

விளக்கு எரியும் வீட்டிற்குள் திருடர் புகத் துணியார். மனத்தினுள்ளே தெய்வத்தின் ஞானவிளக்கேற்றி வைத்திருக்கும்பொழுது புல்லிய எண்ணங்கள் என்ற கள்ளர் புகுவதில்லை.

கள்ளன் அறிவூடுமே மௌள மெ(ள்)ள
வெளியாய்க்
கலக்க வரு நல்ல உறவே.

— தாயுமானவர்

மரணம்

நாள்தோறும் மக்கள் மடிந்து போவதைப் பார்த்திருந்தும், நான் மட்டும் அதற்கு விலக்காவேன் என்றெண்ணும் மடமை என் மனதினுள் புகுந்துவிட்டது. எம்பெருமானே, அம்மடமையை நீ அகற்றிவிடுவாயாக.

நூறு வருஷங்களுக்கு முன்பு இவ்வுலகில் இருந்தவர்களெல்லாம் இப்பொழுது இல்லை. இப்பொழுது இங்கு இருப்பவர்களெல்லாம் நூறு வருஷங்களுக்குப் பின்பு இங்கிருக்க மாட்டார்கள். நம் வாழ்நாளில் கழிந்த பகுதி கனவாகப் போய்விட்டது. எஞ்சியிருப்பதும் இனிக் கனவாகிவிடும். இதை எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

இன்றைக்கு இருப்பாரை நாளைக்கு
இருப்பர்
என்று எண்ணவோ திடமில்லையே.

— தாயுமானவர்

ஆனந்தம்

இறைவா, நீ ஆனந்தம். என் சிந்தையினுள் நீ வீற்றிருக்கிருய் என்பதற்கு வேறு என்ன சான்று வேண்டும்! ஆனந்தம் இன்றி இங்கு யார் உயிர்வாழ முடியும்?

உயிர்களெல்லாம் உயிர் தரித்திருப்பது ஆனந்தத்தின் பொருட்டு. ஓயாது உழைத்தல் ஆனந்தத்தின் பொருட்டு. ஒருவரை ஒருவர் நேசிப்பது ஆனந்தத்தின் பொருட்டு. ஒருவர்க்கொருவர் துணைபுரிவது ஆனந்தத்தின் பொருட்டு. தேடியதைத் தியாகம் பண்ணுவது ஆனந்தத்தின் பொருட்டு. விட்டுவிட முடியாதது ஆனந்தம்.

கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு கருணாகரக் கடவுளே.

— தாயுமானவர்

ஜனவரி 10 மார்கழி 26

நல்ல துவக்கம்

தேவே, உனக்கென வாழ்வது வாழ்க்கையின் நல்ல துவக்கம். உன்னையன்றி வேறு பொருள்களுக்கென வாழ்வது விழலுக்கு இறைத்த நீருக்கு ஒப்பாகும். உன்னைச் சார்தல் என்னும் துவக்கம் எனக்குண்டாகுக.

நல்ல துவக்கம் பாதி வெற்றி என்பது பழமொழி. பரநலத்தை முன்னணியிலும் சுய நலத்தைப் பின்னணியிலும் வைப்பது நல்ல துவக்கம். கடமை முன்னணியிலும் களியாட்டம் பின்னணியிலும் இருத்தல் வேண்டும். இதனால் தவறுதல் உண்டாக இடமில்லை. தூய எண்ணம், பரந்த நோக்கம், சாந்தநிலை, களங்கமற்ற பான்மை ஆகியவைகள் நல்ல துவக்கத்திற்கு ஏதுவாகும்.

**கைதான் நெகிழவிடேன் உடையாய்
என்னைக் கண்டுகொள்ளே.**

— மாணிக்கவாசகர்

நிறை நெஞ்சம்

குறைவில்லா நிறைபொருளே, உன்னை நினைக்க நினைக்க என் நெஞ்சம் நிறைகிறது. நிறை நெஞ்சம் நிறைகுடம் போன்றது என்பதை உணர்கிறேன்.

ஓட்டைப் பாண்டத்துக்குள் வார்க்கும் நீர் எல்லாம் ஒழுகிப்போய் விடுகிறது. நீருக் குள்ளே போட்ட ஓட்டைப்பாண்டம் நிறை குடம்போன்று ஆய்விடுகிறது. நெஞ்சுக்கு அளிக்கும் பொருள்களெல்லாம் நாளடைவில் போதாதவைகளாகிவிடுகின்றன. நெஞ்சை இறைவனுக்கு அளித்துவிட்டால் அது நிறை நெஞ்சம் ஆகிறது. போதாது என்னும் குறை, நிறை நெஞ்சுக்கில்லை.

நிறையுடைய நெஞ்சின் இடையாய் போற்றி
நீங்காதுஎன் னுள்ளத் திருந்தாய் போற்றி.

— அப்பர்

ஜனவரி 12 மார்கழி 28

வெற்றிவேல்

வேந்தே, நான் அடைந்த வெற்றிக்கெல்லாம் வித்து எது என்பது எனக்கு விளங்குகிறது. உனது உணர்ச்சியில் ஒருமுகப்பட்ட உள்ளத்தைக்கொண்டு நான் எதைச் செய்தாலும் அது வெற்றியே. உன்னிடத்து ஒப்படைத்த உள்ளமே வெற்றிவேல்.

கடவுளிடத்து இருப்பதெல்லாம் நம்மிடத்தும் உண்டு. கந்தன் உயிர்களுக்குச் சேனைத் தலைவன். வேலாயுதத்தைக்கொண்டு அவன் எக்காரியத்திலும் வெற்றிபெறுகிறான். மனது நம்மிடத்து உள்ள வேல். குவிந்து ஒருமுகப்பட்டு அது கடவுளைச் சார்ந்திருக்குமானால் அது வெற்றிவேல் ஆய்விடுகிறது.

வெற்றிவேல் உற்றதுணை.

அருள் தாகம்

அற்பப் பொருளுக்காகத் தாகம் கொண்டுள்ள என் மனதில், அருள்தாகம் கொள்ளும்படி அண்ணலே, நீ அருள்புரிவாயாக.

இன்று இருந்து நாளைக்கு அழிந்துபோம் பொருளுக்காக மனிதன் படும்பாடு எவ்வளவு பெரியது! ஊர் ஊராக அலைந்து திரிதல், ஓயாது உழைத்தல் ஆகிய இத்தனைவித இயக்கமும் பொருளல்லாப் பொருளை நாடியுண்டாகிற தாகத்தாலேயாம். என்றைக்கு அது அருள் தாகமாக மாறுகிறதோ அன்றைக்குப் புதிய வாழ்வு துவங்குகிறது. தாகம் எல்லார்க்குமுண்டு. தாகமில்லாது முன்னேற்றமில்லை. பொருள்தாகம் மனிதனைப் புண்படுத்துகிறது. அருள்தாகம் ஆறுதல் அளிக்கிறது.

கர்மமானது கோடிமுன்னே செய்தாலும்
நின்கருணைப் பிரவாக அருளைத்
தாகமாய் நாடினரை வாதிக்க வல்லதோ!

— தாயுமானவர்

ஜனவரி 14 தை 1

நெல்லிக்கனி

கடவுளே, உன்னைக் கருணாகரனென்று அறியாதவர்களுக்கு நீ கைப்பவன் போன்று தென்படுகின்றாய். உன்னை நெல்லிக்கனி எனல் வேண்டும். இன்னாதது போன்று காட்டிய பின்பு, இனியதாகும் பொருள் நீ ஒருவனே. நலமனைத்தையும் எனக்கு நல்கு பவன் நீயே.

ஐம்புலன்கள் மூலம் நுகரும் இன்பம் முத லில் தித்திக்கிறது. பிறகு துன்பமாய் வடி வெடுத்து விடுகிறது. தகவிலாதவர்க்குத் தெய்வ வழிபாடு துன்பம் போன்று தோன்று கிறது. அதில் தோய்ந்திருப்பவர்க்கு அது தித்திக்கிறது. கேட்டைக் களைய வல்லதும் அதுவேயாம். நலனும் இனிமையும் கடவுளி டத்தே உள.

திக்கொடுகீழ் மேலுந் திருவருளாம் பொற்பறிந்தோர்
கைக்குள்வளர் நெல்லிக் கனியே பராபரமே.

— தாயுமானவர்

ஜனவரி 15 தை 2

மனம் மொழி ஒற்றுமை

மனமொன்று எண்ண, மொழியொன்று பேசும் புன்மையனுக்கு, எண்ணியாங்கு இயம்பும் திண்மையைத் தகையே, நீ தந் தருள்வாயாக

பூமிக்கும் செடிக்கும் எவ்வளவு பொருத்தமோ அவ்வளவு பொருத்தம் சிந்தைக்கும் சொல்லுக்குமிடையில் இருக்க வேண்டும். மனிதன் எத்தகைய கொள்கையை உடையவன் என்பது முக்கியமானதல்ல. உள்ளமும் உரையும் ஒத்திருக்குமளவு உள்ளம் உறுதி பெறுகிறது; உரையானது உயிர்பெறுகிறது. மனதையும் மொழியையும் ஒன்றுபடுத்துவதே யோகசாதனத்தின் முதற்படியாகும்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று
பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்.

— திரு அருட்பா

ஜனவரி 16 தை 3

பொய்சேர்ந்த சிந்தை

மெய்ப்பொருளே, என் சிந்தையானது பொய்க்குப் புகலிடம் என்றெண்ணி அதைப் புறக்கணித்து விடாதே. உனது சான்னித்தியமே பொய்யைப் போக்குதற்கு உற்ற உபாயம்.

சூரியன் அவ்வளவு பெரியது எனினும் ஒரு சிறு மேகம் அதை நமக்குத் தெரியாவண்ணம் மறைத்துவிடுகிறது. மனதில் உள்ள அழுக்கு அதனுள்ளே இருக்கும் தெய்வம் தெரியாதபடி திரைபோட்டுவிடுகிறது. பொய்பேசும் தன்மையே அத்தகைய அழுக்காக வடிவெடுத்திருக்கின்றது. சத்ய விரதத்தில் நிலை பெறுமளவு உள்ளே ஒளிரும் இறைவனை உணரலாம்.

பொய்சேர்ந்த சிந்தை புகாதாய் போற்றி
போகாதுஎன் னுள்ளத் திருந்தாய் போற்றி.

— அப்பர்

சுவைத்தல்

தித்திக்கும் உணவைச் சுவைக்கும் பொழுது உலகத்தவர் செய்யும் பேர் இரைச்சல் எனக்கு உபத்திரவமாகத் தோன்றுவதில்லை. இறைவா, உன்னை நான் எண்ணியிருக்கும்போது உலகத்தவர் செய்யும் இடைஞ்சலை நான் எண்ணாதிருக்க அருள்புரிவாயாக.

கடவுள் வழிபாட்டுக்கு வெளி உலகிலிருந்து உண்டாகும் இடைஞ்சல் இடைஞ்சலல்ல. உண்மையான இடைஞ்சல் உள்ளத்தில் உண்டாகிறது. மனது இறைவனைச் சுவைக்கத் தெரிந்து கொண்டால் போதும். அப்பொழுது அது எல்லாம் அடையப்பெறுகிறது. ஏனைய பொருள்களுக்கிடையில் இனியவைகளும் இல்லை: இன்னாதவைகளும் இல்லை. சுவைப்பதற்குரிய பொருள் கடவுள் ஒருவரே.

உவட்டாத பேரின்பமான சுகவாரியினை
வாய்மடுத்துத் தேக்கித் திளைக்க
நீ முன்னிற்பது என்றுகாண் ?

— தாயுமானவர்

அக்னி ஜ்வாலை

கொழுந்து விட்டெரியும் தீக்கு விறகு இரையாகிறது. அருள் தந்தையே, அக்னி ஜ்வாலை சொரூபமாகிய உன்னிடத்து நான் லயமாவேனாக. நான், எனது என்பதெல்லாம் உன்மயமாகுக.

விறகு தீக்கு ஏற்றதாயிருந்தால் போதுமானது. எந்த வனத்திலிருந்து வந்தது, யாரால் பயிர் செய்யப்பட்டது என்பதெல்லாம் பயன்படாத கேள்விகள். ஊர், பேர், உற்றார், உறவினர் என்ற விசாரங்களெல்லாம் மனிதன் விஷயத்தில் பயன்படாதவைகள். மனிதன் கடவுளுக்கு ஏற்றவனானல் போதுமானது. விறகு தீ மயமாவதுபோன்று தான், தனது என்பனவற்றை விட்டவன் தெய்வ மயமாகிறான்.

சித்தமிசை குடிகொண்ட அறிவான
தெய்வமே, தேஜோமய ஆனந்தமே.

— *தாயுமானவர்*

ஜனவரி 19 தை 6

கற்பக விருக்ஷம்

கருணைக்கடலே! நீ கற்பக விருக்ஷம். உன்னடியிலிருந்து கொண்டு கேட்டதை யெல்லாம் நீ தருகிறாய். உன் முன்னிலையில் தரித்திரத்துக்கு இடமேது?

யார் எதைக் கேட்கிறாரோ அதை நல்கு கிறது கற்பக விருக்ஷம். இயற்கை யென்றும், கடவுள் என்றும் பெயர் பெற்றுள்ள கற்பக விருக்ஷத்தின் கீழ்தான் எல்லாரும் இருக் கிறார்கள். யார் எப்பொருளைப் பெறுதற்குத் தகுதியுடையவர் ஆகிறாரோ அப்பொருள் அவருக்கு அளிக்கப்படுகிறது. நலத்துக்கே தகுதியுடையவராவது நம் கடமை.

கண்ணே கருத்தேயென் கற்பகமே
கண்ணிறைந்த
விண்ணே ஆனந்த வியப்பே பராபரமே.

— *தாயுமானவர்*

ஜனவரி 20 தை 7

மனக்கண்ணுடி

காண்பாரது பான்மைக்கு ஏற்றவாறு கடவுளே, நீ காட்சி கொடுக்கிறாய். எத்தனை உயிர்களோ அத்தனை விதமாய் உன்னை நீ தோற்றுவிக்கிறாய்.

பச்சைக் கண்ணுடி போட்டுக்கொண்டு பார்ப்பவர்க்கு உலகெல்லாம் பச்சையானது. கண்ணுடியின் நிறத்துக்கு ஏற்பக் காணப்படு பொருள்களின் நிறம் மாறுகிறது. மனம் என்னும் கண்ணுடி அத்தகையது. கெட்ட மனமுடையார்க்கு உலகம் கேடானது. நல்ல மனமுடையார்க்கு உலகெல்லாம் நல்லது. மனமென்னும் கண்ணுடியை உடைத்தவர்க்கு எல்லாம் கடவுள் மயம்.

சினம்இறக்கக் கற்றாலும்
சித்தியெல்லாம் பெற்றாலும்
மனம்இறக்கக் கல்லார்க்கு
வாயேன் பராபரமே.

— தாயுமானவர்

ஜனவரி 21 தை 8

இளமை

கடவுளே, நீ குமரன். காலம் உன்னைக் கட்டுப்படுத்துவதில்லை. என்றைக்கும் இளமையே வடிவெடுத்தவன் நீ. உன்னுடைய பாங்கில் நான் நிலைத்திருந்து என்றைக்கும் இளமையைக் காப்பேனாக.

உடல் பிறக்கிறது, வளர்கிறது, நோய் வாய்ப்படுகிறது, தேய்கிறது, மறைகிறது. ஆனால் உள்ளம் எந்நாளும் குமரக்கடவுள் போன்றிருக்க முடியும். உள்ளத்தைப் பண்பட்ட நிலையில் வைத்திருப்பதுதான் முருகன் வழிபாடு எனப்படுவது. தளர்வும், சோர்வும், சலிப்பும் விருத்தாப்பியத்தை விளைவிக்கின்றன. உறுதியும், ஊக்கமும், உழைப்பும் இளமையைப் பாதுகாக்கின்றன.

சந்ததமும் இளமையோடு இருக்கலாம்.

— தாயுமானவர்

ஜனவரி 22 தை 9

நட்பு

பிரியாது என் மனத்தகத்திருந்து எனக்கு நலம் நல்கும் நட்பே, உன்னை நான் வணங்குகிறேன்.

செல்வத்தில் பற்றுவைக்கும் மக்கள் செம்பொருளாகிய தெய்வத்தைப் புறக்கணிக்கின்றனர். பொருள்பற்று தெய்வ நட்பைப் புறக்கணித்து விடுகிறது. பொருள் பற்று நீங்குமளவு நல்ல உறவாகச்சித்தமிசை குடியிருக்கும் பரமனது பராமரிப்புப் புலனாகிறது. பிற்கு அதற்கு நிகரான துணை வேறொன்றுமில்லை என்னும் தெளிவு வருகிறது. அவனது நட்பு ஒன்றே நாடத் தகுந்தது.

ஓடும் இருநிதியும் ஒன்றாகக் கண்டவர்கள்
நாடும் பொருளான நட்பே பராபரமே.

— தாயுமானவர்

ஜனவரி 23 தை 10

துன்பத்துக்குப் பிறப்பிடம்

இன்பத்துக்கு ஏதுவான எந்தையே, அகங்காரத்தால் உன்னைப் புறக்கணித்து என்னை முன்னணியில் வைத்தபொழுதெல்லாம் நான் துன்பத்துக்கு ஆளானேன்.

துன்பப்படாத மனிதன் உலகில் இல்லை. ஒரு காரணம் இல்லாவிட்டால் ஒரு காரணத்தை முன்னிட்டுத் துன்பம் வருகிறது. அக்காரணங்களெல்லாம் அகங்காரம் என்னும் மஹா காரணத்தில் அடங்கிவிடுகின்றன. அகங்காரத்தை அடியோடு அகற்றியவனுக்கு அணுவளவும் துன்பமில்லை.

ஆங்காரம் என்னுமத
யானைவா யில்கரும்பாய்
ஏங்காமல் எந்தையருள்
எய்துநாள் எந்நாளோ.

— தாயுமானவர்

புலன் நீட்டுதல்

என் அருள் தந்தையே, இந்திரியங்களை நான் ஒடுக்கவேண்டியதில்லை. நின் சேவையில் நான் அவைகளை வேண்டியவாறு நீட்டலாம். உன்னை அறிதற்குப் பண்பட்ட பொறிகளும் நல்ல வாயில்களேயாம்.

விஷயங்களில் செல்லுகின்ற இந்திரியங்கள் கெட்டுப்போய்விடுகின்றன. விஷயங்களில் செல்லுகிற பொறிவாயில் ஐந்தையும் அவித்தல் வேண்டும். பின்பு கடவுள்பால் திருப்பப்படுமளவு அவைகள் திட்பம் பெறுகின்றன. காண்பதெல்லாம் அவன் காட்சி. கேட்பதெல்லாம் அவனைப்பற்றிய சொல். உண்பது அவன் பிரசாதம். நுகர்வதெல்லாம் அவன் வடிவம்.

பார்த்தஇட மெல்லாம்பரவெளியாய்த்
தோன்றவொரு
வார்த்தை சொல்லவந்தமனுவே பராபரமே.

— தாயுமானவர்

தாய்

உலகனைத்தையும் ஈன்ற தாயே, என்னை நீ தாங்கிக்கொள்வாயாக. அறியாமையினால் கேடுகள் பல செய்யும் என்னைக் கருணையோடு நீ காப்பாயாக.

தாயும் சேயும் என்னும் முறையில் கடவுளோடு இணக்கம் வைப்பது சாலச் சிறந்தது. குற்றங்கள் பல செய்தாலும் தாயினிடம் அவைகளைப் பற்றித் தாராளமாகப் பேசலாம். குழந்தையின் மீது படியும் அழுக்கைத் தாய் தானே துடைத்து வைக்கிறாள். பிள்ளையைப் பிரியத்தோடு பேணுதல் ஒன்றே அவள் புரியும் பணிவிடையாகும். கடவுள் நமக்கு அத்தகைய தாயாகிறார்.

கன்றினுக்குச் சேதா
கனிந்திரங்கல் போலெனக்கு
என்று இரங்கு வாய்கருணை
எந்தாய் பராபரமே.

— தாயுமானவர்

குரு

அண்ணலே, நீ அருட்குருவாக வந்து என் உள்ளமாகிய கல்லைப் பிசைந்து தெய்வக் கனியாக மாற்றி அமைக்க வல்லவன். என் உடல், பொருள், ஆவியெல்லாம் உனக்கே உரியனவாகுக.

எருவைச் செடியானது தன் மயமாக்குவது போன்று குரு சிஷ்யனைத் தன்மயம் ஆக்குகிறார். அவர் கருணையே வடிவெடுத்தவர். கைம்மாறு கருதாத பேரியல்பை அவரிடம் காணலாம். மனிதனைத் தெய்வமாக மாற்றியமைப்பவரைத் தெய்வமாகக் கருதாது வேறு எங்ஙனம் கருதுவது?

தந்தைதா யாவானும் சார்கதியிங் காவானும்
அந்தமிலா இன்பம்நமக் காவானும்—எந்தமுயிர்
தானுகு வானும் சரணுகு வானும்அருட்
கோனுகு வானும் குரு.

— குரு வணக்கம்

ஜனவரி 27 தை 14

முக்தி

எனக்கு ஒவ்வாத உலகப் பெற்றிகளினின்று என்னை விடுவித்து எனக்கு முற்றும் ஒத்தது ஆகிய உன் சொரூபத்தில் செம்பொருளே, என்னை நீ அடக்கிக்கொள்வாயாக.

எல்லா உயிர்களும் முக்தி அல்லது விடுதலையை நாடுகின்றன. வறுமையில் இருப்பவர் அதினின்று முக்தியை நாடுகின்றனர். அறியாமையிலிருப்பவர் அக்ஞானத்தினின்று விடுதலை வேண்டுகின்றனர். நிலத்தை விட்டு நீருக்குப்போக மீன் விரும்புவது போன்று முமுக்ஷுக்கள் மாயா உலகைக் கடந்து கடவுளில் களித்திருக்கின்றனர்.

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

— திருக்குறள்

ஜனவரி 28 தை 15

தெய்வப்பெற்றி

அடுப்புக்கரி அக்னியைச் சார்ந்து அக்னி மயமாகிறது. அருட்சோதி தெய்வமே, நான் உன்னைச் சார்ந்து தெய்வப் பெற்றியெல்லாம் பெறுவேனாக.

மனதைக்கொண்டு மனிதன் எதனோடு வேண்டுமானாலும் தொடர்வு வைக்கலாம். கெட்டதைச் சார்வதும் மனதின் மூலம்; நல்லதைச் சார்வதும் மனதின் மூலம். மாண் பொருளாகிய தெய்வத்தினிடத்து மனதைத் திருப்பித் தெய்வத்தையே எண்ணியிருப்பவர்க்குத் தெய்வப்பெற்றியெல்லாம் வந்தமைகின்றன. மனதின் வலிவுக்கு ஏற்ப தெய்வப் பெற்றியும் விரைவில் வந்தமைகின்றது.

சிந்தை அவிழ்ந்து அவிழ்ந்து
சின்மயமா நின்னடிக்கே
வந்தவர்க்கே இன்பநிலை
வாய்க்கும் பராபரமே.

— தாயுமானவர்

ஏழை நெஞ்சம்

அட்டைப் பெட்டிக்குள் வைத்திருக்கும் பொருளுக்கு ஏற்ப அதற்கு மதிப்பு வருவது போல், மனதுக்குள் வைத்திருக்கும் எண்ணத்துக்கு ஏற்ப எந்தையே, அதற்கு மதிப்பு வருகிறது.

நெஞ்சம் ஆலயமாவது அல்லது அற்பப் பொருளாவது நாம் அதில் போட்டு வைத்திருக்கும் எண்ணத்தைப் பொறுத்தது. குப்பைத்தொட்டி கீழ்மையடைவது குப்பையால். மனம் கீழ்மையடைவது கீழான எண்ணங்களால். தகாத எண்ணங்கள் பலவற்றை எண்ணிக்கொண்டிருப்பதே கீழோர் பாங்கு. இவைகளை எல்லாம் துடைத்துவிட்டால் மனம் தானே தேவாலயமாய்விடும்.

எண்ணாத எண்ணமெல்லாம்
எண்ணிஎண்ணி ஏழைநெஞ்சம்
புண்ணாகச் செய்ததுஇனிப்
போதும் பராபரமே.

— தாயுமானவர்

ஜனவரி 30 தை 17

தேடுதலும் தள்ளுதலும்

உனக்கென்று வாழக் கற்றுக்கொண்டால் பிறகு தேவாதிதேவா, நான் தேடவேண்டியதோ தள்ள வேண்டியதோ ஒன்றுமில்லை.

இனியது என்று ஒன்றைப் பெற முயலுதலும், இன்னாதது என்று ஒன்றை அகற்ற முயலுதலும் உலகமக்களது இயல்பு. பண்பாடு அடைய முயலுபவர் போக்கு அத்தகையதன்று. இனியது, இன்னாதது வாயிலாக இயற்கைத்தாய் உயிர்களைத் திருத்தியமைக்கிறாள். தானாக வந்தெய்தும் இனியதனிடத்து நல்லார் நாட்டம் வைப்பதில்லை; தானாக வந்தெய்தும் தீதினிடத்தும் அவர்கள் வெறுப்புக்கொள்வதில்லை. ஆத்மபரிபாகத்துக்கு அவ்விரண்டையும் அவர்கள் பயன் படுத்திக்கொள்கின்றனர்.

வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பைஇல.

— *திருக்குறள்*

ஜனவரி 31 தை 18

ஓய்வு

வெறிபிடித்த குரங்குபோல் அலையும் எனக்கு ஒண்பொருளே, ஓய்வு என்பது ஒருக்காலும் உண்டாகாதோ?

கடமையினின்று விலகுவது ஓய்வாகாது. கடமையை யாண்டும் முறையாக முயன்று செய்யவேண்டும். மனத்தகத்துத் தொல்லைப் படாதிருப்பதே ஓய்வு. தொல்லையானது மனதைத் தேய்த்து விடுகிறது. துன்பத்தை அது மேலும் மேலும் வளர்க்கிறது. அலுவல் களுக்கிடையில் அமைதியான மனமுடைத் திருப்பது ஓய்வு. அல்லற்படுத்துபவைகளை முன்னிட்டு மனம் அசையாதிருப்பது ஓய்வு. வேலை செய்துகொண்டிருப்பதற்கிடையில் ஆவல் கொள்ளாதிருப்பது ஓய்வு.

தூங்காமல் தூங்கிச்
சுகப்பெருமான் நின்நிறைவில்
நீங்காமல் நிற்கும்
நிலைபெறவுங் காண்பேனோ?

— தாயுமானவர்

பொருளுடைமை

மூட்டை சுமக்காத வெறும் ஆள் வேக மாய் நடப்பதுபோன்று, பொருள்பற்றில் லாத நான் உன் அருளுக்கு அண்ணலே, அதிவிரைவில் ஆளாகிறேன்.

தராசுத் தட்டில் கனமுடையது கீழே போகிறது. அது போன்று பொருள் பற்று வந்துவிட்டால் மனது அதில் மூழ்கிக் கீழே போகிறது. அருள் நிலையை அப்பொழுது அறிவதில்லை. துருப்பிடித்த இரும்புபோன்று அது உதவாது போய்விடுகிறது. நிலையற்ற பொருளை உடைத்திருப்பதற்காக ஒப்பற்ற அருளை மனிதன் புறக்கணிக்கிறான். ஊசிக் காதில் ஒட்டகம் நுழையலாம் என்றாலும் பணக்காரன் பரத்தை அடைய முடியாது என்பது கோட்பாடு.

அளகேசன் நிகராக அம்பொன்மிக வைத்தபேரும்
நேசித்துரசவாத வித்தைக்கு அலைந்திடுவர்.

— தாயுமானவர்

பிப்ரவரி 2 தை 20

இறைவனது ஆணை

இறைவா, உன்னை நான் மறந்துவிட்டாலும் என் வாழ்க்கை உனது ஆணைக்குட்பட்டிருக்கும்படி அருள் புரிவாயாக.

ஓர் ஊரை அடைய விரும்புபவன் ஆங்குச் செல்லும் இருப்புப்பாதை வண்டி பார்த்து ஏறிக்கொண்டால் போதும். பின்பு கவலையற்றிருந்தாலும் அவன் அவ்வூர் போய்ச் சேர்வான். இறைவனை அடைவது ஒன்றே உயிர்களுக்கு அவர் இட்டிருக்கும் ஆணையாகும். அவர் ஆணைப்படி ஒழுகுபவர் அவரை அடைவது திண்ணம்.

அவனன்றி ஓர் அணுவும் அசையாது.

— தாயுமானவர்

ஊக்கம்

ஊக்கமானது இடையறாது என் உள்ளத்தைப் புதுப்பித்துக் கொண்டிருக்கிறது. ஆகையால் எந்தையே, என்னை யாண்டும் ஊக்கமுடையவன் ஆக்குவாயாக.

ஊக்கமுடையவன் தனது ஊக்கத்தை ஒவ்வொரு சிறு செயலிலும் காட்டுகிறான். அவன் ஒன்றையும் புறக்கணிப்பதில்லை. அவசரப்படுதல் என்பதையும் அவன் அறியான். குற்றம் ஒன்றிலிருந்துதான் அவன் தப்பித்துக் கொள்ள முயலுகிறான். கேடுகளைக் கண்டு அவன் மனம் தளர்வதில்லை. நாளைக்கென்று எதையும் ஒத்திவைப்பதில்லை. இடையறாது செடி வளர்வது போன்று ஊக்கமுடையவனது உள்ளம் வளர்கிறது.

உடையரெனப்படுவது ஊக்கம் அஃதிலார்
உடையது உடையரோ மற்று.

— திருக்குறள்

பிப்ரவரி 4 தை 22

உழைப்பு

உழைப்பே வடிவெடுத்துள்ள கோவே, என் வாழ்வு விழுப்பமுடையதாவதற்கு நானும் உழைப்பே வடிவெடுத்திருப்பேனுக.

அண்டங்கள் அனைத்தையும் இயக்குதலில் இறைவனுக்கு ஓய்வு என்பதில்லை. அவனது பேருழைப்பால் புவனம் புனிதத்தைப் பெற்று வருகிறது. முறையுடன் உழைப்பவர் இறைவணக்கம் செய்கின்றனர். முறையுடன் உழைப்பவர் முன்னேற்றமடைகின்றனர். உழைக்கக் கற்றுக்கொள்பவர் வாழக் கற்றுக்கொள்பவர் ஆகின்றனர்.

காயநிலை அல்லவென்று
காண்பார் உறங்குவரோ?
தூயஅருட் பற்றுத்
தொடர்வார் பராபரமே.

— தாயுமானவர்

பிப்ரவரி 5 தை 23

வலிவு

சிங்கத்தின் வலிவை யானை அறிகிறது. சர்வசக்திமானாகிய தெய்வமே,நான் வலிவை அறியும்பொழுதுதான் உன்னை அறிகிறேன்.

வாழ்க்கைக்கு ஜீவாதாரமாயிருப்பது வலிவு. மேன்மைகளனைத்தும் வலிவினின்று வருகின்றன. கீழ்மைகளனைத்தும் தளர்ச்சியினின்று வருகின்றன. மனத்தளர்ச்சி பாபச் செயலில் வீழ்த்துகிறது. உடல் தளர்ச்சி நோயாக வடிவெடுக்கிறது. வலிவு தெய்வ நெறியாக வடிவெடுக்கிறது.

வலிவு படைத்தவனே வாழ்வுக்குரியவன்.

வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.

— *திருக்குறள்*

அஹிம்சை

பிறர்க்கு நான் கேடு செய்யும்பொழுது உண்மையில் எனக்கே கேடு செய்துகொள் கிறேன். எல்லா உயிர்க்கும் அன்பாயிருக் கும் பாங்கை அண்ணலே, எனக்கு நீ நல்கு வாயாக.

உயிர்களுக்கிடையிலுள்ள அடிப்படை ஒற் றுமையை அறியாதவன் பிற உயிர்களுக்குத் தீங்கு செய்கிறான். ஒரு கையானது மற்றொரு கையை ஒறுக்குமாயின் அது தனக்கே கேடாய் முடியும். ஒரு ஜீவன் மற்றொரு ஜீவனை ஹிம்சிக்கும் இடத்துக் கடைசியில் அவன் தன்னையே ஹிம்சித்துக்கொண்டவனாகிறான். எல்லார்க்கும் நலமே நாடுதல் அஹிம்சை.

எங்கெங்கே பார்த்தாலும்
எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்
அங்கங்கு இருப்பதுநீ
அன்றோ பராபரமே.

— தாயுமானவர்

அறம்

தனக்கேற்ற உணவை ஒவ்வோர் உயிரும் அறிவதுபோன்று, எனக்கேற்ற அறத்தை நானறிய இறைவா, அருள்புரிவாயாக.

உணவில் பல படித்தரம் இருப்பது போன்று அறத்திலும் பாகுபாடுகள் உண்டு. நல்வாழ்க்கைக்குத் தகுந்த செயல் எதுஎன்று வரையறுக்கப்பட்டது அறம். பொம்மைகளை வைத்து விளையாடுவது குழந்தைகளின் அறம். முதியோர்க்கு அது அறமாகாது. பொருளையும் போகத்தையும் நாடுவது பாமரர்க்கு அறம். பொருளையும் போகத்தையும் விடுவது சான்றோர்க்குஅறம். அவரவர் நிலையி னின்று மேலும் முன்னேற்றமடைவது அறம்.

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.

—திருக்குறள்

பிப்ரவரி 8 தை 26

நடுநிலை

தராசுமுனை நடுநிலைக்கு வருவது போன்று இன்ப துன்பங்களைச் சமனாகக் கருதி மனம் நடுநிலையில் உறுதி பெற்றிருக்க அறிவுத் தெய்வமே, நீ அருள்புரிவாயாக.

உலகில் இன்பம் இருப்பது போன்று துன்பமும் உண்டு. துன்பத்தைத் தவிர்த்து விட்டு இன்பத்தை மட்டும் இவ்வுலகில் பெற முடியாது. தனி இன்பத்தை இங்கே பெற முயலுபவர் வீணே முயலுகின்றனர். உலகத்தினின்று இன்பத்தை நாடாதிருத்தல் வேண்டும். தானே வந்தமையும் துன்பத்தைப் பொருட்படுத்தலாகாது. மனதை அப்படிப் பழக்கிவிட்டால் அது நடுநிலையாகும். அது மனிதனது மேன்மையை விளக்க வல்லது.

நடுவுநின் றார்க்கன்றி ஞானமும் இல்லை
நடுவுநின் றார்க்கு நரகமும் இல்லை
நடுவுநின் றார்நல்ல தேவரும் ஆவர்
நடுவுநின் றார்வழி நானும்நின் றேனே.

— திருமந்திரம்

மாட்சி

இயற்கை முழுதிலும் உனது மாட்சியை விளக்கும் மாண்பொருளே, என் மனதையும் மாட்சியுடையதாக்குவாயாக.

எப்பொருளிலும் எவ்விடத்தும் இறைவனது திருக்கோலமே தென்படுகிறது. அவனது பெருமைக்கு விளக்கமாக அமைந்துள்ளது பிரபஞ்சம். அவனது மகிமை இத்தனை விதமாக விளங்கிக்கொண்டிருப்பது பெருவியப்பேயாம்.

மாட்சி பெரிதும் உடையாய் போற்றி
மன்னியென் சிந்தை மகிழ்ந்தாய் போற்றி.

— அப்பர்

பிப்ரவரி 10 தை 28

கோவில்

பெருந்தகையே, நீ வீற்றிருப்பதற்கேற்ற புனித விடுதியாக என் காயத்தைத் திருத்தியமைக்க நீ துணைபுரிவாயாக.

இடிந்து பாழடைந்த வீட்டில் நல்லான் ஒருவன் குடியிருக்க விரும்பமாட்டான். அழுக்குப் படிந்த இல்லமும் அவனுக்கு ஒவ்வாது. கோமகன்களுக்கெல்லாம் கோமகன் கடவுள். அத்தகைய கோவுக்கேற்ற இல்லம் மனிதனது காயம். அது களிம்பு தோயாததாய் இருக்க வேண்டும். கடவுளை வரவேற்பதற்கேற்ற முறையில் காயத்தைத் தூயதாக்கி வைத்திருப்பது அவசியம்.

காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி
இலிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறையநீர்
அமையஆட்டிப்
பூசனை ஈசனுர்க்குப் போற்றவிக்காட்டினோமே.

— அப்பர்

பேருணர்ச்சி

ஒண் பொருளே, என் உள்ளத்தை உருக்கும் உணர்ச்சியாக நீ ஒளிர்வாயாக.

சுடச்சுடச் செம்பொன் செம்மை பெறுவது போன்று உணர்ச்சி ஓங்க ஓங்க உயிர் பேருயிராக மாறுகிறது. உணர்ச்சியின் திரட்சிக்கு ஏற்ப மனிதன்பால் தெய்வத்தன்மை திகழ்கிறது.

பேச்சு மிகப் பேசுவதால் இந்த ஆத்மா அடையப்படுவதல்ல; அறிவுத்திறமையாலும், பெருமிதமாகப் பிரசங்கங்கள் கேட்பதாலும் இது அடையப்படுவதல்ல. பேருணர்ச்சியோடு உள்ளுபவரே அதை உணர்கின்றனர். அத்தகையவர்க்கு ஆத்ம சொருபம் விளங்குகிறது.

நீராய்க் கசிந்துருகி நெட்டுயிர்த்து
நின்றேனைப்
பாராத தென்னே பகராய் பராபரமே.

— தாயுமானவர்

பிப்ரவரி **12** தை **30**

பலம்

பலமனைத்தும் நீயே; மற்றென்னைப் பல வானுக்கு.

உயிரை ஓம்புவது பலம்; உயிரை அழிப் பது பலமின்மை. நலத்தை நல்குவது பலம்; கேடதனைக் கொடுப்பது பலமின்மை. ஒற்று மையை உண்டுபண்ணுவது பலம்; வேற்று மையை வளர்ப்பது பலமின்மை. பலத்தில் பிறப்பது தூயஅன்பு; பலஹீனத்தில் முளைப் பது காமம். பலத்தின் விளைவு முக்தி; பல ஹீனத்தின் பயன் பந்தம்.

नायमात्मा बलहीनेन लभ्यः

நாயமாத்மா பலஹீனேன லப்ய:

இந்த ஆத்மா பலஹீனனால் அடையப் படுவதல்ல.

— முண்டகோபநிஷத்

அஞ்சுதல்

சூரியனுடைய முன்னிலையில் இருளுக்கு இடமில்லை. இறைவா, உன் அன்பர் அஞ்சுதல் என்பதை அறியார்.

ஆபத்துக்கு அஞ்சுதல் உயிர்களின் இயல்பு. நிகழ்வன யாவும் உண்மையில் ஈசன் செயல். கேடுடையதாகத் தென்படுகிற செயலிலும் நலம் மறைந்திருக்கிறது. பக்தர்களுக்கு அவ்வுண்மை புலப்படுகிறது. மரணம் மாண்புடையது என்பது அவர்களுக்குப் புலப்படுகிறது. நமனை அஞ்சுதல் என்பதை அவர்கள் அறியார். கடவுளைச் சார்ந்திருப்பவர் எதற்கும் அஞ்சுவதில்லை.

அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை.

— அப்பர்

சுடுகாடு

உலகனைத்தையும் எரித்தான பிறகுஎஞ்சியிருப்பவன் என்னுயிர்த் தலைவன். உணவை இடையறாது எரித்துக்கொண்டிருக்கும் இவ்வுடலைச் சுடுகாடாக நான் உணரும் இயல்பை நீ எனக்குக் கொடுத்தருள்வாயாக.

கடவுள் சிந்தனையை வளர்ப்பதற்கேற்ற இடம் சுடுகாடு. சுடலைப் பொடியும் சுட்டெரித்த வெள்ளெலும்பும் ஆங்குச் சிதறடைந்து கிடக்கின்றன. இப்பொழுது நாமிருக்கும் நிலையில் முன்பொருகால் இருந்தவர்களெல்லாம் இப்பொழுது பிடி சாம்பலாய் விட்டனர். இப்பொழுது அவர்களிருக்கும் நிலைமைக்குப் பின்பொருகால்நாமும் போய்ப் பிடி சாம்பலாவோம்.

கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடீ
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் ஆயிடினும்
காயில் உலகனைத்துங் கற்பொடிகாண் சாழலோ.

— மாணிக்கவாசகர்

தியானம்

மீன் நீருக்குள்ளிருக்க விரும்புவது போன்று எந்தையே, தியானத்தின் மூலம் உனக்குள்ளே நானிருக்க நீ அருள்புரி வாயாக.

மனம் தூயதாகுமளவு தியானம் தானே வந்தமைகிறது. தியானம் செய்பவன் சன் னிதியிலிருக்கிறன். அதுவே மனிதனுக்குச் சொந்தமான இடம். அதற்கு மேலே அவன் அடைதற்கு ஒன்றுமில்லை. தியானம் பயிலப் பயில மனிதன் புதுப்பிக்கப்படுகி றன்; தூய்மையடைகிறன்; தெய்வ சொருப மாக மாறுகிறன்.

கருவி கரணங்கள் ஒய்ந்த
தொண்டர்களிடத்திலோ நீ வீற்றிருப்பது?

— தாயுமானவர்

தெய்வத்தை மகிழ்வித்தல்

என்னருள் தந்தையே, உன்னைப் புகழ்ந்து பேசுவதைவிட, உனக்கு முழுமனதுடன் பணிவிடை செய்ய நான் கற்றுக்கொள்வேனாக.

இரண்டு தோட்டக்காரர்கள். ஒருவன் வேலை செய்யமாட்டான்; எஜமானனைக் காணுந்தோறும் அவனைப் புகழ்ந்து பேசுவான். மற்றவன் எஜமானனைக் கவனியான்; அவன் இட்ட வேலையை ஓயாது செய்து கொண்டிருப்பான். எஜமானனுக்கு எந்தத் தோட்டக்காரனிடத்து அதிக மகிழ்வுண்டாகும்? கடவுள் எஜமானன். நாம் தோட்டக்காரர்கள். அவனுக்குப் பணிவிடை செய்வது பிறவியின் முதற்பயன்.

எற்றைக்கும் ஏழ்ஏழ்
பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே ஆவோம்
உனக்கேநாம் ஆட்செய்வோம்.
— ஆண்டாள்

சும்மா இரு

**சும்மா இருப்பதுவே சுட்டற்ற பூரணமென்று
எம்மால் அறிதற்கு எளிதோ பராபரமே.**

உறையூற்றிய பால் அசையாது ஓரிடத்தில் வைக்கப் படும்பொழுது அது நல்ல தயிராகிறது. அசையாத நீர்ப்பரப்பின்மீது பொருள்களின் பிம்பம் உள்ளபடி தென்படுகிறது. ஆசையென்னும் காற்றில் அசையாத மனது, உள்ளிருக்கும் ஒண்பொருளைத் தெரிந்து கொள்ளத் தகுதியுடையதாகிறது. சும்மா இருக்கு மளவு அது சுக சொருபமாகிறது.

**சும்மா இருக்கச் சுகம்சுகம்
என்று சுருதியெல்லாம்
அம்மா நிரந்தரஞ் சொல்லவுங்
கேட்டும் அறிவின்றியே
பெம்மான் மௌனி மொழியையுந்
தப்பியென் பேதைமையால்
வெம்மாயக் காட்டில் அலைந்தேன்
அந்தோ! என் விதிவசமே.**

— *தாயுமானவர்*

குணசீலம்

என்னைக் குணசீலனாக்குவதே செம்பொருளினிடத்து நான் சமர்ப்பிக்கும் நிவேதனமாகுக.

நாள் ஏற ஏற யாருடைய மனது படிப்படியாகத் திருந்தியமைகிறதோ அம்மனிதனே மெய் வாழ்வு வாழ்கிறான். மானுடப் பிறவி எடுத்ததன் நோக்கம் தன்னைக் குணவான் ஆக்குதற் பொருட்டேயாம். ஒவ்வொரு செயலும் எண்ணமும் மனிதனை மாற்றியமைத்து வருகிறது. நற்செயலும், நன்மொழியும், நல்லெண்ணமும் சேர்ந்து மனிதனைக் குணவான் ஆக்குகின்றன.

நானேதும் அறியாமே என்னுள் வந்து
நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்.

— அப்பர்

கண்

எனக்குக் கண்ணாய் அமர்ந்துள்ள ஒண் பொருளே, உலகுக்கும் நீ கண்ணாய் அமர்ந் திருப்பதைக் காட்டியருள்வாயாக.

காண உதவுவது கண். அது அறிவை விளக்குகிறது. உள்ளத்தின் பரிபாகம் கண்ணில் ஒளிர்கிறது. இயற்கை யாண்டும் கண்ணுடைத்துள்ளது. கண்ணுடைய பொருளாதலால் அது காலத்தையும், இடத்தையும், செயலையும் உள்ளபடி விளக்குகிறது. இயற்கையின்கண் இலங்கும் அறிவே அதற்குக் கண்ணாகிறது.

கண்ணாய் உலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.
— அப்பர்

பிப்ரவரி 20 மாசி 8

காவலாள்

விவேகம் என்னும் காவலாளைக் கடவுளே, எனக்கு நீ வைத்துவிடுவாயானால் பின்பு வாழ்வில் எனக்கு வழுவேது?

இருள் சூழ்ந்த வீட்டினுள் திருடன் நுழைகிறான். தீபம் ஏற்றிவைத்துள்ள வீட்டினுள் அவன் நுழையான். மனத்தகத்து விவேகம் என்னும் தீபமேற்றிவைக்கவேண்டும். அது நல்ல காவலாள் ஆகிறது. கெட்ட இயல்பு என்னும் திருடன் அத்தகைய உள்ளத்தினுள் வரமாட்டான்.

ஆவித் துணையே அருமருந்தே என்தனைநீ
கூவிஅழைத்து இன்பங் கொடுத்தால்
குறைவாமோ?

— *தாயுமானவர்*

இன்பம்

வெப்பத்துக்குப் பிறப்பிடம் சூரியன். இறைவா, இன்பத்துக்குப் பிறப்பிடம் நீ. உன்னை அணுக அணுக இன்பம் மேலிடுகிறது.

தெவிட்டாத இன்பம் தெய்வம். அவ்வின்பம் உலகப் பொருள் மயமாக மாறுமளவு அது தெவிட்டும் தன்மையுடையதாகிறது. தூய நிலையிலிருக்கும் இன்பம் தெய்வம். அது மாசுபடியும் தன்மையுடையதாகுங்கால் அது உலக இன்பமென்றும், சிற்றின்பமென்றும் பெயர் பெறுகிறது. உலகில் எதையும் சாராதிருக்கும் இன்பம் தெய்வம்.

இன்பநிட்டை எய்தாமல் யாதெனினுஞ்
சென்றுமனந்
துன்புறுதல் வன்பிறவித் துக்கம் பராபரமே.

— தாயுமானவர்

உண்மை

உள்ளத்தில் உறைந்திருப்பது உண்மை. உயிர்க்குயிராய் என் உள்ளத்தில் ஒளிரும் ஈசா, உண்மைப் பொருள் நீயென்று உன்னை நான் உணர்வேனாக.

உள்ளத்தில் உள்ளதை உள்ளபடி விள[illegible]தல் உண்மை. அதை மறைத்தல் பொய்ம்மை. நிலையற்ற உலக விஷயங்களும், நிலைத்த பேருணர்வும் சேர்ந்தே உள்ளத்தின்கண் உள. நிலையற்ற உலக விஷயங்களை உள்ளத்தினின்று நீக்குமளவு நிலையாயுள்ள பேருணர்வு பன்மடங்கு தெளிவுற்றதாய்த் தானே விளங்குகிறது.

உள்ளத்தால் பொய்யாது ஒழுகின்
உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்.

— திருக்குறள்

உள்ளும் புறமும்

எங்கும் நிறைபொருளே, நீ என் உள்ளும் புறமும் ஓயாது ஒளிர்கின்றாய். என் உள்ளத்தினுள் உன்னை நான் உணர நீ அருள் புரிவாயாக.

உள்ளம் ஒழுங்காயிருப்பவர்க்கு உலகெலாம் ஒழுங்குடையதாய்த் தென்படுகிறது. உள்ளம் கேடடைந்தால் உலகமெல்லாம் கேடுடையதாய்க் காட்சி கொடுக்கிறது. உள்ளத்தை ஒழுங்குப்படுத்துதல் ஒன்றே நம் கடமை. உள்ளம் தூயதாகுமளவு புறமும் நமக்குத் தூயதாகத் திகழும்.

அருளானோர்க்கு அகம்புறம் என்று உன்னாத
பூரண ஆனந்தமாகி
இருள்தீர விளங்குபொருள் யாது? அந்தப்
பொருளினையாம் இறைஞ்சி நிற்பாம்.

— தாயுமானவர்

பிப்ரவரி 24 மாசி 12

திரிபுர தகனம்

முப்புரம் எரித்த முழுமுதற் பொருளே, என்பாலுள்ள முப்பாழை எரிக்க அருள் புரிவாயாக.

நனவு, கனவு, சுழுத்தி என்னும் மூன்று அவஸ்தையில் நாம் உழல்கிறோம். இவை மெய்ப்பொருளை ஒருவாறு மறைத்து வைக்கின்றன. இவைகளைக் கடந்த நிலையில் கடவுள் உள்ளார். ஆதலால் அவர் திரிபுர தகனம் செய்தவர் ஆகிறார். நமக்கு ஏற்பட்ட திரிபுரத்தைத் தகனம் செய்வது நமது குறிக்கோள். மூன்று அவஸ்தையிலும் கட்டுப்படாது மனத்தகத்து ஒளிர்கின்ற தெய்வத்தின் துணை கொண்டு அம் முப்பாழ்களைப் பாழ்படுத்த வேண்டும்.

பொய்ச்சார் புரமூன்றும் எய்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி.

— அப்பர்

காயத்ரீ

யார் நம் அறிவைத் தூண்டுகிருரோ அந்தச் சுடர்க்கடவுளின் மேலான ஒளியைத் தியானிப்போமாக.

அறிவைத் தீட்டுதற்கும் அதை வளர்ப்பதற்கும் காயத்ரீ தியானம், காயத்ரீ ஜபம் உற்ற உபாயம். எல்லாச் சமயத்துக்கும் இது பொதுவானது. உணர்ச்சியோடு கூடிய சூரியன் மனதின்கண் மிளிர்வதாக நினைப்பது இதன் கருத்து.

यः யார் **नः** நம்முடைய **धियः** அறிவை **प्रचोदयात्** தூண்டுகிருரோ **तत्** அந்த **देवस्य** சுடருடைய **सवितुः** கடவுளின் **वरेण्यं** மேலான **भर्गः** ஒளியை **धीमहि** தியானிப்போமாக.

ओं तत् सवितुर्वरेण्यं भर्गो देवस्य धीमहि
धियो यो नः प्रचोदयात् ।

ஓம்தத் ஸவிதுர்வரேண்யம் பர்கோதேவஸ்ய தீமஹி
தியோ யோ நः ப்ரசோதயாத்.

சேவை

செம்பொருளே, சேவை செய்வதன் மூலம் உயிர்களோடு நான் நல்லிணக்கம் வைத்து, அவ்விணக்கம் நிலைத்திருக்கச் செய்வேனாக.

சித்தசுத்தி உண்டுபண்ணுவது சேவை. அஹங்காரத்தை அகற்றுவது சேவை. ஜீவ போதத்தை ஒடுக்குவது சேவை. எவ்வுயிரையும் தன்னுயிராய்ப் பார்க்கும்படி செய்வது சேவை. பரபோதத்தை வளர்ப்பது சேவை. பணிவிடை பண்ணுபவன் வள்ளல் ஆகிறான். அவனுடைய வாழ்வைப் பெருவாழ்வாக அது மாற்றுகிறது.

அன்பர்பணி செய்யஎனை
ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந்து
எய்தும் பராபரமே.

— தாயுமானவர்

தூய்மை

சுத்த ஜலத்தை சுத்த ஜலத்தில் சேர்ப்பது போன்று என்னை நீ உன்னில் கலப்பதற்கேற்ற தூய்மையை எனக்கு நல்குவாயாக.

மனம் தூயதாகுமளவு அது தெளிவடைகிறது. பொருளை உள்ளபடி காணும் வல்லமை அதற்கு வருகிறது. எதையும் சாதிக்க வல்ல ஆற்றலும் தூய்மையிலிருந்து வருகிறது. மலரிலிருந்து மணம் கமழ்வது போன்று தூய்மையினின்று இன்பமும், இனிமையும் பொலிகின்றன. தெய்விகம் என்பது தூய்மையிலுள்ளது.

தூய அறிவான சுகரூப சோதிதன்பால்
தீயில் இரும்பென்னத் திகழுநாள் எந்நாளோ ?

— தாயுமானவர்

பிப்ரவரி 28 மாசி 16

சாந்தம்

உள்ளக் கொதிப்படங்கி, நான் சாந்தத்தை சதா சார்ந்திருக்க அண்ணலே, நீ அருள் புரிவாயாக.

விலங்குத் தன்மை தாண்டவமாடிக்கொண்டிருக்கும் போது மனிதன் அமைதிக்கு அருகன் ஆகமாட்டான். விலங்குத் தன்மையில் வெறுப்பு ஏற்படுவது அமைதிக்கு முதற்படியாகும். மேன்மையை நாடுமளவு சாந்தம் தானே வந்தமைகிறது. அத்தகைய நாட்டத்தைத் திரும்பத் திரும்பப் புதுப்பித்தல் வேண்டும். சாந்தத்தை மனதால் கிரகித்தால் பிறகு சாந்தத்தை வாழ்வில் நிலைத்திருக்கும்படி அமைக்கலாம்.

துரியநிறை சாந்த தேவதையாம் உனக்கே
தொழும்பன் அன்பு அபிஷேகநீர்.

— தாயுமானவர்

நைந்துருகல்

அத்தா, உன்னை நான் அடைதல் பொருட்டு நைந்துருக வல்லவன் ஆவேனானால் பின்பு உன்னை நான் அடைந்தவன் ஆய்விடுவேன்.

மனிதன் எதன்பொருட்டு முயலுகிறானோ அதை அடைகிறான். நாம் உலகப் பொருள்களுக்காகக் குடம் குடமாகக் கண்ணீர் சிந்துவதுண்டு. அது கடவுளுக்காகவென்று மாற வேண்டும். நாட்டம் பெரியதாகுமளவு அடையப்படும் பொருளும் பெரியதாகும். மனிதன் என்னவாகப் போகிறான் என்பதற்கு முன் அறிகுறி அவனது முயற்சி. கடவுளைக் குறித்து நைந்துருகுபவன் கடவுளை அடைய ஏற்பாடு செய்து விட்டான்.

உருகி நினைவார்தம் முள்ளாய் போற்றி
ஊனந் தவிர்க்கும் பிரானே போற்றி

— அப்பர்

தருணம்

தேவே, உன் சந்நிதி சேர்வதற்குத் தகாத வேளை யென்பதொன்றில்லை. காலமெல்லாம் அதற்குற்ற தருணமாயிருக்க, நான் வீணே காத்திருப்பது எதற்காக?

பரமபதத்தின் வாயில் யாண்டும் திறந்து வைக்கப் பட்டுள்ளது. உள்ளே செல்லலாகாதென்று தடுப்பார் யாருமில்லை. நமது துர்புத்தி ஆங்குப் பிரவேசிக்கமாட்டேனென்கிறது. விஷயத்தில் பற்றுவைத்திருக்குமளவு அது துர்புத்தியாகவே இருக்கும். துர்புத்தியுடையார் யாரும் பரமபதத்துக்குத் தகுதியுடையவர் ஆகார். புனிதம் பொலியும் பெருவாழ்வே பரமபதம் எனப்படுகிறது. அதை ஈண்டு, இப்பொழுதே பெறலாம்.

**காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர்!
அகண்டா காரசிவ, போகமெனும் பேரின்ப
வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய்,
ஏக வுருவாய்க் கிடக்குதையோ! இன்புற்றிட
நாம் இனியெடுத்த, தேகம்விழுமுன்
புசிப்பதற்குச் சேர வாரும் சகத்தீரே!**

— தாயுமானவர்

நல்லாரிணக்கம்

தீயைச் சார்ந்த இரும்பு தீ மயமாகிறது. நல்லாரைச் சார்ந்திருப்பவர்க்கு நலமெலாம் தானே வந்தமைகிறது. நலமுடையானே, எனக்கு நல்லாரிணக்கம் நல்குவாயாக.

ஒரு நூலின் இழைகளைச் சிறுவன் ஒருவன் துண்டு துண்டாக அறுத்துவிடுகிறான். அவைகளை முறுக்கி வடமாக்கினால் அதன் வடிவு யானையைக் கட்ட வல்லதாகிறது. முறுக்கிய கயிறு போன்றது நல்லாரிணக்கம். ஒற்றுமையும், உறுதியும் அதினின்று வருகின்றன. நெறி பிறழாது நல்லாரிணக்கம் நம்மைக் காக்கின்றது.

குற்றங் குறையக் குணமேலிட அருளை
உற்றவரே ஆவிக்கு உறவாம் பராபரமே.

— தாயுமானவர்

விலை

பொருளுக்கேற்ற விலை கொடுத்தாக வேண்டும். இறைவா, உன்னை நான் அடைதற்கு என்னை நான் என்று ஈடு கொடுக்க இசைவேனே!

ஒருபடி மேலேறக் கீழே இருப்பதை விட்டாக வேண்டும். மேலானதைப் பெறக் கீழானதைத் தள்ளவேண்டும். சிறுமையை அகற்றியவர்க்குப் பெருமை கிட்டுகிறது. அக்ஞானத்தை விட்டவர்க்கு ஞானம் உதயமாகிறது. சுயநலத்தைப் போக்கினவனுக்கு எல்லாம் சொந்தம். தான், தனது என்பதை விலையாகச் செலுத்தினல் தெய்விகம் என்னும் ஒப்பற்றதைப் பெறலாம்.

தந்தது உன்தன்னைக் கொண்டது என்தன்னைச்
சங்கரா ! ஆர்கொலோ சதுரர் ?
அந்தமொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றதொன்று என்பால்!

— மாணிக்கவாசகர்

மதிப்பிடுதல்

உயர்ந்ததாகக் கருதும் ஒன்றை உலகம் நாடுகிறது. என் உயிருக்குயிராகிய பெருந்தகையே, எல்லாவற்றிலும் பெரியதாக உன்னை நான் மதிப்பிடும் பான்மையை எனக்கு நீ நல்குவாயாக.

மனதில் எண்ணிப்பார்த்து மனிதன் கொடுக்கும் மதிப்புக்கும், வேகத்துக்கும் ஏற்றவாறே வெளியுலகில் நிகழும் வேலைகள் விரைவு பெறுகின்றன. இன்ப துன்பங்களை உண்டுபண்ணும் நிகழ்ச்சிகளும் பொருள்களும் வெளியுலகில் இல்லை. மனது உண்டுபண்ணுகிற இன்பதுன்பம் வெளியுலகில் இருப்பவை போன்று தென்படுகின்றன. மனது கொடுக்கிற மதிப்புக்கு மேல் புறவுலகுக்கு மதிப்பில்லை.

வாக்கால் மனத்தால்
மதிப்பரியாய்! நின்னருளை
நோக்காமல் நோக்கி நிற்கும்
நுண்ணறிவு காண்பேனோ?

— *தாயுமானவர்*

மனதை ஒழுங்கு படுத்துதல்

உலகையெல்லாம் ஒழுங்குபடுத்த முயலும் நான், என்னையே ஒழுங்குப்படுத்த யாண்டும் ஊக்கம் கொள்வேனாக.

தன்பாலுள்ள குற்றங்களையும் குறைகளையும் மறைத்துவைக்கும் பான்மை மனிதனிடத்துண்டு. அக்கேடுகளை யாராவது வெளிப்படுத்தினால் அதை அவன் சிறிதும் சகிப்பதில்லை. அத்தகையவனால் ஆசைகளை வெல்ல முடியாது. மெய்வழிச் செல்லும் சீர்மையும் அவனிடத்தில்லை. தனது சிறுமைகளைத் தயங்காது பிறர் ஆராய்ச்சிக்கு உட்படுத்துபவனே அவைகளைக் களைய வல்லவனாகிறான்.

வஞ்சனையும் பொய்யும் உள்ளே
வைத்துஅழுக்கா றுயுள றாம்
நெஞ்சனுக்கும் உண்டோ
நெறிதான் பராபரமே.

— தாயுமானவர்

தோல்வி

இமயமலையில் பதரிகாச்ரமம் போகின்றவர்கள் மேட்டில் ஏறுவதுபோன்று பள்ளத்திலும்இறங்கியாகவேண்டும். அருட்தேவே, உன்னை நாடிவரும் எனக்குத் தோல்விகள் பல உண்டாவது இயல்பு.

தோல்வியைக் குறித்து மனமே, நீ துயரடையாதே. தோல்வியின்று நீ கற்றுக்கொள்ளவேண்டிய தனிப் பாடம் ஒன்றுண்டு. தோல்வியினின்று நீ பெறுகிற ஞானத்தையும் நல்லறிவையும் வேறு யாருமே உனக்கு வழங்கமுடியாது. தோல்வியை துருவியாராய்ந்தால், உன்னுடைய வீழ்ச்சியை நீ விசாரித்துப் பார்த்தால், மெய்யறிவு என்னும் பொக்கிஷத்தை அதனுள் நீ காண்பாய். இப்பொழுது தோல்வியாகத் தென்படுவது நாளை வரும் வெற்றிக்கு வித்தாகும்.

**பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.**

— *திருக்குறள்*

பக்தி

பெம்மானே, என்னை உன்னோடு பிணைத்து வைப்பது பக்தி. பக்தியைப் பெறுவதும் உன்னைப் பெறுவதும் ஒன்றே. பக்தியை நீ எனக்கு உவந்தளிப்பாயாக.

தனக்கென்று எதையும் கேட்கும் தன்மை பக்தனுக்கில்லை. தன்னிடத்திருப்பதையெல்லாம் அவன் வழங்குகிறான்; உயிர்களுக்கு அன்பை வழங்குகிறான்; தெய்வத்துக்குத் தன்னையே வழங்குகிறான். அனைத்தையும் அவன் கடவுளுக்கு எடுத்துக்கொடுத்துக் கடவுளையே அவன் கடன்காரனுக்கிவிடுகிறான்.

பக்தி வலையில் படுவோன் காண்க.

— மாணிக்கவாசகர்

துவிஜன்

தேவே, உன்னை நான் அடைய விரும்பும் பொழுதே புதியதொரு பிறப்பெடுத்தவன் ஆகிறேன். இருபிறப்பாளன் என்று என்னை அப்பொழுது இயம்புவது பொருந்தும்.

ஓரிடத்தில் புதிய மாளிகை கட்ட விரும்பினால் அங்கிருக்கும் பழைய குடிசையை அழித்தாகவேண்டும். மனத்தினுள்ளேயுள்ள கோணலை நிமிர்த்துதலால் நேர்மை வந்தமைகிறது. சிற்றியல்பை ஒழித்தால் பேரியல்பு பிறக்கிறது. முன்கோபமும், பதைபதைப்பும், பொறாமையும், தற்பெருமையும், கசடும் நிறைந்த பழைய மனிதன் போனால் அவனுக்குப் பதிலாக அமைதியும் பொறையும், பணிவும், தூய்மையும் நிறைந்த புதிய மனிதனாக அவன் தோன்றுவான். இருபிறப்பு என்பது இதுவே.

தன்னை அறிந்தால் தலைவன்மேல் பற்றலது
பின்னையொரு பற்றும்உண்டோ பேசாய்
பராபரமே.

— தாயுமானவர்

மார்ச்சு 9 மாசி 26

ஆயத்தம்

ஓய்வில்லாது ஓடும் காலம் நாள்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது. நலத்தின் பொருட்டு என்னை நான் அங்ஙனம் ஆயத்தப்படுத்துவேனாக.

தொடர்ந்து செய்யும் ஆயத்தந்தான் பிறகு காரிய சித்தியாக வடிவெடுக்கிறது. புஷ்பம் ஒன்று நிஷ்காரணமாய் வந்து விடவில்லை. காரண காரியத்தின் நிறைவு மலராக வடிவெடுக்கிறது. தொடுத்த கருமத்தை வெறும் விருப்பத்தால் நிறைவேற்றி விடமுடியாது. முறையாக அதற்கு முயலவேண்டும். நன்கு முடிக்கப்பெற்ற ஒவ்வொரு சிறுசெயலும் பெரிய செயலுக்கு மனிதனை ஆயத்தப் படுத்துகிறது.

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு.

— *திருக்குறள்*

கண்ணீர்

களிமண்ணைத் தண்ணீர் பக்குவப்படுத்துகிறது. என் உள்ளத்தைக் கண்ணீர் பக்குவப்படுத்துவதாகுக.

மண்ணில் விளைவை உண்டுபண்ண மழை பெய்கிறது. துன்பக்கண்ணீர் உள்ளத்தைத் திருத்திச் செப்பனிடுகிறது. கார்மேகம் சூழ்வது பூமியைக் குளிரச் செய்வதற்காக. நனைந்து குளிர்ந்த பூமியினின்று விதை முளைக்கிறது. துயரம் என்னும் மேகத்திலும் மழையிலும் மூடப்பெற்ற உள்ளம் ஞான விளைவுக்கு ஏற்றதாகிறது. விசாரம் உள்ளத்தை உழுகிறது. துன்பம் அதை மிருதுவாக்குகிறது. பின்பு ஞானோதயம் உண்டாகிறது.

துன்பக்கண்ணீரில் துளைந்தேற்குன் ஆனந்த
இன்பக்கண்ணீர் வருவது எந்நாள் பராபரமே.

— தாயுமானவர்

மார்ச்சு 11 மாசி 28

கள்ளாமை

யாண்டும் எனக்குரிய பொருள் அண்ணல், நீ ஒருவனே. வேறுபொருளை நாடுவது களவு. உன்னையே நாடுவது கள்ளாமை.

நல்ல அரசாங்கம் களவுக்கு இடம் தருகிறதில்லை. இயற்கையின் ஆட்சி களவுக்கேற்ற தண்டனையை ஓயாது விதிக்கிறது. உழைக்காது உண்பவன் கள்ளன். அவனுக்கு ஜீரணமின்மை என்ற தண்டனை வருகிறது. மிகைபட உண்பவன் கள்ளன். அஜீரணம் என்னும் தண்டனை அவனுக்கு வருகிறது. பயன் படாது பொருளைச் சேகரித்து அடைத்து வைத்திருப்பவர், மனம் குறுகுதல் என்னும் நஷ்டத்துக்கு ஆளாகின்றனர்.

கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தேள் உலகு.

— திருக்குறள்

தொல் வினை

தொலையாத தொல்வினையைத் தொலைத்தற்குத் தொல்லோய், உன்னைத் தொழுதல் ஒன்றே உற்ற உபாயம்.

வித்தினின்று செடி முளைக்கிறது. செடிக்குக் காரணம் வித்து. பிறகு செடி வளர்ந்து காய்த்து விதையை உண்டுபண்ணுகிறது. இப்பொழுது வித்துக்குக்காரணம் செடி. இங்ஙனம் ஓய்வில்லாது வினைப்பயன் போய்க் கொண்டிருக்கிறது. விதையை வறுத்து விட்டால் அது முளைக்காது. மனிதன் தெய்வ உணர்ச்சியில் ஊறிவிட்டால் வினை அற்றுப் போய் விடுகிறது. .

பண்டை வினைகள் அறுப்பாய் போற்றி
பாரோர் விண்ணோத்தப் படுவாய் போற்றி.

— அப்பர்

ஹிருதய குகை

குகனே, எனையாள் நாயகனே, உனக்கு என்றே அமைந்துள்ளது என்னுடைய ஹிருதயம் என்னும் குகை. நீ அதை விட்டு அகலாது அமர்ந்திருப்பாயாக.

புயல்காற்று எவ்வளவு வேகமாய் அடித்தாலும் மலை உச்சியிலுள்ள குகையில் அது நுழையாது. ஆங்கு அமைதி நிலவுகிறது. அதனுள் ஏற்றிவைக்கப்பட்டிருக்கும் விளக்கு அசையாது எரிகிறது. புற உலகில் போராட்டம் வேண்டியவாறு நிகழுக. தாக்குதலும் தூற்றுதலும் அதன் போக்காகும். ஆனால் மனத்தினுள்ளே அமைதியும் இனிமையும் ஓங்குக. வெளியே உள்ள கொந்தளிப்பு உள்ளே உறையும் சாந்தத்தைக் கலைக்கலாகாது.

படிப்பற்றுக் கேள்வியற்றுப்
பற்றற்றுச் சிந்தைத்
துடிப்பற்றார்க் கன்றோ
சுகங்காண் பராபரமே.

— தாயுமானவர்

வேகம்

தேங்கிய தெளிநீரில் அடிப்பரப்பு உள்ள படி தென்படுகிறது. வேகம் தாழ்ந்து ஓய்ந்த மனதில் ஒண்பொருளே, நீ நன்கு ஒளிர்கின்றாய்.

சூருவளியொன்று செடிகொடிகளை நிலைகுலையச் செய்துவிடுகிறது. கொந்தளிப்பில் அவைகள் காயம் பட்டவை போன்று ஆகிவிடுகின்றன. பின்பு அமைதி நிலவும்போது அவை யாவும் சிகிச்சை பெறும் சாந்தத்தில் அமைந்திருக்கின்றன. மண், தூசி முதலியவைகளுக்கும் ஆறுதலடையும் அமைதியுண்டாகிறது. அங்ஙனம் மனக்கொந்தளிப்பு அடங்கியபின் தன் பேரியல்பில் நிலைத்திருக்கும் பாங்கு அதற்கு வருகிறது. பொருள்களின் தாரதம்மியம் மனதுக்கு அப்பொழுது விளங்குகிறது. நல்லறிவை வளர்ப்பதற்கு அதுவே தருணம்.

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க.

— மாணிக்கவாசகர்

மார்ச் 15 பங்குனி 2

குடியிருத்தல்

நல்ல மனம் என்னும் வீட்டை நான் கட்டி வைத்திருக்கிறேன். நாதா, நீ நீங்காது அதனுள் குடியிருப்பாயாக.

ஒவ்வாத இருவர் ஒரே வீட்டில் குடியிருக்க முடியாது. மனம் என்னும் மனையில் யாண்டும் நலமே குடியிருப்பதாகுக. நல்ல எண்ணம், நல்லபேச்சு, நல்ல செயல்-இவைகளே அல்லும் பகலும் அதில் வாசம் செய்வனவாகுக. அத்தகைய இல்லத்தில் இன்பம் நிறைந்திருக்கும்.கேடு என்னும் கீழோன் அவ்வீட்டினுள் நுழையான். கேடுடைய சிந்தையும் சொல்லும் செயலும் இல்லாதவிடத்துத் துன்பம் இல்லை. பேரின்பமே ஆங்குப் பொலியும்.

நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்
நினையாது ஒருபோதும் இருந்தறியேன்.

— அப்பர்

மார்ச்சு 16 பங்குனி 3

அறவாழி-தர்ம சக்கரம்

அறவாழி யாண்டும் ஆட்சி புரிகிறது. அது ஆதியந்தமில்லாத ஆட்சி. அப்பேரா திக்கத்தில் யான் குடிமைகொள்வேனாக.

நாளை நமக்கென்னவரும் என்ற கவலை வேண்டாம். இன்று நாம் செய்யவேண்டிய தைச் செவ்வனே செய்ய வேண்டும். நம்பால் உள்ள குற்றத்தை அப்போதைக்கப்போது களைந்து குணத்தைப் பெருக்குவது நம் கடமை. நலத்தினின்று தீதோ, தீதினின்று நலமோ ஒருநாளும் நிகழ்வதில்லை. தர்ம சக்கரத்தின் இயக்கம் அத்தகையது.

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
பிறவாழி நீந்தல்அரிது.

— திருக்குறள்

வருந்துதல்

நிலையற்ற உலகப் பொருள்கள் வேண்டு மென்று வருந்துகிற நான், நிலையாய நின் மலனை அடையப்பெற வேண்டுமென்று வருந்துநாள் எந்நாளோ?

நீ உள்ளம் துடித்துக் கண்ணீர் சிந்தும் பொழுது உலகத்தின் துன்பத்தை நினைத் துப்பார். துன்பம் உன்னைத் தாக்கும் பொழுது அது எல்லோரையும் தாக்குகிறது என்று நினை. யாரும் அதினின்று தப்பிக்க முடியாது. இயற்கை படும் துன்பத்தின் ஒரு சிறு பகுதி உன்னை வந்து சார்கிறது. வருத் தப்படுகின்றவனுக்கே பிறர்பால் அனுதாபம் உண்டாகிறது.

எம்மானே! உன்அருள் பெறுநாள்
என்றென்றே வருந்துவனே.

— மாணிக்கவாசகர்

ஆலயம்

என்னுடையதென்று அபிமானிக்கும் இவ்வுடலை ஈசா, உனது ஆலயமெனக்கருதி நான் அரும்பணி செய்துகிடப்பேனுக.

குடியிருக்கும் ஆளை முன்னிட்டு இடத்துக்கு மதிப்பு வருகிறது. இராமன் காட்டில் இருந்தபோது காடு அயோத்தியானது; வீட்டில் இருந்தபோது வீடு அயோத்தியானது. நமது உடலில் ஜீவபோதம் தலையெடுக்கும் போது அது வெறுப்புக்குரியது. பரபோதம் தலையெடுக்கும்போது அதுபோற்றுதற்குரிய ஆலயமாகிறது.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானுர்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன்சிவலிங்கம்
கள்ளப் புலன்ஐந்துங் காளா மணிவிளக்கே.

— திருமந்திரம்

ஜபம்

இறையே, உன்னிலும் பெரியது உன் நாமம். அதை உச்சரித்தவர்களெல்லாம் உன்னை அடையப் பெற்றிருக்கின்றனர். நானும் அதை உச்சரிப்பேனாக.

நாம் காணாத ஒரு மனிதர் வெளிநாட்டில் இருக்கிறார் என்றாலும், அவர் பெயரும் விலாசமும் தெரிந்தால் கடிதம் எழுதி அவரோடு தொடர்வு வைக்கலாம். கடவுளை நாம் காணாதவர் என்றாலும் அவரது நாமத்தை உச்சரித்து நாம் அவரோடு இணக்கம் பண்ணிக் கொள்ளலாம். திரும்பத் திரும்ப அவரது பெயரை மனதுக்குள்ளேயே சொல்லுவது ஜபம்.

நலந்தரும்சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்

— திருமங்கையாழ்வார்

சிவ சிவ என்னச் சிவகதி தானே.

— திருமந்திரம்

மார்ச்சு 20 பங்குனி 7

ஞானக்கண்

கண்ணில்லாக் கழுகு வெறும் சிறகு கொண்டு பறக்கமுடியாது. ஞானக்கண்ணில்லாத கருமம் அத்தகையது. நல்லறிவே, நீ எனக்கு ஞானக்கண்ணை நல்குவாயாக.

உடலுக்கு ஒளி தருவது ஞானக்கண். அது சுடர்விட்டு ஒளிரும்போது உடலெங்கும் ஆத்மஜோதி ஒளிர்கிறது. ஞானக் கண்ணில்லாதவர்க்கு உடல் முழுதும் இருள் சூழ்ந்ததாகிவிடுகிறது.

கண்மேலுங் கண்ணொன்றுடையாய்
போற்றி
கயிலைமலையானே போற்றி போற்றி.

— அப்பர்

மனபரிபாகம்

எந்தையே, எவ்வளவுக்கெவ்வளவு என் சிந்தை பரிபாகமடைகிறதோ அவ்வளவுக் கவ்வளவு நான் உனக்குரியவன் ஆகிறேன். நீ எனக்குரியவன் ஆகிறாய்.

மனபரிபாகத்துக்கு ஏற்றவாறு வாழ்வில் மேன்மையும் கீழ்மையும் வந்தமைகின்றன. உள்ளத்தில் உள்ள உணர்ச்சிக்கு ஒப்ப வெளியுலக வாழ்வு வடிவெடுக்கிறது. சூழ்நிலை எத்தகையதானாலும் நல்ல மனமுடையார் அதை அனுகூலமானதாக்குகின்றனர். நரகத்தைச்சுவர்க்கமாக மாற்றுவதும் மனது; சுவர்க்கத்தை நரகமாக மாற்றுவதும் மனது. பண்பட்ட மனதும் சீரிய வாழ்வும் ஒன்றே.

நெஞ்சகமே கோயில்நினைவே சுகந்தம்
அன்பே
மஞ்சனநீர்பூசைகொள்ள வாராய் பராபரமே.

— தாயுமானவர்

மார்ச்சு 22 பங்குனி 9

நாட்டம்

நின்மலா, நின்னையன்றி நான் வேறொன்றை நாடிடேன்.

நாடுபவனே, நீ எதை நாடுகின்றாய் என்று அறிந்து பிறகு நாடு. எதை நீ பின்பற்றுகிறாயோ அது கானல் நீர்போன்று பின்வாங்குகிறது என்பதையும் உன் எண்ணத்தை அது நிறைவேற்றாது என்பதையும் அறிகிறாயா! இவ்வுலகம் பேரின்பத்தை ஒருநாளும் கொடாது. மாலையில் மலர்ந்த மலர்போன்று இளமையானது வாடுகிறது. சிதறடைந்த மேகம்போன்று வலிவு குன்றுகிறது. உடலழகு நமனுக்கு இரையாகிறது. உள்ளிருக்கும் ஆத்மசொருபம் ஒன்றே நிலையானது.

நடக்கினும் ஓடினும் நிற்கினும்
வேறொரு நாட்டமின்றிக்
கிடக்கினுஞ் செவ்விது இருக்கினும்
நல்லருட் கேள்வியிலே
தொடக்கும்என் நெஞ்சம் மனமற்ற
பூரணத் தொட்டிக்குளே
முடக்குவன் யான்பர மானந்த
நித்திரை மூடிடுமே. — தாயுமானவர்

மார்ச்சு 23 பங்குனி 10

ஆத்மன்

சித்தமிசை குடிகொண்ட பேருணர்வே,
நான் போற்றும் பெரும்பொருள் நீ ஒன்றே.

பெரிய லக்ஷியத்துக்கேற்ற பெருவாழ்வு இப்பூவுலகில் வாழவேண்டும். அனைவரிடத்தும் அன்பு செலுத்து; ஏனென்றால் ஆத்மன் அனைவர்க்கும் பொதுவானது. தன்னலங்கருதாது அனைவருக்கும் அரும்பணியாற்று; ஏனென்றால் ஆத்மா ஒன்றே உளது. போகத்தையும், ஆசையையும், சினத்தையும் அகற்று; ஏனென்றால் இவை ஆத்மசொரூபத்தை மறைக்கின்றன. பேரும், புகழும், ஆதிக்கமும், செல்வமும் விரும்பப்படும் பொருள்களல்ல. ஏனென்றால் இவை ஆத்மனை அடைதற்கு இடைஞ்சல்களாம்.

துகளறு சங்கற்ப விகற்பங்கள் எல்லாந்
தோயாத அறிவாகிச் சுத்தமாகி
நிகரில் பசுபதியான பொருளை நாடி
நெட்டுயிர்த்துப் பேரன்பால் நினைதல்
செய்வாம்.

— தாயுமானவர்

கணபதி பூஜை

இயற்கைத் தெய்வமே, நீ புனித சொரூபம். உனது புனிதத்தில் பங்கெடுத்துக்கொள்பவர்க்கு விக்கினமில்லை. விக்கினமில்லா விமலவாழ்வை எனக்கு வகுத்தளிப்பாயாக.

கீழ்மையை நாடுபவர் கேடு அடைகின்றனர். மேன்மையை மேவுபவர் மாண்புறுகின்றனர். முறையாக வாழ்பவர்க்கு நோய் தேய்கிறது. இயற்கையின் நன்னெறியைக் கடைப்பிடிப்பவரை இயற்கை தாங்கிக்கொள்கிறது. இயற்கைத் தெய்வத்தின் துணையைப் பெறுதல் விக்கினேசுவர பூஜையாம்.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

— ஔவையார்

வெற்றிக்கு வித்து

என்னை வெல்ல முயலும் சூழ்நிலையை வெல்லுதற்கான வலிவையும் அறிவையும் அண்ணலே, எனக்கு நீ அளிப்பாயாக.

இடுக்கண்களும் இன்னல்களும் பெரியவைகளாகத் தோன்றி நம்மைத் துன்புறுத்தும் போது என்ன செய்வதென்று திகைக்கிறோம். ஆழ்ந்து எண்ணுதற்கும், முனைந்து முயலுதற்கும் அதுவே உற்ற தருணம். நாம் மீளமுடியாத முட்டுக்கட்டையை இயற்கை அன்னை ஒருநாளும் நம்மீது சுமத்துவதில்லை. ஒவ்வோர் இடுக்கணையும் அகற்றுதற்கு உற்றதோர் உபாய முண்டு. பெரிய சோதனை பேராற்றலை உள்ளத்தி னின்று வெளிப்படுத்துகிறது. அதன் துணைகொண்டு அடைந்த வெற்றி பின்பு பெருமகிழ்வாக வடிவெடுக் கிறது.

தோல்விக்குத்துணை சோர்வும் சோம்பலும்;
வெற்றிக்கு வித்து வீரமும் தீரமும்.

தேடுமிடம்

உலகெலாம் தேடியும் தெரிதற்கரிய தெள்ளமுதே, உள்ளத்தின்கண் உன்னை நான் உள்கக் கற்றுக்கொள்வேனாக.

பலம் வேண்டுபவர் உடலிலிருந்து அதைப் பெறவேண்டும். பயிற்சியும் உழைப்பும் அதற்குற்ற உபாயம். பயில்வான்கள் ஆனவர் எல்லாரும் அதைத்தான் செய்தனர். அறிவு வேண்டுபவர் அறிவையே தீட்டிக்கொண்டிருக்கவேண்டும். தீட்டுமளவு அறிவு தெளிவு பெறும். பேரமைதி வேண்டுபவர் அதை உள்ளத்தினுள்ளே தேடிப் பார்ப்பார்களாக. ஒவ்வொன்றும் இருக்குமிடம் தெரிந்து தேடுவது தக்காரது செயல்.

எத்தான் மறவாதே நினைக்கின்றேன்
மனத்துன்னை வைத்தாய்.

— சுந்தரர்

உபரதி

குணம் குறியெல்லாம் கடந்த பேருணர்வே, கூத்தாடும் எனது மனது குவலயத்தின் கூத்தைப் பார்த்துப் பராமுகமாயிருக்கக் கற்றுக்கொள்வதாகுக.

கேடுகளைக் கண்டு சோர்வடைகின்றவன், ஆவல் கொள்கின்றவன், தொந்தரவடைகின்றவன், எரிச்சல் எழப்பெறுபவன் அக்கேடுகளைக் களையமாட்டான். எரியும் தீயில் எண்ணெய் வார்த்தாற்போன்று அவன் இன்னும் அதிகக் கேடுகளில் உழல்வான். ஆனால் சஞ்சலப்படாத மனதின்முன் சிறுமைகளும் கேடுகளும் தமது வலிவை இழக்கின்றன. எதற்கும் அசையாது மனது உபரதி பெற்றிருப்பதே கேட்டைக் களைதற்கு உற்ற உபாயம்.

வாதுக்கு வந்தெதிர்த்த மல்லரைப்போல்
பாழ்த்தமனம்
ஏதுக்குக் கூத்தாடு தெந்தாய் பராபரமே.

— தாயுமானவர்

மாற்றியமைத்தல்

உலகம் யாவையும் எனக்கேற்றபடி மாற்ற வேண்டுமென்று விரும்புகிற நான், என் மனதை உனக்கேற்றபடி மாற்றி விடுவேனுல், பின்பு விமலா, எனக்கு வேறென்ன வேண்டும்?

எல்லார்க்கும் ஏற்படும் மயக்கம் எதுவெனில் இன்னும் கொஞ்சம் பணமிருந்தால், அதிகம் அவகாசம் கிடைத்தால், அந்த மனிதனது ஆற்றல் எனக்கிருந்தால், இந்த மனிதனது வாய்ப்புகள் எனக்குக் கிட்டினுல், மக்களது ஆதரவு இன்னும் அதிகம் கிடைத்தால், சூழ்நிலை அனுகூலமானுல் — இப்படியெல்லாம் எண்ணி ஏங்கியிருப்பதேயாம். இத்தகைய எண்ணங்களால் அதிருப்தியே வளர்கிறது. இதற்கு மாருக மனதை நல்ல மனதாக மாற்றிக்கொண்டால் அது எதையும் நல்லதாக மாற்றிவிடும்.

आशिष्ठो दृढिष्ठो बलिष्ठः

ஆசிஷ்டோ த்ருடிஷ்டோ பலிஷ்ட:

ஒழுக்கமும் அறிவும் பலமும் உடையவனுக்கு எல்லாம் உண்டு.

— தைத்திரியோபநிஷத்

அகல்யை

ஒண்பொருளே, உன்னைச் சார்ந்திருப்பது ஒன்றே உன்னை அடைதற்கு உற்ற உபாயம்.

அறியாமைக்குச் சட்டம் ஆதரவு கொடுப்பதில்லை. அறியாமையால் அகல்யை ஒழுக்கம் தவறினள். அதன் பயனாக அவள் கல்லாய்ச் சமைக்கப்பட்டாள்; கல் நிலையில் நெடுநாள் இருந்தாள். பின்பு இராமன் திருவடி தீண்டியதும் அவள் பெண் ஆனாள். அறியாமையினால் நாம் நமது தெய்வப்பெற்றியை இழந்திருக்கிறோம். அதை இழந்து எவ்வளவு காலமாயிற்று என்பது நமக்குத்தெரியாது. தெய்வ சிந்தனையில் தீண்டப்பெறுவோமானால் திரும்பவும் தெய்வத்தன்மையை நாம் பெறுவோம்.

வாழாது வாழவே இராமனடியால் சிலையும்
மடமங்கை யாகவிலையோ?

— தாயுமானவர்

உயர்வு

என் தகுதிக்கேற்ற உயர்வை அண்ணல், நீ எனக்கு அளிக்கின்ருய். என்னை நான் உயர்நிலைக்கு உயர்த்தாதது என்னே!

உயர்வைத் தேடுகிறவனுக்கு உயர்வு வருவதில்லை. உயர்வுக்குத் தகுதியுடையவன் ஆகின்றவனுக்கு உயர்வு வருகிறது. நல்லவன் ஆகின்றவனுக்கு உயர்வு தானே வருகிறது. காய்ச்சிய பாலில் ஆடை தானே மேலெழுகிறது. மக்களுள் நல்லார்க்கு உயர்வு அங்ஙனம் வந்தமைகிறது.

அல்லும் பகலும் அகண்டவடிவே! உனை நான்
புல்லும் படிபெனக்கோர் போதனைதான்
இல்லையோ?

— தாயுமானவர்

கால அளவை

கால அளவையைக் கருத்தில் வாங்காது, என் கடமையைக் கரவாது நான் செய்து வருவேனாக.

காலத்தைப் பொருட்படுத்தாது இயற்கை தன் கடனாற்றுகிறது. வால் நக்ஷத்திரம் ஒன்று ஒரு தடவை வட்டமிடுதற்கு ஓராயிரம் ஆண்டு எடுத்துக்கொள்ளலாம். கரையிலுள்ள கல்லைத் தேய்ப்பதற்குக் கடல் பதினாயிரம் ஆண்டுகள் எடுத்துக்கொள்ளலாம். எத்தனை காலம் என்று ஏங்கியிருப்பது இயற்கையினிடத்தில்லை. மனிதன் மட்டும் தனது அற்பகாரியம் அதிவிரைவில் நிறைவேறவேண்டுமென்று ஆத்திரப் படுவது எதற்காக?

காலமொரு மூன்றும் கருத்திலுணர்ந்தாலும் அதை
ஞாலந்தனக்குரையார் நல்லோர் பராபரமே.

— தாயுமானவர்

காணுதல்

கண்ணுதலே, நான் யாண்டும் காண்பது உன்னையே யன்றி வேறொன்றையுமன்று. உன்னைக் காண்பதற்கிடையில் காணாதவன் போன்று கலங்கி நிற்கிறேன்.

காணும் தன்மை எல்லா உயிர்களுக்குமுண்டு. வெளிச்சமிருக்கும் பக்கம் செடி கிளைகளை விடுவதே அது காணவல்லது என்பதற்குச் சான்று. கண்டு கொண்டிருக்கும் நாம், காண விரும்பும் பொருளை உள்ளபடி காணுதற்கான பரிபாகம் அடையவேண்டும். அப்பொழுது காண்பதெல்லாம் கடவுளே.

உடம்பெனும் மனைஅ கத்துள்
உள்ளமே தகளி யாக
மடம்படும் உணர்நெய் அட்டி
உயிரெனுந் திரிம யக்கி
இடப்படு ஞானத் தீயால்
எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை
கழல்அடி காண லாமே.

— அப்பர்

மெய்ம்மை

மன்னே, உன்னை நான் சார்ந்திருப்பது என்னுடைய மெய்ம்மை நிலை. யாண்டும் உன்மயம் யான் ஆவேனாக.

நான், எனது என்பன பொய். பொய்யை வளர்க்குமளவு புன்மையும் துன்பமும் வளர்கின்றன. நான், எனது என்பனவற்றை அகற்றியவிடம் மெய்ம்மை. நான், எனது என்பனவற்றை அகற்றுமளவு இன்பம் பெருகுகிறது. நான், எனது என்பன அகன்றுபோமளவு மனத்தினுள் மேன்மை மிளிர்கிறது. மேன்மையும் மெய்ம்மையும் ஒன்றே.

'மெய்கலந் தாரொடு மெய்கலந்தான் தன்னைப்
பொய்கலந் தார்முன் புகுதா ஒருவனை
உய்கலந் தூழித் தலைவனு மாய்நிற்கும்
மெய்கலந்தின்பம் விளைந்திடும் மெய்யர்க்கே.

— திருமந்திரம்

ஏப்ரல் 3 பங்குனி 21

துன்பத்தின் அவசியம்

அண்ணலே, உனது அமைப்பில் அநவசியமானது ஒன்றுமில்லை. மக்களால் வேண்டப்படாதது துன்பம். என்னைப் பண்படுத்துதற்குத் துன்பம் எவ்வளவு அவசியமானது என்பதை நீயே அறிவாய்.

தீங்கும் துயரமும் தெளர்ப்பாக்கியமும் ஓ மானுடா, உன்னை வந்தடைய வேண்டிய தேவையொன்றுண்டு. அவைகளின் மூலம் நீ பண்படுகின்றாய். துன்பத்தைச் சகித்தல் மூலம் நீ வலிவுபெறுகிறாய். துன்பத்தை விசாரித்துப் பார்த்தனால் உனக்கு விவேகம் உண்டாகிறது. வலிவும் விவேகமும் உடையவன் எதையும் சமாளிக்கத் தெரிந்து கொள்கிறான். அவனுக்கு ஆகாத காரியம் ஒன்றுமில்லை.

துன்பமெனுந் திட்டனைத்துஞ்
சூறையிட ஐயாவே
இன்பவெள்ளம் வந்திங்கு
எதிர்ப்படவும் காண்பேனோ?

— தாயுமானவர்

கல் நெஞ்சம்

கல்நெஞ்சமுடைத்திருக்கும்போது நான் கயவன். கனிந்த நெஞ்சம் படைத்திருக்கும் போது நான் கடவுளுக்கு ஒப்பானவன். கடவுள் அருளால் கல் நெஞ்சம் உருகுக.

காயைக் கனியாக்குவது வெப்பம். கதகதப்பு இல்லாவிட்டால் அது கனியாகாது. கல் நெஞ்சைப் பிசைந்து கனிந்த நெஞ்சமாக்குவது உள்ளுணர்ச்சி. பரத்தை நாடி உருக உருக நெஞ்சம் பண்படுகிறது. மேன்மையை நாடி உருக இயலாதவர்களே கல் நெஞ்சமுடையார் எனப்படுகின்றனர்.

அல்லும்பகலும்பே ரன்புடனேதானிருந்தால்
கல்லும் உருகாதோகல்நெஞ்சே—பொல்லாத
தப்புவழி ஏன்நினைந்தாய் சந்ததமும் நீஇறந்த
வெப்பிலே ஆனந்தமே.

— தாயுமானவர்

பணிவு

தாழ்ந்த நிலத்தில் தண்ணீர் ஓடி நிற்கும். பணிவுடையார் உள்ளத்தில் அருள் வெள்ளம் பாய்ந்து நிற்கும். இறைவா, என்னைப் பணிவுடையவன் ஆக்கு.

தனக்குத் தனிப்பெருமை தருபவன் அகங்காரத்தை வளர்க்கிறான். தன்னை அனைத்துடன் ஐக்கியப்படுத்துபவன் பணிவுடையவன் ஆகிறான். மரக்கிளைகளில் பிடித்த பிஞ்சுகள் முதிர முதிரக் கிளைகள் பணிந்து வளைகின்றன. எல்லா உயிர்களிடத்தும் தெய்வப் பெற்றியுண்டு என்னும் ஞானம் முதிர முதிரப் பணிவும் தானே வந்தமைகிறது.

எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.

— திருக்குறள்

ஏகாந்தம்

எம்பெருமானே, உன்னை உணர்ந்து, உன்னுடன் இணங்கியிருப்பதற்கு ஏகாந்தம் ஒன்றே இடமாகும்.

கண்ணுடியின் துணைகொண்டு முகத்தைப் பார்க்கிறோம். முகத்திலுள்ள நலம் கேடு இரண்டும் அப்பொழுது உள்ளபடி விளங்குகின்றன. மனத்தகத்துள்ள நலம் கேடு இரண்டையும் தெரிந்துகொள்ளுதற்கு ஏகாந்தம் பயன்படுகிறது. சிலர்க்கு ஏகாந்தம் அச்சத்தை ஊட்டுகிறது. சிலர்க்குத் தகாத எண்ணங்கள் ஏகாந்தத்தில்தான் உண்டாகின்றன. நிலத்தில் போட்ட மீன்போன்று சிலர் ஏகாந்தத்தில் தவிக்கின்றனர். நீரினுள் விட்ட மீன்போன்று சிலர் ஏகாந்தத்தில் இனிமை காண்கின்றனர். ஏகாந்தத்தில் இனிது வீற்றிருக்கத் தெரிந்துகொண்டவரே நல்ல பயிற்சியடைந்தவர் ஆகின்றனர்.

அருவுருவம் எல்லாம் அகன்றதுவா யான
பொருளெமக்கு வந்து புலப்படுவ தெந்நாளோ ?

— தாயுமானவர்

ஏப்ரல் 7 பங்குனி 25

வெட்ட வெளி

அண்ணலே, நீ ஒன்றிலும் அடங்காத பெரிய பொருள் என்பதை என் தலைக்கு மேல் இருக்கும் வெட்டவெளி விளக்கிக் கொண்டிருக்க, நான் அதை அறியாததென்னே!

சூரியமண்டலம் என்னும் பரப்பில் நாம் வசிக்கும் விரிவுலகம் ஒரு தூசிக்குச் சமானம். வெட்ட வெளியில் சூரியமண்டலம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு புள்ளியாக ஒடுங்கி விடுகிறது. நம் தலைக்கு மேல் தென்படும் வானம் கோடானுகோடி அண்டங்களைத் தன்னகத்து அடக்கியுள்ளது என்பதை எண்ணிப் பார்த்தால் நமது மனதும் அகண்டாகாரத்தில் விரிந்தோடும்.

வெந்துயரைத் தீர்க்குமந்த
வெட்டவெளி கிட்டாதோ ?
சிந்தைஐயந் தீர்க்குமந்தத்
தேறலது கிட்டாதோ ?

— பட்டினத்தார்

ஏப்ரல் 8 பங்குனி 26

பாவனை

பகவானே, உன்னை நான் பாவிக்கின்ற பொழுது என்னுடைய பவரோகம் மறைகிறது. நின்னையே நினைந்திருக்க அருள்புரிவாயாக.

அடிக்கடி உன் நெஞ்சத்தில் வரும் நினைவு எது? ஓய்வு வேளையில் உன் நெஞ்சம் எதன் கண் ஓடுகிறது? தனித்திருக்கும்போது உனக்கு உண்டாகும் எண்ணம் யாது? நீ பாவிப்பது மேலானது என்றால் நீ மேல் நோக்கிச் செல்லுகிறாய்; அது கீழானது என்றால் நீ கீழ்மையை நாடுகிறாய். புனிதமான பாவனை ஒன்றே உன்னைப் படிப்படியாய் உயர்த்துகிறது என்பதை நீ ஓர்ந்து பார்.

எது பாவித்திடினும் அதுவாகி வந்தருள்செய்
எந்தை நீ குறையுமுண்டோ ?

— தாயுமானவர்

பிரம்மச்சரியம்

பிரம்மச்சரியத்தால் தெளிந்த கண்ணுடி போன்று என் மனதை நான் மாற்றி விடு வேனுனல், பிறகு ஈசா, என் காட்சியில் இருப்பவன் நீ ஒருவனே.

காமநுகர்ச்சி மனிதனை விலங்கு நிலையில் வைக்கிறது, அருள்நாட்டமாக அதை மாற்றி விடவேண்டும். அதனுல் விந்து தாரணை ஏற்படுகிறது. கற்பு என்பது அதுவே. பதினுன்கு வருஷ காலம் மனம், மொழி, மெய்யால் பிரம்மச்சரியம் கலையாதிருப்பவர்க்கு மேதை என்ற புதிய நாடி உண்டாகிறது. அறிவு தெளிதற்கு அது துணையாகிறது.

**கட்டக் கழன்று கீழ்நான்று வீழாமல்
அட்டத்தைக் கட்டி அடுப்பை அணைகோலி
விட்டத்தைப் பூட்டி மேற்பையைத் தாட்கோத்து
நட்டமிருக்க நமனில்லை தானே.**

— *திருமந்திரம்*

நிறை பொருள்

இறைவா, உன்னை நான் சார்ந்திருக்குமளவு நிறை நிலை எனக்கு வந்துவிடுகிறது.

கடலினின்று மேகமாக நீரை எவ்வளவு மொண்டெடுத்தாலும் கடலின் நிறைவு குறைவதில்லை. எத்தனை நதிகள் வந்து அதனுள் புகுந்தாலும் அதில் மாறுதல் ஒன்றும் வருவதில்லை. அண்டங்களனைத்தும் சிதாகாசத்தில் தோன்றவும் ஒடுங்கவும் செய்கின்றன. அதனால் அதன்பூரணத்தில் ஒரு மாறுதலும்வருவதில்லை. மனதின்கண் வரும் எல்லா மாறுதல்களுக்கிடையில் மனத்தகத்துள்ள சிதாகாசம் மாருது நிறைபொருளாய் நிலவுகிறது.

எத்தனையோ அண்டத்து
இருந்தவர்கள் எத்தனைபேர்
அத்தனைபேர் உண்டாலும்
அணுவுங் குறையாண்டி.

—பட்டினத்தார்

விசுவஜித்

உலகெலாம் எனக்குச்சொந்தம்என்பதை ஒண்பொருளே,நீ ஓயாது விளக்கிக்கொண் டிருந்தும் நான் அதை அறியாதது என்னே!

முட்டைக்குள் அடைபட்டுக்கிடக்கும் குஞ்சு ஓட்டை உடைத்துக்கொண்டு வெளியில் வந்து மண்ணுலகையும் விண்ணுலகையும் தனக்குச் சொந்தமாக்கிக்கொள்கிறது. சுய நலம் என்னும் கீழ்மையை அகற்றுபவன் உலகனைத்தையும் தனக்குச் சொந்தமாக்கு கிருன். துணையற்றிருந்தவன் திரும்பியவிட மெல்லாம் துணை காண்கிருன். துன்பம் துய்த் திருந்தவனுக்கு இன்பவீடு சொந்தமாகிறது. வறுமைநோய் நீங்கப்பெற்று அவன் நல் வாழ்வே வடிவெடுத்தவன் ஆகிருன்.

துரியங் கடந்தவொன்றே
தூவெளியாய் நின்ற
பெரியநிறை வேயுனைநான்
பெற்றிடவுங் காண்பேனே?

— தாயுமானவர்

மௌனம்

தேனை அருந்துகையில் தேனீ ரீங்கார மிடாதிருப்பது போன்று உன்னில் நான் திளைத்திருக்கும்போது நான் பேச்சற்ற வனாகிவிடுகிறேன்.

எது அசைகிறதோ அதில் ஓசையுண்டா கிறது. அண்டமனைத்தும் அசைகிறது. அது முழுதும் ஒலித்துக்கொண்டிருக்கிறது. அண் டத்துக்கப்பாலுள்ள பொருளில் அசைவு மில்லை, ஓசையுமில்லை. நம் உடல் என்னும் பிண்டத்திலும் ஓசையுண்டு. அதற்கு அடிப் படையாயுள்ள ஆத்ம சைதன்யம் மௌன முற்றிருக்கிறது. மனது ஆத்மசொரூபத்தில் லயமாகுமளவு பேச்சு ஒடுங்குகிறது.

ஓசை யொடுங்குமிடம் ஓங்காரத்
துள்ளொளிகாண்
பேசா திருக்கும் பிரமமிது என்றுண்டி.

— பட்டினத்தார்

பகை

மன்னே, என் மனத்தகத்தினின்று பகை என்னும் பாதகத்தைப் பறித்தெறிவாயாக.

பகையைக் கண்டுபிடித்து அதைக் களைவது முற்றிலும் அவசியம். உண்மையான பகை மனிதனுள் மறைந்திருந்து வேலை செய்கிறது. கட்டுக்கு அடங்காத மனதே ஒருவனுக்குப் பெரும் பகை. பின்புறத்தில் காணும் பகைகளையெல்லாம் அம்மனதே தேடிக்கொள்கிறது. மனிதன் அடையும் சிறுமைக்கும் சீர்கேட்டுக்கும் கட்டில் அடங்காத அவன் சிந்தையே முதற்காரணமாகும்.

आत्मैव ह्यात्मनो बन्धुरात्मैव रिपुरात्मनः

ஆத்மைவ ஹ்யாத்மனோ பந்துராத்மைவ ரிபுராத்மன:

தனக்குத்தானே சுற்றம்; தனக்குத்தானே பகை.

— பகவத்கீதை

சித்தமெனும் பௌவத்
திரைகடலில் வாழ்துரும்பாய்
நித்தமலை யாதருளில்
நிற்குநாள் எந்நாளோ?

— தாயுமானவர்

கரையற்றது

பேருணர்வாய்ப் பொலியும் பெரிய பொருளே, உன்னை எந்த வடிவத்திலும் அடக்கமுடியாது என்பதை உணர்வேனாக.

உணர்வு என்றும், அன்பு என்றும், அறிவு என்றும் இயம்பும்போது நமது அனுபவத்துக்கு ஏட்டுவது ஒன்று உண்டு. அனுபவத்துக்கு எட்டுகிறது என்றாலும் நமது மனதும் மொழியும் அதற்கு எல்லை கட்டவல்லவை அல்ல. மனது அமைதி பெற்று அப்பேருணர்வில் திளைத்திருத்தல் வேண்டும். மனதினது செயற்கரிய செயல் இதுவே.

உரையற்ற தொன்றை யுரைசெயும் ஊமர்காள்
கரையற்ற தொன்றைக் கரைகாண லாகுமோ
திரையற்ற நீர்போல் சிந்தை தெளிவார்க்குப்
புரையற் றிருந்தான் புரிசடை யோனே.

— *திருமந்திரம்*

ஏப்ரல் 15 சித்திரை 3

விமோசனம்

பாங்கனைத்துக்கும் பெட்டகமே, பட்டப் பகலில் கண்ணைப் பொத்திக்கொண்டு காரிருள் என்று நான் குறை கூறலாகாது.

உலகத்தோடு நாம் வைக்கும் இணக்கத்தைப் பொறுத்துள்ளது விமோசனம் என்பது. பொருந்திய இணக்கம் இனிமையையும் ஒற்றுமையையும் உண்டு பண்ணுகிறது. பொருந்தாத இணக்கம் இன்னுதலையும் வேற்றுமையையும் வளர்க்கிறது. காலில் தைத்த முள்போன்றது பொருந்தாத இணக்கம்; கையில் பிடித்த ஊசிபோன்றது பொருந்திய இணக்கம். உலகிலுள்ள யாவையும் நமக்கு அனுகூலமானதாக மாற்றி எடுத்துக் கொள்வதே விமோசனம்.

நான் அதுவாயிருக்க
நீ செய்சித்ர மிக நன்றுகாண்.

— தாயுமானவர்

ஏப்ரல் 16 சித்திரை 4

காட்சிக்கெளியான்

காண்போனும் காணப்படுபொருளும் எல்லாமாய் நீ இருக்க, உன்னைக் காண்பது எப்பொழுதென்று கலக்கப்படுவது எதற்காக?

தெய்வத்தைத் தேடித் திரிவதெல்லாம் பேய்த் தேரைத் தேடுவதற்கு ஒப்பாகும். தென்படுவதெல்லாம் ஒரு பொருளின் பல்வேறு தோற்றங்களே. மனதைத் தூய மனதாக மாற்றவேண்டியது ஒன்றே நம் கடமை. மனது தெளிவடையுமளவு காட்சியும் இனியதாக மாறுகிறது. நல்ல மனமுடையவர்க்கு உள்ளும் புறமும் ஒளிர்வது ஒப்பற்ற அந்த ஒரு பொருளேயாம்.

காட்சிக் கெளியான்காண்
கண்டாலுங் காணுன்காண்
மாட்சிமனம் வைத்தார்க்கு
மாணிக்கத் துள்ளொளிகாண்.

— பட்டினத்தார்

ஏப்ரல் 17 சித்திரை 5

துன்ப நிழல்

பொருளுக்கும் நிழலுக்கும் என்ன தொடர்வோ, அதே தொடர்வு எனக்கும் துன்பத்துக்கும் இடையிலுண்டு என்பதை எந்தையே உன் அருளொளி புகட்டுவதாகுக

தொல்லைகள் நம்மைவிட்டுத் தொலையமாட்டாவா என்ற ஏக்கம் வந்துவிடுகிறது. இரவு பகல் மாறி மாறி வருவதுபோன்று இன்பமும் துன்பமும் நம்மை வந்தடைகின்றனவா? இல்லை. நிலைத்த இன்பம் ஒன்றே நமக்குச் சொந்தம். துன்பத்தைத் துடைக்கவேண்டிய அவசியமில்லை. துன்பத்தின் பாங்கை உள்ளபடி அறியவேண்டும். சூரியனுக்கு நிழலில்லை. அருள்நிலையிலிருப்பவர்க்குத் துன்பமென்னும் இருளில்லை.

இன்பமே எந்நாளும் துன்பமில்லை.

— அப்பர்

ஏப்ரல் 18 சித்திரை 6

பேறு

பொருளையும் போகத்தையும் உலகத்தவர் உள்குவதுபோன்று ஒப்பற்ற பொருளே, உன்னை நான் ஓயாது உள்குவேனாக.

அறிவும் அமைதியும் வேண்டுமென்று நித்தமும் வழுத்துகிற நீ அவற்றைப் பெறவில்லை என்றால் அதற்குக் காரணமொன்று உண்டு. நீ வாக்கால் வேண்டியது ஒன்று; மனத்தாலும் காயத்தாலும் நாடியது மற்றொன்று. இந்த முரண்பாட்டை இன்றே அகற்றிவிடு. நீ முற்றிலும் பரம்பொருளுக்குச் சொந்தமாய் விடுக. பரம்பொருள் என்னும் அழியாத பேறு உனக்குச் சொந்தமாய் விடும்.

பெற்றார் அநுபூதி பேசாத மோனநிலை
கற்றார் உனைப்பிரியார் கண்டாய் பராபரமே.

— தாயுமானவர்

ஏப்ரல் 19 சித்திரை 7

வித்து

எண்ணியதை எண்ணியாங்கு அளிக்க வல்ல நுண்பொருளே, நின்னையே நான் யாண்டும் எண்ணியிருப்பேனாக.

விதையிலிருப்பது எதுவோ அது பிறகு மரமாகப் பரிணமிக்கிறது. நமக்கு மனதிலிருக்கும் எண்ணமே வித்து. வெளியுலகில் தென்படும் இன்ப துன்பங்களே அதன் விளைவு. மனதில் இல்லாததை வெளியுலகில் நாம் காண முடியாது. மனத்தை நல்ல மனமாக மாற்றுமளவு வெளியுலகும் நல்லதாக நமக்கு மாறி விடுகிறது. பெருவாழ்வுக்கேற்ற நல்ல வித்து நம் மனதினூடு உள்ளது.

வித்தன்றி யாதும்
விளைவதுண்டோ நின்னருளாஞ்
சித்தன்றி யாங்களுண்டோ
செப்பாய் பராபரமே.

— தாயுமானவர்

ஏப்ரல் 20 சித்திரை 8

ஆகர்ஷண சக்தி

அண்டமெங்கும் ஆகர்ஷண சக்தியாய் ஆவிர்பவித்த பண்டைப்பொருளே, என்னை நீ ஆகர்ஷித்துக்கொள்வாயாக.

ஒவ்வொரு பொருளும் தனக்குச் சொந்தமானதை ஆகர்ஷிக்கிறது. தனக்குச் சொந்தமான கோளங்களைச் சூரியன் தன்பால் இழுத்து வைக்கிறது. பூதங்கள் பூதங்களைப் பற்றி இழுக்கின்றன. தாய்க்கும் சேய்க்குமிடையே அதே சக்தி பந்தமாக வடிவெடுக்கிறது. ஆயிரம் ஆடுகளையும் குட்டிகளையும் பிரித்துப் பிறகு ஒன்று சேர்த்தால் ஒவ்வொன்றும் தனக்குச் சொந்தமானதைத் தேடித் தெரிந்துகொள்கிறது. நமக்குச் சொந்தமான பொருளிடத்து நாம் விரைவில் சேரவேண்டும்.

என் உள்ளம் கவர் .கள்வன்.

— திருஞானசம்பந்தர்

ஏப்ரல் 21 சித்திரை 9

உடையவன்

உடையவனே, நீ உயிர்க்குயிர். நான் உனது உடைமை. உன்னை மறந்தால் நான் உயிரற்ற உடல் ஆய்விடுவேன். உன்னை உணருமளவு நான் உருப்படுகிறேன்.

மின்விளக்கில் தோன்றும் வெளிச்சம் அதற்குச் சொந்தமானது போன்றிருக்கிறது. ஒரு விளக்கில் அதிக வெளிச்சத்தையும் மற்றொன்றில் குறைந்த வெளிச்சத்தையும் காண்கிறோம். மற்று, அவையனைத்துக்கும் ஜனனி ஒன்றே. ஜனனிக்குச் சொந்தமாகுமளவு ஒரு விளக்கின் வெளிச்சம் அதிகரிக்கும். நாம் கடவுளுக்கு உடைமையாகுமளவு கடவுளின் தன்மை நம்பால் பொலியும். அவர் உடையவர்; நாம் உடைமை.

உடையானே உனையல்லாது
உறுதுணை மற்றறியேனே.

— மாணிக்கவாசகர்

எப்ரல் 22 சித்திரை 10

இங்கு

உன் அருளால் இங்கு எனக்கு எல்லாம் உண்டு என்பதை இறைவா, நான் அறிந்து கொள்வேனாக.

நலமனைத்துக்கும் இருப்பிடம் எங்கேயோ இருக்கிறதென்றெண்ணி நாம் ஏமாற்றமடைகிறோம். இங்கு நாமிருக்குமிடத்தில் நமக்கு எல்லாம் உண்டு. கேட்டைக் களையுமிடம் இது. நலத்தை நாடுமிடம் இது. துன்பத்தைத் தவிர்க்குமிடம் இது. இன்பம் எய்துவதும் இங்கு. கடவுளை அடையப்பெறுவதும் இங்கு. வேண்டியதையெல்லாம் இங்குப் பெறலாம்.

பிறப்பு மூப்புப் பெரும்பசி வான்பிணி
இறப்பு நீங்கி இங்கு இன்பம் வந்தெய்திடும்.

— அப்பர்

ஏப்ரல் 23 சித்திரை 11

சத்திய சங்கல்பம்

ஈசா, நீ சத்திய சங்கற்பன். உனது சங்கற்பத்தைச் சார்ந்திருக்கக் கற்றுக்கொள்வேனுனல் பிறகு நான் எண்ணியதை எண்ணியாங்கு எய்தப்பெறுவேன்.

இயற்கையின் மேலாம் நியதிக்கு ஒப்ப நாம் எண்ணுவோமானல் அந்த எண்ணம் நம்மை உருவாககுகிறது. நமது எண்ணம் அருளுக்குப் புறம்பானதானல், அந்த எண்ணமே,நம்மை அழித்துவிடுகிறது. திருவருளுக்கு ஒப்ப எண்ணுபவன் அதற்கு ஒப்ப வினையாற்றுகிறன். அதன் மூலம் கேடு களையப்படுகிறது. கடைத்தேறுதல் என்பது அத்தகையவனுக்குச் சாத்தியமாகிறது. நலத்தை அவன் எண்ணியாங்கு எய்துகிறன்.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

— திருக்குறள்

ஏப்ரல் 24 சித்திரை 12

பூஜை

இறையே, போற்றிப் பாராட்டுதற்குரிய பொருள் உன்னையல்லாது வேறு ஒன்றும் கண்டிலேன்.

தெய்வத்தின் பெருமையை எண்ணுமளவு மனது தெய்வப்பெற்றி பெறுகிறது. எதைப் போற்றுகிறதோ அதன் பாங்கெல்லாம் மனதுக்குச் சொந்தமாகிறது. கீழ்மையில் மகிழ்வடைகிற மனது உண்மையில் கீழ்மையைப் பூஜிக்கிறது. பின்பு அம்மனதே கீழ்மையின் சொரூபமாகிவிடுகிறது. நலமனைத்தின் திரட்சி தெய்வ சொரூபம். தெய்வத்தை வணங்குதலும் நலத்தை வணங்குதலும் ஒன்றே. யாண்டும் நலத்தை நினைந்து நலத்திலே நிலைபெற்றிருப்பதே தேவ பூஜையாகிறது.

உள்ளுறையில் என்னுவி நைவேத்தியம்
ப்ராணன் ஓங்குமதி தூபதீபம்
ஒருகால மன்றிது சதாகால பூசையாய்
ஒப்புவித்தேன் கருணைகூர்.

— தாயுமானவர்

ஏப்ரல் 25 சித்திரை 13

விஷம் உண்ணுதல்

தீயதை நலமாக மாற்றவல்ல நஞ்சுண்டா, உனக்கேற்ற செயல் புரிந்து உன்னை நான் வழுத்துவேனாக.

இன்பம் தரும் அமிர்தத்தை உயிர்களனைத்தும் நாடுகின்றன. அதன் விளைவாகத் துன்பம் தரும் விஷம் வருகிறது. விஷம் வேண்டாமென்றும், அமிர்தம் வேண்டுமென்றும் உலகம் இயம்புகிறது. நீலகண்டன் விஷத்தைத் தான்உண்டு அமிர்தத்தை உலகுக்கு ஊட்டினான். அவன் இயற்கை வடிவினனாயிருந்து ஓயாது அச்செயலைச் செய்துவருகிறான். என்றைக்கு நாம் கேட்டை வாங்கிக்கொள்ளவும் நலத்தை வழங்கவும் செய்கிறோமோ அன்று நாம் அவனை வழுத்த ஆரம்பிக்கிறோம்.

கண்காள் காண்மின்களோ—கடல்
நஞ்சுண்ட கண்டன் தன்னை
எண்தோள் வீசிநின் றாடும் பிரான்தன்னைக்
கண்காள் காண்மின்களோ.

— அப்பர்

ஏப்ரல் 26 சித்திரை 14

எண்ணத்தின் வலிவு

எல்லாம் வல்ல இறைவா, உனக்குகந்த எண்ணம் என் உள்ளத்தின்கண் எழுமாயின் அவ்வெண்ணம் நலம் விளைவிக்கவல்ல வலிவு பெற்று விடுகிறது.

உடலில் மறைந்திருக்கும் நோய் உடல் வலிவைக் குறைத்து விடுகிறது. மனதில் மறைந்திருக்கும் காமக் குரோதாதி நோய்கள் மனதின் வலிவை அழித்துவிடுகின்றன. உள்ளத்தினுள் ஆழ்ந்து மூழ்கி அத்தகைய நோய்களைக் களையவேண்டும். பின்பு உண்மையொன்று புலப்படும். எண்ணமானது வெளியுலகிலுள்ள பொருள்களோடும் உயிர்களோடும் தொடர்பு வைக்க வல்லது. நாம் எண்ணும் தூய எண்ணத்துக்கு ஏற்ப வெளியுலகம் நமக்கு மாறியமைகிறது. மற்றவர்கள் உள்ளத்தில் அவ்வெண்ணம் புகுந்து நிலைத்திருக்கிறது. நல்லெண்ணம் நமக்கு நலம் தருகிறது.

திடமுறவே நின்னருளைச்
சேர்த்தென்னைக் காத்தாளக்
கடனுனக்கென் றெண்ணிநின்னைக்
கைகுவித்தோன் நானலனே?

— தாயுமானவர்

ஏப்ரல் 27 சித்திரை 15

உறுதி

ஸ்தாணுவாய், அசலமாயுள்ள பெரிய பொருளே, எதற்கும் அசையாத, உறுதியான உள்ளம் உடைத்திருப்பதே உன்னை அடைதற்கு உற்ற உபாயம்.

உன்னில் நீ உறுதிகொள். மலையும் அடிமரமும் உறுதிக்குச் சான்றுகளாகின்றன. புயல் காற்றும் மழையும் அவைகளை அசைக்க மாட்டா. நகர்கின்ற மணலும் வளைகின்ற கொடியும் அசைகின்ற நாணலும் உறுதியின்மைக்குச் சான்றுகளாகின்றன. மற்றவர்களெல்லாம் மனத்தளர்ச்சி அடையும்போது, தன்னந்தனியனாய் உறுதியுடனிருப்பவனே மனிதன். நெகிழ்ந்த நெஞ்சமுடையோர் பிறர் உதவியைச் சார்ந்திருக்கின்றனர். உறுதிப்பாடுடையவன் மலைபோன்று தன்னில் தானாயிருக்கிறான்.

பிணி அறியோம் பணிவோம் அல்லோம்.

— அப்பர்

ஏப்ரல் 28 சித்திரை 16

ஆர்ஜவம்

குழந்தையின் உள்ளத்தில் இருப்பது போன்று என்றைக்கு நான் நேர்மையே வடிவெடுத்தவன் ஆகின்றேனோ அன்றைக்கு நல்ல உறவே, நான் உனக்குச் சொந்தமாய் விடுகின்றேன்.

நல்லதையும், அழகியதையும், பயன்படுவதையும் தோற்றத்துக்குக் கொண்டுவருவது இயற்கையின் செயல். கனியும் மலரும் விதையும் மறைந்த நிலையினின்று தருணத்தில் வெளிப்படுகின்றன. மலர்ந்த முகத்தை நாம் யாரிடத்திலும் காட்ட ஆயத்தமாயிருக்கிறோம். உள்ளத்தில் உதிக்கும் எண்ணம் எதுவாயினும் அதை உள்ளபடிவெளியிடுவது ஆர்ஜவம். மனபரிபாகமடைந்தவர்க்கே அது சாத்தியமாகும். ஆர்ஜவத்தில் நிலைநிற்குமளவு மனபரிபாகம் வந்துவிடுகிறது.

சித்தந் தெளிந்து சிவமானேரெல்லோர்க்கும்
கோத்தடிமை யான குடிநான் பராபரமே.

— தாயுமானவர்

கருவி

உலகனைத்தையும் ஆட்டுவிக்கும் ஒண் பொருளே, நான் உன் கையில் கருவியா யிருப்பதற்கு ஒப்பான பேறு வேறு யாதுளது?

தெய்வத்தினிடம் தன்னை அறவே ஒப்படைத்து விட்டவன் ஆக்ஞாபிக்காது ஆளுகின்றான். ஏனென்றால் தெய்வத்துக்குக் கீழ்ப்படிந்திருப்பவனுக்கு உலகெலாம் கீழ்ப்படிகிறது. அவன் எண்ணியபடி காரியம் நிறைவேறுகிறது. குழந்தைபோன்று அவன் பேசுகிறான். மக்கள் எல்லாரும் அவன் சொல்லுக்குச் செவிமடுக்கின்றனர். ஈசுவர சங்கல்பம் அவன் வாயிலாக வெளியாகிறது. ஆகையால் தளர்ச்சிக்கும் சந்தேகத்துக்கும் ஆங்கு இடமில்லை. கருவியாயிருப்பவன் கர்த்தாவோடு ஒன்றாகி விடுகிறான்.

निमित्तमात्रं भव सव्यसाचिन्

நிமித்த மாத்ரம் பவ ஸவ்ய ஸாசின்

இடக்கரத்தும் அம்பெய்யவல்ல வீரா, நீ என் கையில் கருவியாய் மாத்திரம் இருக்கக் கடவாய்.

— பகவத்கீதை

அற்பச்செயல்

அண்ணலே, உனது படைப்பில் அற்பச் செயலும் அற்பப் பொருள்களும் இல்லை யென்பதை நான் அறிந்துகொள்வேனாக.

மண்ணின் தொகை மாநிலம். மண்ணில் மாண்பில்லாவிட்டால் மாநிலத்தில் மாண் பில்லாது போய்விடும். ஈசுவர சிருஷ்டியில் அற்பமானது ஒன்றுமில்லை. சூரியனிடத் துள்ள நிறைவு ஒரு நெருப்புப் பொறியிலு மிருக்கிறது. ஓர் அணுவில் குற்றமேற்பட்டு விட்டால் அண்டத்தில் குற்றம் வந்துவிடும். மனிதனது ஒரு சிறு செயலில் குற்றமுண்டா னால் அவனது பாங்கே குற்றமுடையதாய் விடும். ஒவ்வொரு சிறு செயலும் பெருஞ் செயலாய்த் திகழ்தல்வேண்டும்.

எச்சிலென்று பூவை யிகழ்ந்தோர்க்கு
உனைப்போற்றப்
பச்சிலையுங் கிள்ளப் படுமோ பராபரமே.

—தாயுமானவர்

மண்டையோடு

மாண்பொருளே, மயானத்தில் கிடக்கும் மண்டையோடு எனக்கு நல்லறிவு புகட்டுவதாகுக.

மண்ணுலக வாழ்வு மாண்புடையதெனினும் மகாதேவன் அதற்கு ஒரு மதிப்பும் தருவதில்லை. மண்டையோட்டில் அவன் பிச்சையெடுத்துண்ணுகிறான். விருப்பு வெறுப்பு வடிவெடுத்திருந்த மனிதனுக்குக் கருவியாயிருந்த மண்டையோடு இப்போது விருப்பு வெறுப்பற்றவனுக்கு ஐயமெடுத்துண்ண உதவுகிறது. உயிர்வாழ்ந்திருக்கும்போதே மனிதன் அந்த மண்டையோடு போன்று ஆய்விடவேண்டும். தன் சொந்த அலுவல்களுக்குச் செத்தவன் ஆய்விடவேண்டும். கடவுளிடத்து வெறும் கருவியாயிருக்கவேண்டும்.

தலையே நீ வணங்காய்—தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்.

— தாயுமானவர்

கை விளக்கு

மனத்தகத்து மாருது மிளிரும் தேவா, உன்னை உறுதியாகப் பிடித்துக்கொண்டால் அடைய வேண்டியதையெல்லாம் எளிதில் பெற்று விடலாம்.

நள்ளிரவில் நடந்து செல்லுதற்கு நெடுந்தூரம் இருக்கிறது. சேரவேண்டிய இடம் கண்ணுக்குத் தெரிவதில்லை. கைவிளக்கு ஒன்று கைவசமுண்டு. அது சில அடிகள் தூரம் வெளிச்சம் காட்டுகிறது. ஆயினும் அது போதுமானது. காலெடுத்து வைக்கவேண்டிய இடத்தை அது காட்டுகிறது. உடனே செய்யவேண்டியது என்ன என்று தானே தெரியவேண்டும்? அப்போதைக்கப்போது ஆகவேண்டியதை முறையாகச் செய்தால் நல்ல முடிவுக்கு அது கொண்டுசேர்க்கும். மனசாக்ஷி நம்மிடத்துள்ள கைவிளக்கு. குறியின்கண் நம்மை அது எடுத்துச்செல்லும்.

கைவிளக்கின் பின்னேபோய்க்
காண்பார்போல் மெய்ஞ்ஞான
மெய்விளக்கின் பின்னேபோய்
மெய்காண்ப தெந்நாளோ?

— தாயுமானவர்

வழிப்போக்கன்

வேந்தே, நான் இவ்வுலகில் ஒரு வழிப் போக்கன் என்பதை யாண்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள்வேனாக.

வழிப்போக்கன் ஒருவன் வழியைப் பாழ்படுத்தலாகாது. வழியைத் துப்புரவுபடுத்த வேண்டும். நன்கு பயன்படுத்துதற்கே வழியிருக்கிறது. அது எல்லார்க்கும் சொந்தம். வழியைப் பயன்படுத்தலாம்; ஆனால் அதனிடத்து உரிமை பாராட்டலாகாது. அதில் பற்று வைத்து அங்கேயே நின்று விடுவதும் பொருந்தாது. அதைக் கடந்து, சேரவேண்டிய இடம் போகவேண்டும். இவ்வுலகம் என்னும் வழியில் மக்கள் ஓயாது வந்துகொண்டும் போய்க்கொண்டும் இருக்கின்றனர்.

**வந்த வரவை மறந்துலகாய் வாழ்ந்துகன்ம
பந்தமுற வுன்னைப் படிப்பிக்கக் கற்றவர்யார்
இந்தமதிஏன் உனக்கிங் கென்மதிகேள் என்னுலே
சந்தத நெஞ்சே பரத்திற்சாரின் இன்பம் உண்டாமே.**

— *தாயுமானவர்*

சிறு செயல்

செம்பொருளே, செயலில் சிறியது பெரியது என்னும் வேற்றுமை என் சிந்தையை விட்டு விலகியோடுக.

உண்பது, உறங்குவது, ஓய்வெடுப்பது, பேசுவது போன்றவை பாமரர்க்குச் சிறு செயல்களாம். ஆனல் அவைகளில் மிளிரும் மாண்பு மேலோர்க்கே விளங்கும். அப்போதைக்கப்போது செய்யவேண்டிய அலுவல்களை அவர்கள் ஆர்வத்துடன் புரிகின்றனர். தவறுதல் ஒன்றைமட்டும் அவர்கள் தவிர்க்கின்றனர். மற்று, அவசரப்படுவதும் ஒத்திவைப்பதும் அலட்சியப்படுத்துவதும் அவர்களுக்கில்லை. இங்ஙனம் சிறு செயல்களினின்று நிறைநிலை பெரியோர்க்கு வந்தமைகின்றது.

योगः कर्मसु कौशलम्

யோக: கர்மஸு கௌசலம்

செய்வதைச் செம்மையாகச் செய்வது யோகம்.

— பகவத்கீதை

பண்பு

புண்ணியா, உனக்கு நான் சாத்தும் பண்பு மாலையில் என்னுடைய ஒவ்வோர் எண்ணமும் செயலும் நன் மலராக அமைவதாகுக.

ஓராண்டு என்பது ஒருமிக்க நமக்கு வந்தமைவதில்லை. நொடிப்பொழுதாக அது நேர்ந்துகொண்டு போகிறது. பெரியோரிடத்துப் பொலியும் பண்பு திடீரென்று உண்டானதன்று. அப்போதைக்கப்போது ஆற்றிய அற்பக் கடமையை அவர்கள் பண்புடன் புரிந்தார்கள். பட்சமாயிருத்தல், தொண்டு புரிதல், நேர்மையாக நடந்துகொள்ளுதல் ஆகியவைகளை அவர்கள் ஓயாது செய்துவந்தனர். அங்ஙனம் அவர்கள் பண்பே வடிவெடுத்தவர் ஆயினர்.

எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.

— திருக்குறள்

கேடு

வெள்ளைத் துணியில் வீழ்ந்த புள்ளி முன் நின்று புலப்படுவது போன்று என் உள்ளத்தில் உதிக்கும் சிறு குற்றமும் எனக்குத் தென்படுக.

தகவிலான் ஒருவன் தன்னிடத்துள்ள சிறு குற்றத்தைக் குற்றமாக மதிப்பதில்லை. பிறரிடத்திலுள்ள பெருங் குற்றத்தைக் காட்டித் தருவதைவிடத் தன்னிடத்துள்ள சிறிய கேட்டைக் களைவது மேல். கேட்டில் பெரியது சிறியது என்ற பாகுபாடு கிடையாது. சட்டியினுள் சிறு துவாரமிருந்தாலும் அது சமைப்பதற்கு உதவாது. தன் குற்றம் களையாதவன் குணவான் ஆகான்.

கேடிலியை நாடுபவர் கேடிலாரே.

மே 7 சித்திரை 25

பலி

மன்னே, நான் சொந்தம் பாராட்டும் என்னையே உனக்குப்பலிதானமாக வழங்கி விடுவேனாக.

அவரவர் பாகத்துக்கு ஏற்றாற்போன்று மக்கள் கடவுளுக்கு ஏதாவது படைக்கிறார்கள். மற்ற ஜீவ ஜந்துக்களைப் பலியாகக் கொடுப்பது கீழ்த்தரமான கொடை. நல்லுணவைக் கடவுளுக்கு நைவேத்தியம் பண்ணி மற்றவர்களுக்குப் பிரசாதமாய் வழங்குவது மேலானது. கடவுள் மூலம் உயிர்களெல்லாம் இணைக்கப்பட்டிருக்கின்றன என்பதை அது அறிவுறுத்துகிறது. தன்னையே தெய்வக் காரியத்துக்கு மனமுவந்து ஒப்படைத்து விடுவது ஒப்பற்ற செயலாகும்

துன்னும் அறியா மனது பலி கொடுத்தேன்.

— தாயுமானவர்

சத்தியம்

சத்தியத்தைச் சார்ந்திருக்குமளவு நான் கடவுளைச் சார்ந்திருப்பவன் ஆகிறேன்.

அண்டமனைத்திலும் வியாபித்திருப்பது சத்தியம். ஒழுங்குப்பாடும் முறைமையும் நேர்மையுமாக அது மிளிர்கிறது. அதைக்கூட்டவோ குறைக்கவோ முடியாது. மனிதனைச் சார்ந்து சத்தியமில்லை; சத்தியத்தைச் சார்ந்து மனிதனிருக்கிறான். அதைப் புறக்கணிக்குமளவு அவன் தன்னையே அழித்துக்கொள்ள வழி தேடுகிறான். சத்தியத்தைக் கடைப்பிடிக்குமளவு அழியாத் தன்மைக்கு அவன் தன்னை ஆயத்தப்படுத்துகிறான்.

सत्यमेव जयते नानृतम्

ஸத்யமேவ ஜயதே, நாந்ருதம்.

— முண்டகோபநிஷத்

**தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.**

— திருக்குறள்

ஆசை

ஆசை என்னைப் பாசக் கடலுக்குள் அமிழ்த்திவிடுகிறதெனினும் ஈசா, உன்னைப் பற்றி ஆசைகொள்வேனுனல் நான் உய்வதற்கு அதுவே உற்ற உபாயம்.

ஆசையை நிறைவேற்றவே நாம் இவ்வுலகுக்குள் வந்துள்ளோம். ஆசையால் தூண்டப்பெற்று எல்லா அலுவல்களையும் செய்து வருகிறோம். உற்ருர் பலர் நமக்குண்டானது ஆசையின் பயனே. ஆசையினுல் நமக்கு நாம் எல்லை கட்டிக்கொண்டோம். கடலெங்கும் நீந்தி விளையாடுகிற மீன் ஒரு நீர்த்தொட்டிக்குள் கட்டுண்டிருப்பதுபோன்று ஆசைக்குள் நாம் கட்டுண்டிருக்கிறோம். ஆசையை அகற்றினுல் அனைத்தும் நமக்குச் சொந்தம் என்பது விளங்கும்.

ஆசை அறுமின் ஆசை அறுமின்
ஈச னுேடாயினும் ஆசை அறுமின்.

— திருமந்திரம்

கீர்த்தி

கருணாகரா, நான் கீர்த்தியைக் கண்ணெடுத்தும் பாராது அல்லும் பகலும் உன்னையே நாடியிருப்பேனாக.

கீர்த்தி பகவத் சம்பத்துக்களில் ஒன்று. ஆனால் அது நிழல்போன்றது. நிழலைப் பிடிக்க ஓடுமளவு அது எட்ட ஓடிக்கொண்டேயிருக்கும். கீர்த்திக்காக உழைத்தவர்களெல்லாம் ஏமாற்றம் அடைந்தவர்களே ஆயினர். ஓர் அற்பக் காரணத்தை முன்னிட்டுக் கீர்த்தி அபகீர்த்தியாக மாறிவிடும். பின்பு அறத்தையும், அறம் காக்கும் கடவுளையும் கடைப்பிடிப்போரைக் கீர்த்தி தானே தேடிவரும்.

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.

—திருக்குறள்

மே 11 சித்திரை 29

சமயப்பற்று

செம்பொருளே, உன்னைச் சார்ந்திருப்பவர் அனைவரும் சேவித்த நெறி ஒன்றே. அந்நெறி எனக்கும் உரியதாகுக.

வெளி வேஷங்களும் பழக்கவழக்கங்களும் சமய அனுஷ்டானமாகா. மனதின் பாங்கு சமயப்பற்றை விளக்கும். பகை, பொறாமை, ஆசை, ஆணவம் முதலியன செந்நெறி சாராமைக்குச் சான்றுகள். இக்குற்றங்களைக் களைய முயலுவாயானால் உன்னிடத்துச் சமயப்பற்று உண்டு. அன்பும், அமைதியும், தன்னலங் கருதாமையும் உன்னிடத்திருக்குமாகில், நீ ஒரு சமயத்தையும் சேராதவனாயிருந்தாலும் நீ சமயப்பற்றுடையவனே.

ஆறு சமயத்தும் அதுவதுவாய் நின்றிலங்கும்
வீறு பரைதிருத்தாள் மேவுநாள் எந்நாளோ?

— தாயுமானவர்

மே 12 சித்திரை 30

கோபம்

கோவே, நான் கோபத்தின் வசப்பட்டு விடும்போதெல்லாம் உனக்கு வேற்றாகி விடுகிறேன். கோபத்தைக் களைந்துவிட்டு நான் உனக்கே உரியவன் ஆவேனாக.

முறை மாறியமையும்போது அமிர்தம் நஞ்சாகிறது. மனது அமிர்த சொரூபம். அதுகோபம்கொள்ளும்போது நஞ்சாக மாறுகிறது. கோபித்திருக்கும் வேளையில் எண்ணுகிற எண்ணம் கொடியது. மேலும் உடல் முழுதுமே அப்பொழுது கொடியதாகிறது. உண்ணுகிற உணவும் நஞ்சாய்விடுகிறது. தாற்காலிகமாக அமையும் பைத்தியம் எனப்படுகிறது கோபம்.

நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற.

— திருக்குறள்

உறக்கம்

உடல் வாழ்வு பொருத்தமற்றது என்பதை உறக்கம் ஓயாது விளக்கி வருகிறதெனினும் இறைவா, நான் அதை அறியாதிருப்பது என்னே!

உலகப்பற்றுடையார்க்கு நல்ல உறக்கம் கிடையாது. கவலையுடன் இடையிடையே அவர் விழித்தெழுந்திருப்பார். படுத்தமாத்திரத்தில் பிரபஞ்ச மறதி பற்றற்றூர்க்கே வருகிறது. நல்லஉறக்கம் மனிதனுக்கு நலமனைத்தையும் வழங்குகிறது; உடல் புதுப்பிக்கப்படுகிறது; உள்ளம் தெளிவடைகிறது. உறக்கத்தில் மெய்ம்மறந்து மனிதன் கடவுள் சந்நிதியிலிருக்கிறான். உறக்கத்தை அறிபவன் கடவுளைச் சார்ந்திருக்க அறிபவன் ஆகிறான்.

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

— திருக்குறள்

மே 14 வைகாசி 1

பாத்திரத்திற்கு ஏற்ற பொருள்

அண்ணலே, நின்னருளால் உனக்கேற்ற சத் பாத்திரமாக என்னை நான் மாற்றி யமைத்துக்கொள்ள வல்லவன் ஆவேனாக.

கடல் பெரிது எனினும் ஒவ்வொரு பாத்திர மும் அதில் தனது வண்ணத்துக்கு ஏற்ற அளவே நீர் மொள்ளுகிறது. கடவுளிடத் திருந்து மனிதன் தன் தகைமைக்கு ஏற்ற தையே அடைகிறான். இன்ப துன்ப மிரண் டும் அவன் தகைமையினின்றே வருகின்றன. இன்பத்தைத் துன்பமாக மாற்றுவதும், துன்பத்தை இன்பமாக மாற்றுவதும் வெவ் வேறு பாங்குடையவரது செயல். பாங்கின் வேறுபாடு பாத்திரத்தின் வேற்றுமை என் னும் பெயர் பெறுகிறது. சத்பாத்திரமாவது சான்றோர் செயல்.

எவ்வுடல் எடுத்தார் அவ்வுடல் வாழ்க்கை
இன்பமெனவே துன்ப மிலையென.

— தாயுமானவர்

மே 15 வைகாசி 2

போட்டி

மற்றத் துறைகளிலெல்லாம் போட்டிக்கு இடமுண்டு. பெரிய பொருளே, உன்னை அடையவேண்டுமென்பவர்க்கிடையில் போட்டிக்கு இடமில்லை.

பணம் வேண்டுபவர் வெவ்வேறு துறைகளில் அதற்குப் பாடுபடுகின்றனர். ஒருவர் துறையில் இன்னொருவர் நுழைவது போட்டியின் முதல்படியாகும். மற்றப் படிகள் படிப்படியாய் வந்துவிடுகின்றன. பதவிக்குப் பாடுபடுவதும் அத்தகையது. போகத்துக்குப் பாடுபடுவது அதனினும் பொல்லாதது. பகையனைத்தும் போகப் போட்டியிலிருந்து வருகிறது. பின்பு, பரத்தை நாடுபவர் போக்கு வேறுளது. பரநாட்டமுடைய பிறர்க்குத் துணைபுரியுமளவு அன்னவர் தாமே பரத்துக்குச் சொந்தமாகின்றனர்,

எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

— தாயுமானவர்

சகோரபக்ஷி

அண்ணலே, நின் அருளையல்லாது வேறு ஒன்றையும் நான் கனவிலும் கருதேன்.

சகோரபக்ஷி மண்ணை வந்து மிதிப்பதில்லை. மண்ணில் படிந்த எதையும் உணவாக ஏற்பதில்லை. சந்திர வெளிச்சம் ஒன்றே அதற்கு உணவு. மதி மறைந்திருக்கும் போது அது உணவற்றிருக்கும். நல்ல சாதகன் கடவுளிடத்திருந்து வரும் பேரானந்தத்தைப் புசிக்கிறான். அது வராதவேளைகளில் அற்ப உலக இன்பத்தைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. நெடுநாள் காத்திருந்தும் கடவுளிடத்திருந்தும் வரும் பேரானந்தத்தையே தனக்குச் சொந்தமாக்குகிறான்.

சந்திரனை நாடும் சகோரபக்ஷிபோல் அறிவில்
வந்தபரஞ் சோதியையாம் வாஞ்சிப்பதெந்நாளோ?

— தாயுமானவர்

சோதனை

நான் உன்னிடத்து மாருத அன்பு கொண்டுள்ளேனுவென்று சோதித்துப் பார்த்துப் பிறகு செம்பொருளே, என்னை நீ ஏற்றுக் கொள்.

தாம் திருப்தியடைந்திருப்பதாகவும் அமைதியுற்றிருப்பதாகவும் அன்புருவாயிருப்பதாகவும் கடவுளைச் சார்ந்திருப்பதாகவும் பலர் பகர்கின்றனர். வாழ்க்கையில் இன்னல் ஏற்படாதிருக்கும் பொழுதே இத்தகைய பேச்சுக்கள் வருகின்றன. தோல்வியும் இகழ்ச்சியும் நஷ்டமும் வரும் பொழுது அவர்களது இயல்பு மாறி விடுகிறது. குறை கூறவும் வெறுக்கவும் தாக்கவும் அப்பொழுது அவர்கள் முன் வருகின்றனர். இன்னலைக் கொண்டு மனிதன் சோதிக்கப்படுகிருன்.

பொய்வார்த்தை சொல்லிலோ
திருவருட் கயலுமாய்ப்
புன்மையேன் ஆவன் அந்தோ !

— தாயுமானவர்

மே 18 வைகாசி 5

கர்ப்பக்கிருகம்

பிரகாரங்களையெல்லாம் தாண்டிக்கர்ப்பக் கிருகத்துக்குள் வந்தால்தானே கடவுளே, உன்னை நான் காணமுடியும்?

பொறிகள் வாயிலாகப் புறவுலகத்தில் போவதெல்லாம் பாழ். ஆங்குள்ள கூச்சல் நிறைந்த களியாட்டமும், குழப்பம் நிறைந்த போராட்டமும் துன்பத்தைத் தருகின்றன; ஆற்றலை அழித்துவிடுகின்றன. உள்முகமாகத் திரும்பி மனத்தின் உள்ளே கர்ப்பக் கிருகத்துக்குப் போகும்பொழுது புத்துயிர் வருகிறது. உள்ளே உள்ள அமைதி ஆனந்தத்தைக் கொடுக்கிறது. ஆறுதல் அடைதற்கு உற்ற இடம் மனது என்னும் கர்ப்பக்கிருகம்.

ஈனந் தருநாடு இதுநமக்கு வேண்டாவென்று
ஆனந்த நாட்டில் அவதரிப்ப தெந்நாளோ?

— தாயுமானவர்

தான்

உனக்குரிய பொருளென்று என்னை யறிந்து உனக்கு என்னைக் கொடுத்துவிட்டால் உன்னை நான் அடையலாமே!

தான் தேடும் பெருநிலையை மனிதன் தன்னிடத்துக் காணுவிடில் அதை வேறு எங்குக் காண்பான்? தன்னில் தானுயிருக்க அஞ்சுபவனுக்கு அயலார் எங்ஙனம் ஆறுதல் அளிப்பர்? அடைக்கலம் புகத் தன்னிடத்து ஒன்றையும் காணுதவன் வேறு எங்கும் நிலைத்த நிம்மதியைப் பெறமாட்டான். புறத்தில் உள்ள யாவும் அழியும் தன்மையன. அகத்தில் இருப்பது ஆத்மா. தன்னில் நிறைவு காணலாம். தேடும் அனைத்தையும் தன்னில் பெறலாம். தனக்கு நித்திய வாசஸ்தானம் தானே.

தன்னை அறியாது சகந் தானுய் இருந்துவிட்டால்
உன்னை அறியஅருள் உண்டோ பராபரமே.

— தாயுமானவர்

விலகியிரு

உலகப் பொருள்களை வேண்டி நிற்கும் நான் ஒண்பொருளே, உன்பொருட்டு அவைகளை விட்டு விலகியிருப்பேனாக.

உடலுக்கு ஓய்வு தேவை; உறக்கம் தேவை. ஓய்வு, உறக்கம் வாயிலாக உடல் புதுப்பிக்கப்படுகிறது. வேண்டிய அளவு ஓய்வும் உறக்கமும் இல்லாவிட்டால் உடல் தேய்கிறது. விலகியிருக்கும் பாங்கு ஆத்மாவுக்குத் தேவை. உலக வியவகாரங்களிலிருந்து அது இடையிடையே விலகிக்கொள்ளவேண்டும். அப்பொழுது உள்ளிருந்து உயர்வு தானே வருகிறது. விலகியிரு, விழித்திரு, நிறை நெஞ்சம் உடைத்திரு.

தன்னை அறியத் தனிஅறிவாய் நின்றருளும்
நின்னைஅறிந் தென்அறிவை நீங்கிநிற்க
வேண்டாவோ ?

—தாயுமானவர்

ஸ்துதி

பழம் பொருளே, உனது புகழில் என் மனது பரமதிருப்தியடைந்திருப்பதாகுக.

வெள்ளைத் துணியில் எந்தச் சாயத்தை வேண்டுமானாலும் ஏற்றலாம். மனதின் அமைப்பு அத்தகையது. எதை உவகையுடன் எண்ணுகிறதோ அதன் இயல்பை மனது வாங்கிக் கொள்கிறது. கடவுளின் பெருமைகளையெல்லாம் பேசுவதும் பாடுவதும் ஸ்துதியாகும். உள்ளுணர்ச்சியோடு அவனைத் துதிக்குமளவு மனது அவன் மயமாகிறது. அவனது பெருமைகளையே பாராட்டிப் பேசிப் பழக வேண்டும்.

இருள்சேர் இருவினையும் சேராஇறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

— திருக்குறள்

மே 22 வைகாசி 9

அஞ்சனம்

எல்லாம் உன் சொரூபம் என்று காண்பதற்கான மனபரிபாகத்தைமெய்ப்பொருளே, நீ என் மாட்டு அமைத்தருள்வாயாக.

தன் செல்வன் கண்ணனைக் காணவில்லையே என்று தாய் யசோதை தேடியலைந்தாள். ஸ்ரீமதி ராதையைச் சந்தித்ததும், "நீ கண்ணனை எங்கேயாவது கண்டாயா!" என்று வருந்தி வினவினள். "தாயே, உன் கண்களில் பிரேமை பக்தி என்னும் மை தீட்டிக் கொண்டு பார். திரும்பிய விடமெல்லாம் கண்ணன் தென்படுவான்" என்றாள் ராதை. அத்தகைய அஞ்சனத்தை நாம் ஒவ்வொருவரும் பூசக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஈனமில்லா மெய்ப்பொருளை
இம்மையிலே காணவெளி
ஞானமெனும் அஞ்சனத்தை
நான்பெறுவ தெந்நாளோ ?

— தாயுமானவர்

மே 23 வைகாசி 10

அஸ்திவாரம்

காற்றையும், மழையையும், பூகம்பத்தையும் எதிர்த்து அஸ்திவாரம் வீட்டைக் காப்பதுபோன்று இறைவா, நீ என் மனதுக்குள்ளிருந்து என்னைக் காப்பாற்றுவாயாக.

புறவுலகில் நரர்களதும் தேவர்களதும் ஆன துணையை எதிர்பார்க்குமளவு நீ விடுதலையடைந்தவன் இல்லை. ஆனால் வீரியமும் விருப்பும் ஒன்றல்ல. வீருப்புடையவனது இன்பதுன்பம் தன் கைவசத்திலில்லை. மற்றவர் எளிதில் அவனை அலைக்கழித்துவிடலாம். பின்பு, வீரியமோ சித்தமிசை குடியிருக்கிற தெய்வத்திடமிருந்து வருகிறது. உள்ளிருந்து வரும் காமக்குரோதங்களும், புறத்திலிருந்துவரும் புகழ்ச்சி இகழ்ச்சிகளும் அவனைப் புரட்டிவிடமாட்டா.

யார் உறவு எனக்கு இங்கு? ஆர் அயல் உள்ளார்? ஆனந்தம் ஆக்குமென் சோதி!

— மாணிக்கவாசகர்

ஓதுதல்

இறைவா, உன் பெருமையைப் பற்றிப் பெரியோர் உள்ளத்தில் பொங்கியெழுந்த பாக்களை நாள்தோறும் நான் ஓதுவேனாக.

ஏதேனும் ஒரு மொழியை மொழிந்துகொண்டு வர வர வாக்குச் சுத்தமடைகிறது. ஓதுதலோ அதிலும் மேலானது. ஆப்தர்கள் அருளிச் செய்த பாடல்கள் பரபோதம் நிறைந்தவைகள். பொருள் விளங்கினாலும் விளங்காவிட்டாலும் ஆப்தமொழிகளைச் சிரத்தையுடன் பகர்வதே ஓதுதலாகும். அதனால் வாக்குத் தெளிவும், மனத் தெளிவும், அருள்நாட்டமும் சேர்ந்து அமைகின்றன. எனவே ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்.

ஓதும் மயிர்க்கால் தொறும் அமு தூறிய
பேதம் அபேதம் பிறழாத ஆனந்த
மாதி சொரூபங்கள் மூன்றகன் றப்பாலே
வேதம் ஓதுஞ் சொரூபிதன் மேன்மையே.

— திருமந்திரம்

மே 25 வைகாசி 12

தவம்

எம்பெருமானே, உன்னை நான் பெறுதற்குத் தவமே வடிவெடுத்தவன் ஆவேனாக.

பழைய இரும்பைப் புதியதாக்கலாம். இரும்பின் வடிவத்தையும் வேண்டியவாறு மாற்றிவிடலாம். உலையில் இட்டு உருக்குதல் ஒன்றே அதற்கெல்லாம் உற்ற உபாயம். மனிதன் . தன்னைப் புதுப்பிக்கவும் தன் இயல்பை மாற்றவும் முடியும். பேருணர்ச்சி உள்ளத்தில் பொங்கி யெழுந்துகொண்டிருந்தால் அது தவமாகிறது. அவ்வுணர்ச்சியினின்று தான் எண்ணிய நிலையைப் பெறுதல் எளிதாகிறது.

வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும். [தவம்

— திருக்குறள்

மே 26 வைகாசி 13

அஸ்பர்ச யோகம்

என் ஆருயிரே, நீ எனக்குப் புறம்பாயிருந்தாலல்லவோ நான் உன்னை வந்தடைதல் என்பது ஏற்படுகிறது. நீயே நான் என்றுணர்ந்திருப்பேனாக.

துணிகளைப்போட்டு மூடி ஒரு மனிதனை மறைத்து வைத்துவிடலாம்; அறைக்குள் மூடி அவனை மறைத்து வைத்துவிடலாம்; ஆனால் அவனிடத்திருந்தே அவனை மறைக்கமுடியாது. தன் பிரக்ஞையினின்று மனிதன் எந்த அவஸ்தையிலும் பிரிவதுமில்லை; பின்பு அதனோடு சேருவதுமில்லை. யாண்டும் பிரகஞை சொரூபமாக அவன் இருக்கிறான். தன் எதார்த்த சொரூபத்தை அவன் புதிதாகப் போய்த் தொடுவதில்லை. தான் தன்மயமாயிருப்பது அஸ்பர்ச (தொடாத) யோகம்.

மாயா விகார மலமொழிசுத் தாவத்தை
தோயா அருளைத் தொடருநாள் எந்நாளோ?

— தாயுமானவர்

பெருநெறி

மாண்பொருளே, எனது முயற்சிகளனைத்தும் உன்னை அடைதற்கான நெறிகளாகுக.

முழு மனதையும் பயன்படுத்தினால் அது நிறை வாழ்வு என்ற பெயர்பெற்றுவிடுகிறது. மனதின் ஒவ்வொரு சிறு பகுதியும் வேலை செய்யும்போது அது தன்னளவில் ஒரு நெறியாகிறது. ஒரு காலாலே நடந்து போகலாம். இரண்டு காலால் நடப்பது அதிலும் மேலானது. கை வீசி நடப்பது அதிலும் எளிது. உணர்ச்சி, எண்ணம், அறிவு ஆகிய எல்லாப் பகுதிகளும் நாடிய லட்சியத்தை முன்னிட்டு உழைக்கும்போது அது பெருநெறி என்ற பெயர் பெறுகிறது.

பெருநெறி பிடித்தொழுக வேண்டும்
மதமானபேய் பிடியாதிருக்க வேண்டும்.

— திருவருட்பா

அவன்

குழந்தையொன்று தூணைப் பற்றிக் கொண்டு வேகமாகச் சுற்றிவருவது போன்று பிரபோ, உன்னை நான் பற்றிக்கொண்டு வாழ்க்கையில் இறங்குவேனாக.

மின்சக்தி வெவ்வேறு இடத்தில் வெவ் வேறு வடிவெடுத்து வேலைசெய்கிறது. ஓர் இடத்தில் வெப்பத்தை உண்டுபண்ணு கிறது; மற்றோர் இடத்தில் தணுப்பை உண்டு பண்ணுகிறது. ஓர் இடத்தில் இயந்திரத்தை இயக்குகிறது. இன்னுமொரு பக்கம் காந்த மாக மாறி அசையாது பிடிக்கிறது. தெய்வம் உயிர் அனைத்துக்கும் உயிராயிருப்பதால் வாழ்வு வெவ்வேறு வடிவெடுக்கிறது.

அவனை ஒழிய அமரரும் இல்லை
அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவனன்றி மூவரால் ஆவதொன்றில்லை
அவனன்றி ஊர்புகும் ஆறறியேனே.

— திருமந்திரம்

மே 29 வைகாசி 16

எதிரொலி

எந்தையே, நீ மனத்தகத்து மாறுது வீற்றிருந்துகொண்டு எனது வாழ்வு மயமான ஓலத்துக்கேற்ற எதிரொலியை உண்டு பண்ணுகிருய்.

வாய்ப்பு அனைத்தும் ஒருங்கே அடையப் பெற்ற இளைஞன் ஒருவன் வாழ்வு இனிமையே வடிவெடுத்தது என்கிருன். இனிமை என்ற எதிரொலி மனச்சாக்ஷியினிடமிருந்து வருகிறது. துயருறுவோன் ஒருவன் இதுவும் ஒரு வாழ்வா என்கிருன். இதுவும் ஒரு வாழ்வா என்னும் எதிரொலி உள்ளிருந்து வருகிறது. அவரவர் பாங்குக்கேற்ற பதில் உள்ளிருந்து வருகிறது. பக்குவமடைந்தவர்க்கு எதிரொலியில்லை. பொருள் உள்ளபடி மிளிர்கிறது.

சொல்லிறந்து நின்ற சுகரூபப் பெம்மானை
அல்லும்பகலும் அணைவேனே பைங்கிளியே?

— தாயுமானவர்

பாம்பாட்டிச் சித்தன்

மன்னே, என் மனது என்னும் பாம்பைக் கட்டி ஆட்டத் தெரிந்துகொள்வேளுனல் பிறகு உன்னை நான் வந்தடைவது திண்ணம்.

ஒழுக்கத்தில் நிலைநிற்கின்றவர்க்கு மன வுறுதி அதிகரிக்கின்றது. நாளடைவில் அது ஆத்ம சக்தியாக வடிவெடுக்கிறது. சரீரத் தின் அடிப்பகுதியில் மூலாதாரம் என்னும் இடத்தில் பாம்பு போன்று அது எழுந்திருக் கிறது. அதற்குக் குண்டலினி என்று பெயர். கடவுள் காட்சிக்காக அதை நன்கு கட்டியாள வல்லவன் சித்தன். அங்ஙனம்நாம் ஒவ்வொரு வரும் பாம்பாட்டிச் சித்தன் ஆகவேண்டும்.

குத்திரமெய்ப் புற்றகத்துக்
குண்டலிப்பாம் பொன்ருட்டுஞ்
சித்தனைஎன் கண்ணுல்
தெரிசிப்ப தென்னாளோ?

— தாயுமானவர்

குழல்

கண்ணா, உன் கானத்தைக் கிளப்புதற்கேற்ற குழலாக என்னை அமைத்துக்கொள்வாயாக.

குழல் நாணலினின்று வருகிறது. நாணலை மிதித்தால் செத்தையாகிறது. அது கண்ணன் கை பட்டால் இனிய ஓசையை உண்டுபண்ணுகிற குழல் ஆகிறது. மனதைத் தெய்வ சந்நிதிக்கு எடுத்துச்செல்ல அது கருவியாகிறது. நம் உடல் வாழ்வைக் காலில் மிதிக்கும் செத்தையாக்கலாம், அல்லது கண்ணன் கையிலிருக்கும் குழல் ஆக்கலாம்.

கருங்கண் தோகை மயிற்பீலி யணிந்து
கட்டி நன்குஉடுத்த பீதக ஆடை
அருங்கல உருவின் ஆயர் பெருமான்
அவன் ஒருவன் குழல்ஊதின போது
மரங்கள் நின்று மதுதாரைகள் பாயும்
மலர்கள் வீழும் வளர்கொம்புகள் தாழும்
இரங்கும் கூம்பும் திருமால் நின்ற நின்ற
பக்கம் நோக்கி அவை செய்யும் குணமே.

— பெரியாழ்வார்

பழக்கம்

பழம்பொருளே, உன்னை விட்டுப் பிரியாத் தன்மையைப் பழக்கத்தால் பெற நான் முயலுவேனாக.

ஒரு கருவியைக் கையாள மனிதனுக்கு முதலில் முடியாது போய்விடுகிறது. பழக்கத்தில் கருவியும் கையும் ஒன்றாய் விடுகின்றன. பிறகு எண்ணியபடி கையும் கருவியும் சேர்ந்து வேலை செய்கின்றன. நல்லெண்ணம் ஒன்று மனதுக்குள் முதலில் நுழையமாட்டேனென்கிறது. பழக்கத்தால் அது நன்கு நுழையும்படி செய்யலாம். நாளடைவில் நல்லெண்ணமே ஊறியதாக நம் நாடி நரம்புகள் ஆய்விடுகின்றன. பிறகு கனவிலும் கெட்ட எண்ணம் வருவதில்லை. பழக்கமே அதற்குக் காரணம்.

பரமுனக்கென் றென்னும் பழக்கமே மாறா
வரமெனக்குத் தந்தருள்என் வாழ்வே பராபரமே.

— தாயுமானவர்

ஜூன் 2 வைகாசி 20

புடமிடுதல்

புடமிடுமளவு பொன் புனிதமடைவது போன்று புண்ணியா, உனது உணர்ச்சியில் என் உள்ளம் வெதும்புவதாகுக.

மாசு நிறைந்த உலோகம் தூயதாவதற்குப் புடமிடுதல் ஒன்றே உற்ற உபாயம். தூய்ய தான உலோகத்தை நல்ல மருந்துக்கேற்ற பஸ்பமாக்குவதும் புடம்போடுவதாலேயாம். வெளியில் யாருக்கும் தெரியாமலும், யாரி டத்தும் விளம்பரம் செய்யாமலும், மனது தூய உணர்ச்சியிலும், எண்ணத்திலும் கொதித்துக் கொண்டிருக்குமானல் அது தெய்வப்பெற்றி யடைவது திண்ணம்.

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

— *திருக்குறள்*

சுற்றம்

மானுடா, உனக்கு நீயே சுற்றம். புறவுலகில் உனக்குச் சுற்றம் வேண்டுமென்று நீ ஏன் விரும்புகிறாய்?

தக்க ஆதரவு வேண்டுமென்று மனிதன் புறவுலகில் உள்ள மக்களின் உதவியையும் நட்பையும் நாடுகிறான். அதனால் அவன் பெறும் நலம் இரண்டாந்தரமானது. அதிலும் மேலாக மனிதன் தன்னைச் சீர்ப்படுத்துவானானால் நலன் அனைத்தையும் அவன் பெற்றுவிடுவான். நல்ல மனமே மாறாத் துணையாகிறது. நல்ல மனமுடையார்க்குப் புறவுலகெங்கும் துணை தானே வந்தமைகிறது.

बन्धुरात्मात्मनस्तस्य येनात्मैवात्मना जितः ।
अनात्मनस्तु शत्रुत्वे वर्तेतात्मैव शत्रुवत् ॥

பந்துராத்மாத்மனஸ்தஸ்ய யேனாத்மைவாத்மனாஜித:
அனாத்மனஸ்து சத்ருத்வே வர்தேதாத்மைவ சத்ருவத்

— பகவத்கீதை

தன்னால்தனை வெல்தகை யார்க்குத் தானுறவாம்
தன்னால் தனைவெல் தகையில்லார்க்-கெந்நாளும்
தானே பகைபோல் தனக்கிடர்தானே இழைப்பன்.

— பகவத்கீதை வெண்பா

திறவுகோல்

கோயில் கொண்டிருப்பவனும் நீ; கோயிலுக்குத் திறவுகோலாக அமைந்திருப்பவனும் நீ.

மனிதனது வாழ்வு முழுதும் மனதினின்று தோன்றி வருகிறது. மனம் என்பது பழக்க வழக்கத்தினுடைய தொகை. பழக்க வழக்கத்தை எப்படி வேண்டுமென்றாலும் மாற்றலாம். ஆனால் அவை திடீரென்று ஒருநாளில் அமைபவையல்ல. கணந்தோறும் நல்லெண்ணமே எண்ணுதல், நல்ல பாங்குடைத் திருத்தல்—வாழ்க்கைக்கு இதுவே திறவுகோல்.

அவனருளாலே அவன்தாள் வணங்கி.

— மாணிக்கவாசகர்

தபோதனன்

நான் தேடுவனவற்றுள் தெய்வமே, நீ ஒருவனே பழுதற்ற பொருள்.

தெய்வத்துக்கு நாம் ஏதைக் கொடுக்கின்ருேமோ அவன் அதைப் பனமடங்கு அதிகப்படுத்தி நமக்கே கொடுத்துவிடுகிருன். அவனுக்கு நாம் படைப்பவைகளில் மிக மேலானது அவனைக் குறித்து நாம் பண்ணும் தவம். தவம் பண்ணப் பண்ண நம் தவத்தை அவன் இன்னும் அதிகப்படுத்துகிருன். தவமே வடிவெடுத்திருப்பவன் தெய்வத்துக்கு ஒப்பாகிருன். சிறந்த தவசியைக் காண்பதும் தெய்வத்தைக் காண்பதும் ஒன்றே.

எவ்வுயிருந் தன்னுயிர்போல்
எண்ணுந் தபோதனர்கள்
செவ்வறிவை நாடிமிகச்
சிந்தைவைப்ப தெந்நாளோ?

— தாயுமானவர்

ஜூன் 6 வைகாசி 24

முன் ஏற்பாடு

முழுமுதற் பொருளே, என் உடல் எப்பொழுது, எங்கு, எவ்வாறு வீழும் என்பதையும் அறியாதபடி இப்பொழுதே உன்னை நான் உறுதியாகப் பற்றிப் பிடித்துக்கொள்வேனாக.

பெரிய பட்டணம் ஒன்றுக்கு வழிப்போக்கனாக வரும் ஒருவன் முதலில் தங்குதற்கு நல்ல இடம் தேடிக் கொண்டு பிறகு ஊர் சுற்றிப்பார்க்கலாம். அப்படிச் செய்யாவிட்டால் இராத்தங்க இடமில்லாது தவிக்க வேண்டியதாகும். இவ்வுலகுக்குள் வந்துள்ள நாம் மரணம் என்னும் இரவு வருவதற்கு முன்பே இறைவனது திருவடியைத் தங்குமிடமாகச் செய்துகொள்ள வேண்டும்.

எய்ப்பு என்னை வந்து நலியும்போது அங்கு
ஏதும் நான் உன்னை நினைக்கமாட்டேன்
அப்போதைக்கு இப்போதே சொல்லிவைத்
தேன், அரங்கத் தரவணைப் பள்ளியானே.

— பெரியாழ்வார்

ஜூன் 7 வைகாசி 25

கடமை

கருத்துடன் என் கடமையைச் செய்வதே உன் வழிபாடு என்பதை இறைவா, நான் கற்றுக்கொள்வேனாக.

கடமையைச் செய்வதே கடவுள் வழிபாடு. ஆகையால் அதில் மேலானது, கீழானது என்பதில்லை. சுயநலம்படைத்தவனே கடமையைத்தொல்லையென்று கருதுகிறான். சலிப்பும் சஞ்சலமும் சுயநலத்தினின்று வருகின்றன. ஆகையால் கடமையைக் கருத்துடன் செய்யாதவன் ஒழுக்கம் தவறியவனே. தொடர்ந்து மகிழ்வுடன் தன் கடமையைச் செய்பவன் கடவுளுக்கு உகந்த கருவியாகிறான்.

कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन

கர்மண்யேவாதிகாரஸ்தே மா பலேஷு கதாசன

— பகவத்கீதை

செய்கருமத்தேயன்றிச் சேரும்பயன்தன்னில்
ஐயவுனக் கில்லை அதிகாரம்.

— பகவத்கீதை வெண்பா

ஜூன் 8 வைகாசி 26

தூண்டில்

தகையே, உன்னைப் பிடிப்பதற்கு நானே தூண்டிலாக இருக்க, நான் இன்னும் உன்னை அடையாதிருப்பது ஏனோ!

மீன் பிடிக்க விரும்பும் ஒருவன் ஏற்கனவே மீன் பிடித்த மற்றொருவனிடம் சென்று அது சம்பந்தமான செய்திகளைக் கேட்டு அதன்படி நீர் நிலையில் தூண்டில் போடுகிறான். சாதகன் ஒருவன் முதலில் கடவுளை அடைந்த ஆன்றோர் சொல் கேட்கிறான். பிறகு அதன் படி தன் மனது என்னும் தூண்டிலில் பக்தியென்னும் இரையை மாட்டிக் கடவுள் பால் வீசி அமைதியுடன் நெடுநாள் காத்திருக்கிறான்.

அங்கத்தை மண்ணுக் காக்கி
ஆர்வத்தை உனக்கே தந்து
பங்கத்தை போக மாற்றிப்
பாவித்தேன் பரமா நின்னைச்
சங்கொத்த மேனிச் செல்வா
சாதல்நாள் நாயேன் உன்னை
எங்குற்றாய் என்ற போதால்
இங்குற்றேன் என்கண் டாயே.

— அப்பர்

சிற்பி

சிற்பி ஒருவன் சிலையைச் செதுக்கி உருவாக்குவதுபோன்று உன்னைப் பற்றிய எண்ணத்தால் அண்ணலே, என்னை நான் உருவாக்குவேனாக.

முன் எண்ணியது பின் விளைகிறது. விலக்க முடியாத வல்வினையென்பது முன் எண்ணிய தீய எண்ணங்களாம். வேண்டப்படும் நற்பயன் என்பது முன் எண்ணிய நல்லெண்ணங்களாம். காரண காரியமாக, வினையும் வினைப்பயனும் வந்தமைகின்றன. வினைப்பயன் என்பது எண்ணும் எண்ணத்தில் இருக்கிறது. நலத்தையே எண்ணி, நலத்தையே பேசி, நலத்தையே செய்பவன் தன்னை நல்லானுக்கும் சிற்பியாகிறான்.

**என்னித் தம்மை நினைந்திருந்தேனுக்கு
அன்னித்திட்டமு தூறுமென் நாவுக்கே.**

— அப்பர்

ஜூன் 10 வைகாசி 28

சினம்

செம்பொருளே, நான் சினத்தின் வசப் பட்டு விடுவேனாகில் உன்னைச் சேவிக்கத் தகுதியற்றவன் ஆய்விடுவேன்.

அவன் என்னைத் திட்டினான், அடித்தான், வென்றான் ஏமாற்றினான்-இத்தகைய எண்ணமுடையார் சினத்தை வெல்லமுடியாது. இத்தகைய எண்ணங்களுக்கு மனத்தகத்து இடங்கொடாதவர்களே சினத்தை வெல்லுவர். இவ்வுலகில் சினத்தைக் கொண்டு சினத்தை ஆற்றிவிட முடியாது. சினமின்மையைக் கொண்டே சினத்தை வெல்லலாம்.

சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.

— திருக்குறள்

தேடுதல்

தேவே, உன்னைத் தேடிப்பெறுதல் என்பது ஒருநாளும் ஆகிற காரியமல்ல. இத்தனையுமாயுள்ள உன்னை இங்கு இப்பொழுது தெரிந்து கொள்ளுதலே முறை.

உலகனைத்துமாய் வடிவெடுத்திருப்பவர் கடவுள். அவரை இங்குமங்கும் தேடுவது வீண். அவரைக் காணுதற்கான பான்மையுடையவர் பார்க்குமிடமெங்கும் அவரையே காண்பர். அவரைக்காண இயலாதார் குருடனுக்கு ஒப்பாவர். குருடன் எங்குத் தேடினலும் சூரிய வெளிச்சத்தைக் காணமுடியாது. ஞானக்கண்ணில்லாதார் தெய்வத்தை எங்கு தேடியும் காணமாட்டார். ஞானக்கண்ணுடையார் அவரைத் தேடுவதில்லை. யாண்டும் கடவுளையே காண்கின்றனர்.

தேடினேன் திணைக்கத்துந் தெண்டனிட்டேன்
சிந்தை நைந்து
வாடினேன் என்மயக்கம் மாற்ருய் பராபரமே.

— தாயுமானவர்

சௌசம்

சுத்தனே, நான் சுத்தமாயிருந்து உன்னைச் சேவிக்கச் கற்றுக் கொள்வேனாக.

மானுட அமைப்பில் ஸ்தூலமாயிருப்பது சரீரம். அதை யாண்டும் சுத்தமாய் வைத்துக்கொள்ளுதல் சௌசம். உடலைச் சுத்தமாக வைத்துக்கொள்ளத் தெரியாதவன் உள்ளத்தைச் சுத்தமாக்க முடியாது. யோகி ஒருவன் வாழ்ந்திருக்கும் இடமும் சுத்தமாயிருக்க வேண்டும். சுத்தமான சூழ்நிலை மனதைச் சாந்தப்படுத்துகிறது. உள்ளும் புறமும் சுத்தமாயிருத்தல் சௌசம்.

சுத்த அறிவாய்ச் சுகம்பொருந்தின்
அல்லால் என்
சித்தந் தெளியாதென்
செய்வேன் பராபரமே.

— தாயுமானவர்

மானுட அன்பு

மாண்பொருளே, மானுட அன்பினின்று விலகி உனது தூய அன்பிலே ஊறியிருப்பேனாக.

மானுட அனபு இன்பம் போன்று துவக்கித் துன்பமாய் முடியும். தெய்விக அன்பு பிரிவிலும் மரணத்திலும் துன்பத்தை உண்டுபண்ணாது. உள்ளிருக்கும் தெய்வத்தின் பொருட்டே மானுடன் நேசிக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் அது அசையாத அன்பு ஆகும். உற்றாரை முன்விட்டுப் பூரித்திருப்பது மானுட அன்பு. உற்றார் யாருமில்லாத பொழுதும் நிறைந்திருப்பது தெய்விக அன்பு. மானுட அன்பு வலுக்குமளவு தெய்விக அன்பு குறைந்துவிடும்.

அன்பாற் கரைந்துகண்ணீர்
ஆறுகண்ட புண்ணியருக்கு
உன்பால் வரவழிதான்
உண்டோ பராபரமே.

— தாயுமானவர்

ஜூன் 14 ஆனி 1

புனிதன்

பண்டைப் பரம்பொருளே, நீ புனிதன் ஆதலால் அனைத்துக்கும் அனைவர்க்கும் நீ பொது.

கலப்பற்றது எதுவோ அது புனிதமானது. தன்மையில் கிட்டத்தட்ட ஒத்திருக்கும் இரண்டு பொருள்கள் ஒன்றோடொன்று கலக்கின்றன. மாசு என்பதும் கலப்பு என்பதும் ஒன்று. தெய்வத்துக்கு ஒப்பான பொருள் ஒன்றுமில்லை. தெய்வம் கலப்பு எடுத்துக் கொள்ளுதலுமில்லை. அது என்றைக்கும் தன்மயமாயுள்ளது. ஆகையால் அனைவரும் அதை நாடுகின்றனர்.

போற்றிஎன் பார்அம ரர்புனி தன்அடி
போற்றிஎன் பார்அசு ரர்புனி தன்அடி
போற்றிஎன் பார்மனி தர்புனி தன்அடி
போற்றிஎன் அன்புள் பொலியவைத் தேனே.

— திருமந்திரம்

இரவு

என் உள்ளத்தில் ஒளிரும் ஞாயிறே, நான் யாண்டும் உன் சந்நிதியில் இருப்பதால் எனக்கு இரவு என்பதில்லை. உலக ஆசை என்னும் கார்மேகம் தோன்றி உன்னை என் காட்சியினின்று மறைத்து விடலாகாது.

கார் இருளில் ஒன்றும் புலப்படுவதில்லை. தன் உடலே தனக்குத் தெரிகிறதில்லை. உடலின் நிறமும் அதில் படிந்திருக்கும் அழுக்கும் தனக்குத் தெரிவதில்லை. அத்தகைய இருளிலும் தான் இருப்பதைத் தானே உணர்கிறன். தன்னை அறியும் ஞானச் சுடர் தெய்வத்தினிடமிருந்து வந்தது. தன்னைத் தனக்குத் தானே விளக்கிக்காட்டுதற்கு வேறு ஒரு வெளிச்சமும் வேண்டியதில்லை. தன்னை அறிதற்கு இரவு இடைஞ்சல் அல்லது.

இரவுபக லற்றவிடத் தேகாந்த யோகம்
வரவுந் திருக்கருணை வையாய் பராபரமே.

— தாயுமானவர்

ஜூன் 16 ஆனி 3

துன்பம்

துன்பம் வேண்டாம் என்பவரெல்லாம் தேவே; உன்னை வேண்டுமென்று எதிர் மறையில் இயம்புகின்றனர்.

கல்வி கற்க இயலாத மாணக்கன் பள்ளிக் கூடத்தில் துன்பப்படுகிருன். உயிர் வாழ்க்கை என்னும் பள்ளிக்கூடத்தில் ஒழுங் குப்பாடு என்னும் கல்வி கற்க இயலாதவர் களெல்லாம் துன்பப்படுகின்றனர். கேடு நினைக்கின்றவனும் கேடு செய்கின்றவனும் ஒரே நிலையில் இருக்கின்றனர். மனம் ஒழுங்கு கெட்டிருக்கும்போது அது துன்பம் துய்க் கிறது. மனதிலுள்ள அழுக்கே துன்பமாகத் தோன்றுகிறது.

துன்பக் கடலில் துளைந்ததெலாந் தீர்ந்ததே
இன்பக் கடலில் இருமென்ன—அன்பில்
கரைந்து கரைந்துருகிக் கண்ணருவிகாட்ட
விரைந்துவரும் ஆனந்த மே.

— தாயுமானவர்

அருள்பற்று

அண்ணலே, உன்னைப் பற்றிப் பிடிக்குமளவு மண்ணுலக வாழ்வு என்னை விட்டு மாயமாய் மறைந்து போகிறது.

மண்ணுலகினின்று விண்ணுலகுக்கு மனிதனை எடுத்துச்செல்லுவது அருள்பற்று. அஞ்ஞான இருளினின்று ஞான ஒளியில் அது கொண்டுசேர்க்கிறது. அருள் நாட்டம் வருகிறபொழுதுமனிதன் கீழ்மையை அகற்றத் தீர்மானித்துக்கொண்டான் என்பதாகிறது. அருள் நாட்டம் இல்லையென்றால் மனிதன் இன்னும் விலங்குத் தன்மையிலேயே திளைத்திருக்கிறான் என்று அது நிரூபிக்கிறது. அருள்பற்றினின்று அறமும், இரக்கமும், தூய்மையும், அன்பும் தோன்றுகின்றன.

அருளாகி நின்றசுகம் ஆகாமல் ஐயோ
இருளாகி நிற்க இயல்போ பராபரமே.

— தாயுமானவர்

ஜூன் 18 ஆனி 5

ஞானப்பிறவி

பரம்பொருளே, உன்னை நான் அறிந்து கொள்ளும்பொழுது பெருவாழ்வு என்னும் புதிய பிறவி எடுக்கிறேன்.

உடல்கள் பல எடுப்பது எல்லா உயிர்களுக்கும் பொதுவானது. புதிய உடல் எடுத்திருப்பதைக் குறித்து மனிதன் மகிழ்ந்திருக்க வேண்டியதில்லை. ஞானம் உதயமாகும் பொழுது இறைவனது மகிமை உள்ளபடி தெரிகிறது. ஞானத்தில் பிறந்திருப்பவரே நல்வாழ்வு வாழ்கின்றனர். உள்ளும் புறமும் தெய்வ சாந்நித்தியத்தை உணர்பவரும் அவர்களேயாம்.

அன்றுநான் பிறந்திலேன்
பிறந்தபின் மறந்திலேன்
நின்றதும் இருந்ததும்
கிடந்ததும் என்நெஞ்சுளே.

— திருமழிசை ஆழ்வார்

ஜூன் 19 ஆனி 6

புயல்காற்று

காமம் குரோதம் என்னும் புயல்காற்று என் மனத்தினுள் வந்து அடியாது இறைவா, என்னைப் பாதுகாப்பாயாக.

புயல்காற்று உறுதியற்ற மரத்தை அடித்து வீழ்த்துகிறது. சிற்றின்பம் நாடுபவனைக் காமம் என்னும் புயல் காற்று வீழ்த்துகிறது. மலை ஒன்றைப் புயல் காற்று ஒன்றும் செய்ய முடியாது. ஆசையை அகற்றி, அளவுடன் அருந்தி, புலன்களை வென்று, பேருக்கமே வடிவெடுத்திருப்பவன் மலை போன்றவன். புயல் காற்று அவனை ஒன்றும் செய்யாது.

ஆசையெனும் பெருங்காற்றூடு இலவம்பஞ்
சௌவும்மனது அலையுங் காலம்
மோசம்வரும் இதனாலே கற்றதுங்கேட்
டதுந்தூர்ந்து முத்திக் கான
நேசமும்நல் வாசமும்போய்ப் புலனாயிற்
கொடுமைபற்றி நிற்பர் அந்தோ!
தேசுபழுத் தருள்பழுத்த பராபரமே!
நிராசையின்றேல் தெய்வ முண்டோ?

— தாயுமானவர்

பேரன்பு

இறைவா, என் உள்ளத்தை ஒழுங்குப் படுத்துவாயாக. உள்ளம் துப்புரவாய்விட்டால் அது பேரன்பு பூண்டு நேசிக்கவல்லதாகும்; துன்பத்தை உறுதியுடன் தாங்கும்; எடுத்த கருமத்தை உறுதியுடன் செய்யும்.

பெரியதில் மிகப்பெரியது பேரன்பு. மனதுக்குக் கசப்பாய் இருப்பதை அன்பு இனிப்பானதாக்குகிறது. தடுமாற்றத்தை அது அமைதியானதாக்குகிறது. மண்ணுலகிலும் விண்ணுலகிலும் அன்புக்கு ஒப்பானது ஒன்றுமில்லை. கடவுளிடத்திருந்தே வந்தது அது. ஆகையால் சகல சுதந்திரத்தையும் அன்பு நல்குகிறது. தன்னிடத்து உள்ளதையெல்லாம் அன்பு வாரிக்கொடுக்கிறது. தனக்கென்று அது எதையும் கேட்பதில்லை.

அன்பைப் பெருக்கிஎனது ஆருயிரைக்
காக்கவந்த
இன்பப் பெருக்கே இறையே பராபரமே.

— தாயுமானவர்

ஜூன் 21 ஆனி 8

தோட்டக்காரன்

தேவே, நீ தோட்டக்காரன். நீ விதையிட்டு, வேலி கட்டி, எருப்போட்டு, நீர் பாய்ச்சி வளர்க்கும் செடி நான்.

எந்தத் தோட்டக்காரனுவது ஒரே வகைச் செடியை உண்டுபண்ணுதலில் மகிழ்ச்சியடைவதில்லை. விதவிதமான செடிகள், பல நிறமுடைய பூக்கள், வேறு வேறு சுவையுள்ள கிழங்கு, காய்கனி வகைகள் உற்பத்தியாக்குதலில் அவனுக்குப் பரமதிருப்தி. சர்வேசுவரன் ஒரு நல்ல தோட்டக்காரன். எத்தனைவிதப் பாங்குடைய உயிர்வகைகளை, சிறப்பாக மக்களை அவன் படைத்திருக்கிருன்! இவையனைத்துக்கும் அவனுடைய தோட்டமாகிய பிரபஞ்சத்தில் இடமுண்டு.

எழுவகைத் தோற்றத்
திருந்துவிளை யாடினதைப்
பழுதறவே பாராமற்
பயனிழந்தேன் பூரணமே.

— பட்டினத்தார்

ஜூன் 22 ஆனி 9

விந்தை

சர்வேசுவரா, நீ எனக்குச் சொந்தமாயிருந்தும் நான் ஒன்றும் இல்லாதவன் போல் வருந்துவது எதற்காக?

மனிதன் செயல் விந்தைக்கேதுவானது. இவனுடைய உடல் அழியும் தன்மையது. அது தேய்ந்து, தளர்ந்து, மறைவது திண்ணம். அத்தகைய நிலையற்ற உடலை நிலைபேறு உடையதாக்க மனிதன் ஓயாது முயன்று வருகிறான். நலன் அனைத்துக்கும் முதலாயிருப்பது கடவுள் அருள். கடவுள் அருளை நாடுபவர்க்கு அதை நல்க அவர் காத்துக்கொண்டிருக்கிறார். அருளைப் பெற முயலாது உடலை உறுதிப்படுத்த மனிதன் ஓயாது முயலுகிறான், என்னே!

பொய்யெல்லாம் ஒன்றாய்ப்
பொருத்திவைத்த பொய்யுடலை
மெய்யென்றால் மெய்யாய்
விடுமோ பராபரமே?

— தாயுமானவர்

ஜூன் 23 ஆனி 10

பரிபாகம்

நல்லார்க்கினியவனே, உன் பொருட்டு என்னைப் பக்குவப்படுத்துதலைத் தவிர நான் வேறொன்றும் அறியேன்.

பரிபாகம் அடைவதில் பிரபஞ்சம் முழுதும் பூரிக்கிறது. பூக்கள் மலர்கின்றபொழுது ஒரு விதப் பூரிப்பு வருகிறது. காய்கள் கனிகின்ற பொழுது திரும்பவும் பூரிப்பு. தானியம் விளைந்து அறுவடைக்கு ஆயத்தமாய் இருக்கும்போதும் மகிழ்வு. மாணாக்கனுக்குப் பள்ளிப் படிப்புப் பூர்த்தியாகும்போது பூரிப்பு. இதையெல்லாம்விட மனிதன் தெய்வத்தை அடைதற்கான பரிபாகம் அடையும்பொழுது பிறக்கும் ஆனந்தம் எல்லையற்றது.

பரிவா யெனக்கு நீ யறிவிக்க வந்ததே
பரிபாக கால மலவோ!

— தாயுமானவர்

வெற்றி

விமலா, வெற்றிகளுள் பெரியது நான் உன்போன்று விமலன் ஆதல்.

சிஷ்யன் ஒருவன் குருவிடம் சென்று, தனக்குச் சந்நியாசம் தந்தருள வேண்டும் என்ருன். “நீ மனதை வென்று விட்டாயா?” என்ருர் குரு. “தேவரீர் தான் அதைத் தெரிந்துகொள்ள முடியும்” எனச் சிஷ்யன் மறுமொழி கூறினுன். சிஷ்யனின் நாவை நீட்டச்சொல்லி அதில் சர்க்கரைக் குவியல் ஒன்றை வைத்தார் குரு. சில நிமிஷங்கள் கழிந்தும் அது கரையவில்லே. “உன் மனதை நீ வென்று விட்டாய்” என்று சொல்லி குரு சிஷ்யனுக்குச் சந்நியாசம் கொடுத்தார்.

வென்றிட லாகும் விதிவழி தன்னேயும்
வென்றிட லாகும் வினைப்பெரும் பாசத்தை
வென்றிட லாகும் விழைபுலன் தன்னேயும்
வென்றிடுமங்கைதன் மெய்யுணர்வோர்க்கே.

— திருமந்திரம்

நியாசம்

உலகின்கண் செல்லுகிற எனது இயல் பனைத்தையும் இறைவா, உன்னிடம் திருப்பி விடக் கற்றுக்கொள்வேனாக.

ஓடையை அணைபோட்டு அடியோடு நிறுத்திவிட முடியாது. மடைமாற்றி வேறு இடத்துக்கு ஓடும்படி செய்யலாம். மனிதன் தன் இயல்புகளை அறவே மாற்றி விட முடியாது. இயல்புகள் அனைத்தையும் தெய்வத் தின்பால் திருப்பவேண்டும். போகத்துக்காக உழைத் தவன் பரத்துக்காக உழைக்கவேண்டும். புகழை நாடியவன் கடவுள் புகழ்ச்சியிலேயே மகிழ்ச்சியடைய வேண்டும். பொறி வழியே செல்லும் சிற்றியல்புகளை யெல்லாம் பரத்தை நாடும் பேரியல்பாக்க வேண்டும்.

தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பார்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனரு ளாலே.

— திருமந்திரம்

ஜூன் 26 ஆனி 13

திதிக்ஷை

தகையே, என்னைத் திருத்தியமைத்தற் பொருட்டு நீ துன்பத்தை அனுப்புகிறாய். நான் அதை மகிழ்வுடன் ஏற்றுக்கொள் வேனாக.

இறைவனது பெரிய திட்டம் ஓயாது வேலை செய்கிறது என்று அறிபவன் எதிரியை நேசிக்கிறான். பகை, எதிர்ப்பு, புகார் ஆகியவைகளை மீண்டு மேலே செல்லுகிறான். பகைவர் போன்று தென்படுபவர் மூலம் தன் செயலே தனக்குத் திரும்பிவருகிறது. கடன் கட்டுவது போன்று அவன் அமைதியுடன் இன்னல்களைப் பொறுத்துக்கொள்கிறான். புதிய கேடு எதுவும் தன் மனதில் உதிக்க அவன் இடம் கொடுப்பதில்லை.

சஞ்சலம்அற்று எல்லாம்நீ
தான்என்று உணர்ந்தேன்என்
அஞ்சலியும் கொள்ளாய்
அரசே பராபரமே.

— தாயுமானவர்

ஜூன் 27 ஆனி 14

சந்தோஷம்

மன்னே, நான் யாண்டும் மகிழ்வுற்றிருப்பது உனது ஆராதனையாகிறது.

மனத்தகத்து மலர்ச்சியும் அமைதியும் குடிகொண்டிருக்க வேண்டும். மனதில் திகழ்கின்ற பூரிப்பு உடல் வளர்ச்சிக்கும் உள்ளத்தின் வளர்ச்சிக்கும் இன்றியமையாதது. சோர்ந்த மனம் ஒன்றுக்கும் உதவாது. துன்பத்தில் வருந்திக்கொண்டிருப்பவர் தங்களுக்கும் நலம் செய்வதில்லை; உலகுக்கும் நலம் செய்வதில்லை. வருத்தப்படுகிற வேளையில் மற்றவர்கள் கண்ணுக்குத் தென்படாதிருப்பது நலம். மிகைப்பட்ட களியாட்டமும் வேடிக்கை நிறைந்த உவகையும் உதவா. வருத்தமும் மிகைபட்ட விளையாட்டும் மனதின் மாண்பைப் போக்கிவிடுகின்றன. இனிய திருப்தி நிலவேண்டும்.

அல்லலெல்லாந் தீரஎனக்கு
ஆனந்த மாகவொரு
சொல்லையென்பால் வைத்ததையென்
சொல்வேன் பராபரமே.

— தாயுமானவர்

அடிமை

இறையே, நான் யாண்டும் உனக்கே ஆட்பட்டிருப்பேனாக.

தீயைச் சேர்ந்த விறகுக்கட்டை தானே தீ மயம் ஆய்விடுகிறது. அப்பொழுது விறகுக் கட்டையிலுள்ள ஈரம் தானே போய்விடுகிறது. விறகுக் கட்டையில் ஒட்டியிருக்கும் குப்பை செத்தை முதலியனவும் தீ மயமாய்விடுகின்றன. கடவுளிடத்து அடிமை புகும் ஒருவன் தானே கடவுள் தன்மை யெடுத்துக்கொள் கிருன். கேடுகளெல்லாம் அவனை விட்டு நீங்கிவிடு கின்றன. கடவுளுக்கு அடிமையாதற்கு நிகரான செயல் இல்லை.

அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செ
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனுர்க்கு [யும்
எல்லையில்லதோர் அடிமைபூண் டேனுக்கே.

— அப்பர்

ஜூன் 29 ஆனி 16

வேட்கை

கோவே, என் உள்ளத்தில் கொந்தளிப்பு உண்டாகாதிருக்கும் வண்ணம் கருணைபுரிவாயாக.

காற்று வீசும்பொழுது தடாகத்தில் அலை கிளம்புகிறது; சேறு படிகிறது. காற்றில்லாத பொழுது அலை ஒடுங்குகிறது; சேற்று நீர் தெளிவடைகிறது. அலையும் சேறும் நிறைந்த தடாகம் போன்றது வேட்கை நிறைந்த உள்ளம். வேட்கை ஒழியுமளவு உள்ளம் தெளிகிறது; ஆத்ம சொரூபம் தென்படுகிறது. பிறகு தெளிந்த மனமே ஆத்ம சொரூபமாய் விடுகிறது.

வேதாந்தங் கேட்க விரும்பிய வேதியர்
வேதாந்தங் கேட்டும் தம்வேட்கை ஒழிந்திலர்
வேதாந்த மாவது வேட்கை ஒழிந்திடம்
வேதாந்தங் கேட்டவர் வேட்கைவிட் டாரே.

— திருமந்திரம்

அபரிக்ரஹம்

இறையே, உன்னை அடைதற்கு இடைஞ்சலாயுள்ள பொருள்களை நான் ஏலேன்.

தேவைக்கு மேற்பட்ட உணவை உண்டால் ஜீரணக் கருவி கெட்டுப்போம். தேவைக்கு மிஞ்சிய பொருள்களை உடைத்திருந்தால் அல்லது பிறரிடமிருந்து ஏற்றுக்கொண்டால் மனது கெட்டுப்போம். அதிகமான பொருள்களை வைத்திருப்பவன் அப்பொருள்களைப் பற்றி அடிக்கடி நினைத்தாகவேண்டும். அவைகளை நினைக்குமளவு மனது மாசுபடுகிறது. பிறர் தரும் பொருளை இலவசமாக ஏற்பதால் மனது பிறர்க்குக் கடமைப்பட்டதாகிறது. எதையும் இலவசமாக ஏற்கலாகாது. ஏற்பது இகழ்ச்சி.

இயல்பாகும் நோன்பிற்கொன்று இன்மை [உடைமை
மயலாகும் மற்றும் பெயர்த்து.

— *திருக்குறள்*

சமர்ப்பணம்

நதி தன்னைக் கடலில் கொட்டிவிடுவது போன்று நாதா, என்னை நான் உன்னிடம் கொடுத்துவிடுவேனாக.

பிறரைத் தன் காரியத்துக்குப் பயன் படுத்துபவனது மனம் குறுகுகிறது. தன்னைப் பிறர் காரியத்துக்காகவென்று ஒப்படைப்பவனது மனது விரிவடைகிறது. பிறர்க்குப் பயன்படுதலில் மகிழ்ச்சி யொன்று உண்டு. அம்மகிழ்ச்சி மாறாத்தன்மையது. மனிதனை அது மேலோன் ஆக்குகிறது. மற்றவர்களுக்குப் பயன்படுவதும் தன்னைத் தெய்வத்திடம் ஒப்படைப்பதும் ஒன்றே. தனக்கென்று வாழாது பிறர்க்கென்று வாழ்பவனே ஆத்ம சமர்ப்பணம் செய்தவனாகிறான்.

ஊனுக்குள் நீநின்று உலாவினதைக் காணாமல்
நானென் றிருந்து நலனழிந்தேன் பூரணமே.

— பட்டினத்தார்

சாந்தி

சர்வகாலமும் என் மனதை நடுநிலையில் வைத்திருக்க நல்லறிவே, நீ அருள்புரிவாயாக.

நாவை அடக்கியவன் நன்கு விவாதிப்பவனைவிட மேலானவன். மனதை அடக்கியவன் ராஜாதி ராஜனைவிட அதிகம் ஆற்றல் வாய்க்கப்பெற்றவன். தன்னை வென்றவன் தேவர்களுக்கும் மிக்கான் ஆகிறான். பந்தங்களிலிருந்து தன்னைத்தானே விடுவித்தாக வேண்டும். இவ்வுண்மையை உணர்ந்து அதற்காக உழைப்பவன் சாந்தியடைகிறான்.

நிலையில் திரியா நிறைகடலில்
நீர்கள் நுழைதல் போலெவன்பால்
அலகில் காமம் நுழைந்திடுமோ
அவனே சாந்திபெறுவானே.

— பகவத்கீதை வெண்பா

அரைமணி நேரம்

பரம்பொருளே, பரிபூரணத் தன்மையில் நான் முன்னேற்றம் அடையுமளவு எனது குற்றங்கள் குறையும்; துன்பங்கள் தொலையும். நான் பரிபூரண நிலையை நாடியிருப்பேனாக.

நல்வாழ்வுக்காக என்று நாள்தோறும் அரைமணி நேரம் ஒதுக்கிவை. உயர்ந்தபாங்கைப்பற்றி எண்ணிப்பார். பின்பு அதைப் பழக்கத்தில் கொண்டுவர முயலுக. ஆற்றலும் நல்லறிவும் உண்டாவதற்கு இதுவே உற்ற உபாயம். அவசரம் வேண்டாம்; உன் கடமையை ஒழுங்காகச் செய். கட்டுப்பாடும் சுயநலத் தியாகமும் வடிவெடுத்தவன் ஆவாயாக.

காலமே காலமொரு மூன்றுங் காட்டும்
காரணமே காரணகா ரியங்கள் இல்லாக்
கோலமே எனைவாவா என்று கூவிக்
குறைவறநின் அருள்கொடுத்தாற் குறைவோ
சொல்லாய்.

— தாயுமானவர்

ஆத்மபோதம்

பராபரமே, எனது பேரியல்பை உணர்வதே உனக்குகந்த வழிபாடாகிறது.

இராம காரியத்துக்காகக் கடல் கடந்து இலங்கைக்குச் செல்ல இயலாத ஹனுமான் பட்டினிகிடந்து சாகத் தீர்மானித்தான். அப்பொழுது அவனுடைய நிஜ சொரூபம் அவனுக்கு ஞாபகமூட்டப்பட்டது. ஆத்மபோதம் தலையெடுத்தது. பேருணர்ச்சியே வடிவெடுத்தவன் ஆனான். அவ்வுணர்ச்சி விசுவரூபமாக மாறியது. எக்காரியத்தையும் தன்னால் சாதிக்கமுடியுமென்று அவன் உறுதிகட்டினான். அப்படியே செய்து முடித்தான். அந்த ஆத்மபோதம் நம் அனைவர்க்கும் சொந்தம்.

ஆவிக்குள் ஆவியெனும் அற்புதனார் சிற்சுகந்தான்
பாவிக்குங் கிட்டுமோ சொல்லாய் நீ பைங்கிளியே.

— *தாயுமானவர்*

வாய்மை

வேந்தே, உன் மகிமைகளைச் சதா வாய் விட்டுப் பேசிக்கொண்டிருப்பது உன் வழி பாடுகளுள் முக்கியமானதொன்றாகும்.

பேசவேண்டியதைப் பண்புடன் பேசுவது வாய்மையாகும். மிகைபடப் பேசுதலே நோய் களுள் கொடிய நோயாம். வாய்ப்பொத்திப் பேசாதிருக்கக் கற்றுக்கொள்ளுதல் பாடங் களுள் முதல் பாடமாகும். பிறகு, பயன்படு வதையே பேசவேண்டும். அதையும் இன் சொற்களால் பேச வேண்டும். வற்புறுத்திப் பிறர்மீது நம் வாக்குகளைத் திணிக்கலா காது. நாம் பேசியது போதவில்லையென்ற உணர்ச்சி கேட்பவரிடம் உண்டாகும்படி சுருங்கப் பேச வேண்டும்.

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும் தீமை இலாத சொலல்.

— *திருக்குறள்*

சுவர்க்கமும் நரகமும்

சுவர்க்கத்தையோ நரகத்தையோ எனக்கு நானே உண்டுபண்ணிக் கொள்கிறேன் என்பதை நான் விரைவில் உணர்ந்துகொள்ள வேணுக.

துரியோதனனும் தர்மராஜாவும் ஒரே ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். துரோணுச்சாரியர் என்ற ஒரே குருவிடம் பயிற்சி பெற்றவர்கள். ஆனல் குருவின் ஆக்ஞைப்படி நல்லவன் யாராவது உண்டாவென்று உலகில் தேடிப்பார்த்த துரியோதனனுக்கு நல்லவன் யாரும் தென்படவில்லை. தர்மனுக்கோ கெட்டவன் யாரும் அதே உலகில் அதேகாலத்தில் அகப்படவில்லை. நலம், கேடு எங்கே இருக்கின்றன? உலகில் அல்ல, தன் மனதில்.

நல்ல மனமுடையவர்க்கு
உலகமெல்லாம் சுவர்க்கம்.
கெட்ட மனமுடையவர்க்கு
அதே உலகம் நரகம் .

ஜூலை 7 ஆனி 24

மலை

மாண்பொருளே, மேலான எண்ணங்கள் மலைபோன்று என்பால் வளர்ந்திருப்பன வாகுக.

மணல் ஒன்ருேடொன்று ஒட்டி இறுகி மலையாகிறது. இயற்கையில் ஓயாது நிகழ்ந்து வரும் நிகழ்ச்சியின் பயன் இது. இங்ஙனம் எண்ணத்தின் தொகை மனிதன். எண்ணத்தை நல்லதாக்கிவிட்டால் மனிதனும் நல்லவனுகிருன். மற்று, எண்ணத்தைக் கெடுத்துவிட்டால் மனிதன் தானே கெட்டவனுகிருன். விரைவில் ஒருவன் கெட்டுப்போய் விடலாம். ஆனல் நல்லவன் ஆதற்கோ மலையின் வளர்ச்சிபோன்று நெடுநாள் ஆகிறது.

நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

— திருக்குறள்

குழந்தை

அண்ணலே, நான் யாண்டும் உன் குழந்தை என்பதைக் கருத்தில் வைத்துக் கொள்வேனாக.

குழந்தையினிடத்து அகங்காரமில்லை. விசுவ மனதில் குழந்தை திளைத்திருக்கிறது. ஆகையால் அனைவர்க்கும் அது சொந்தம். உற்றார் என்றும் வேற்றார் என்றும் அது மக்களைப் பிரித்து வைப்பதில்லை. கள்ளம் கபடமற்றது அது. நேர்மையே வடிவெடுத்தது குழந்தை. மனிதன் தன்னைக் கடவுளின் குழந்தையாக வைத்துக்கொண்டால் அவனது தொல்லை போய்விடும்; நன்மை யாவும் உண்டாகும்.

பாலரொடு பேயர்பித்தர்
பான்மையென நிற்பதுவே
சீலமிகு ஞானியர்தஞ்
செய்கை பராபரமே.

— தாயுமானவர்

அலைக்கழிப்பவர்

சிறுவன் ஒருவன் தூணைக்கட்டிக் கொண்டு சுற்றியோடுவது போன்று, தெய்வமே உன்னை நான் சிக்கெனப்பிடித்துக் கொண்டால் என்னை ஒன்றும் வருத்தப்படுத்தாது.

மனிதன் அல்லல்படுகிருன். அவனை அல்லல் படுத்தியது யார்? வெளித்தோற்றத்துக்கு யாரோ அலைக்கழித்தது போன்று தென்படுகிறது. உண்மையில் ஒவ்வொரு மனிதனும் தன்னைத்தானே அலைக்கழித்துக் கொள்கிருன். வெளித்தோற்றம் வேறு, உள்ளிருக்கும் உண்மை வேறு. ஒவ்வொரு மனிதனும் தான்படும் துயரத்துக்குத் தானே பொறுப்பாளி.

கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்ருேர்க் கணி.

— *திருக்குறள்*

அடைக்கலம்

முன்னை முழுமுதற்பொருளே, உன்னை நான் அடைக்கலம் புகுந்துவிட்டால் பின்னை என்னை வருத்தும் துன்பம் யாது உளது?

தந்தையின் கையைப் பிடித்துக்கொண்டு நடக்கும் குழந்தை எச்சரிக்கையாக இருக்கவேண்டும். ஆனால் தந்தையினால் சுமந்து எடுத்துச் செல்லப்படும் குழந்தைக்குக் கவலையொன்றுமில்லை. கைகொட்டி அது மகிழ்ந்திருக்கலாம். தெய்வத்திடம் அடைக்கலம் புகும் அன்பர்கள் பாங்கு அத்தகையது. பொறுப்பு அனைத்தும் கடவுளுடையது ஆகிறது. அடைக்கலம் புகுகிறவர் அக்கணமே அமைதியுறலாம்.

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே. — மாணிக்கவாசகர்

நீர்த்துளி

என் ஆருயிரே, உன் போதத்தாலே நான் உயிர் வாழ்ந்துள்ளேன்.

கடலில் உள்ள நீர்த்துளி ஒன்றினிடத்துக் கடலின் தன்மையனைத்தும் அமைந்திருக்கிறது. அந்நீர்த்துளியை முற்ற அறிவதும் கடலை அறிவதும் ஒன்றே. ஆனால் கடலினின்று அந்தத் துளியைப் பிரித்துவைத்தால் அது விரைவில் உலர்ந்துபோம். அதைக் காப்பாற்ற யாராலும் முடியாது. நீர்த்துளி போன்றவன் மனிதன். கடல் போன்றவர் கடவுள். மனிதன் கடவுளைவிட்டுப் பிரிந்தால் அழிந்துபோவான்.

நின்போதத் தாலே
நினைப்பு மறப்புமென்றால்
என்போதம் எங்கே
இயம்பாய் பராபரமே.

— தாயுமானவர்

சுயேச்சை

செம்பொருளே, உனக்கும் எனக்கும் உள்ள தொடர்பைப் பிரிக்க வல்லவர் யார்?

நம்மைத் துன்பத்தில் தளைப்பதும், துன்பத்தளையி னின்று விடுவிப்பதும் நமது எண்ணம். சங்கிலியில் கட்டுண்டு கிடந்து சித்திரவதை செய்யப்படும் அடிமை ஒருவன் தனது சுயேச்சையின் வலிவால் உடலின் வேதனையைக் கடந்தவன் ஆய்விடலாம். அத்தகைய வனை யாரும் கட்டுப்படுத்த முடியாது. சுயேச்சை யுடைய ராஜா ஒருவனை ராஜபோகம் கட்டுப்படுத் தாது. பந்தத்திலோ, போகத்திலோ கட்டுப்படாத வனே உண்மையான மனிதன்.

நாமார்க்குங் குடிஅல்லோம்
நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம்
நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணிஅறியோம்
பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை.

—அப்பர்

பேரறிவு

அண்ணலே, உன்னை நான் அறியும் பொழுது அனைத்தையும் அறிந்தவன் ஆகிறேன்.

பெரிய பொருளை அறிந்தவனுக்கு ஆவலில்லை, அச்சமில்லை, ஏமாற்றமில்லை, பதைபதைப்பில்லை. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவன் அமைதியே வடிவெடுத்தவன் ஆகிறான். எதுவும் அவனைத் துன்புறுத்தாது. மனிதன் மடியும்போது உடைவது ஓடு; எஞ்சியுள்ள பேரறிவுப் பொருளே அம்மனிதனது நிஜசொருபம். பேரறிஞனை யாரும் துன்புறுத்த முடியாது. ஏனென்றால் நிறைபொருளோடு அவன் ஒன்றித்துவிட்டான்.

அறிவோடு அறியாமை அற்று அறிவினூடே குறியில் அறிவுவந்து கூடுநாள் எந்நாளோ ?

— தாயுமானவர்

சத்திய தேவதை

சத்திய தேவதையின் ஆட்சியிலிருப்பது நல்வாழ்வு. அதற்குச் செங்கோலாயிருப்பது சாந்தம். அதற்குச் சிம்மாசனமாயிருப்பது மாந்தர் உள்ளம்.

இரண்டுவித அரசர்கள் நமது உள்ளத்தை ஆளமுயலுகிறார்கள். ஒருவன் கொடுங்கோல் வேந்தன், பொய்யன். காமமும், குரோதமும், போராட்டமும் அவனது செயல். மற்றொருவன் செங்கோல் வேந்தன், சத்தியசொரூபி. தூய்மையும், அன்பும், அமைதியும், அடக்கமும் அவனது செயல். இவ்விருவருள் யாரை நாம் மனத்தகத்து வீற்றிருக்கச் செய்வது? சத்திய வேந்தன் சித்தமிசை குடிகொள்ள இடம்கொடுப்போமானால் நாம் பாக்கியவான்கள் ஆவோம்.

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்
வாய்மையால் காணப் படும். [தூய்மை

— திருக்குறள்

யோகம்

எம்பெருமானே, உன்னை உணர்ந்து உன் சொரூபம் ஆதற்கே நான் உயிர்வாழ்ந்திருக்கிறேன்.

அரசாங்கத்தின் பிரதிநிதியாயிருந்து ஆணை செலுத்துபவனே அதிகாரி எனப்படுகிறான். தன்னைக் கடவுளின் பிரதிநிதியாக்குபவனே யோகியாகிறான். தன் செயலையெல்லாம் கடவுள் செயலாக மாற்றுவது யோகம். கருவி கரணங்களை அடக்கியாளுதலும் யோகம். எல்லாவுயிர்களிடத்தும் பேரன்பே வடிவெடுத்திருப்பதும் யோகம். அனைத்தும் ஒரு பொருளின் பல்வேறு தோற்றங்கள் என்று அறிவதும் யோகம்.

யோகச் சமாதியின் உள்ளே யகலிடம்
யோகச் சமாதியின் உள்ளே யுளரொளி
யோகச் சமாதியின் உள்ளே யுளசக்தி
யோகச் சமாதி யுகந்தவர் சித்தரே.

— திருமந்திரம்

உயிர்

என் ஆருயிரே, உன்னைப் பேணுதல் ஒன்றே நான் பெறும் பேறு ஆகும்.

விலையுயர்ந்த ஆபரணம் ஒன்று வைத்திருக்கும் அட்டைப்பெட்டிக்குப் பெரிய பாதுகாப்பு உண்டு. ஆபரணத்தை எடுத்தான பிறகு அட்டைப்பெட்டியைக் குப்பையில் போட்டுவிடலாம். நம் உடல் அட்டைப் பெட்டி போன்றது. உயிரோ ஆபரணம் போன்றது. உயிரின் பொருட்டு உடலுக்கு மதிப்புண்டு.

வேங்கட நாதனை வேதாந்தக் கூத்தனை
வேங்கடத்துள்ளே விளையாடு நந்தியை
வேங்கடம் என்றே விரகறி யாதவர்
தாங்கவல் லாருயிர் தாமறி யாரே.

— திருமந்திரம்

ஜூலை 17 ஆடி 2

மழை

நீ கருணாகரன்; மழைநீர் போன்று உன் கருணை எல்லார்க்கும் சொந்தம்.

வானத்தினின்று தூயதாக மழைநீர் கீழே இறங்குகிறது. பூமியில் உள்ள இடத்தின் குண தோஷம் பாராது அது எங்கும் சமமாக வீழ்கிறது. அதனதன் பாங்குக்கு ஏற்ப ஒவ்வோர் இடமும் மழைநீரைப் பயன்படுத்து கிறது. அதைப் பயன்படுத்தாது விட்டுவிடு கிற இடமும் உண்டு. ஈசுவர கிருபை எல் லார்க்கும் சொந்தம். அதை நன்கு பயன் படுத்தத் தெரிந்துகொள்ளவேண்டும்.

வானமாய் நின்று இன்ப மழையாய் இறங்கி எனை வாழ்விப்பது உன்பரங்காண்.

— தாயுமானவர்

தெய்வ அசுரச் சம்பத்து

அசுரச் சம்பத்தை அகற்றி தெய்வச் பம்பத்தைத் தேவே, எனக்குத் தந்தருள்வாயாக.

அசுர இயல்புமறைத்து வைக்கிறது; தெய்வ இயல்பு வெட்டவெளியாக்குகிறது. நண்பன் செய்த கேட்டை அசுர இயல்பு ஞாபகத்தில் வைக்கிறது; கொடிய பகைவனையும் தெய்வ இயல்பு மன்னித்துவிடுகிறது. அசுர இயல்பு ஆரவாரம் செய்கிறது. தெய்வ இயல்பு அமைதியுற்றிருக்கிறது. அசுர இயல்பு அவசரப்பட்டுக் கோபிக்கிறது; தெய்வ இயல்பு பொறையே வடிவெடுத்திருக்கிறது. விவேகமற்றது அசுர இயல்பு; விவேகமே வடிவெடுத்தது தெய்வ இயல்பு.

பொய்க்காட்சி யான
புவனத்தை விட்டுஅருளாம்
மெய்க்காட்சி யாம்புவனம்
மேவுநாள் எந்நாளோ?

— தாயுமானவர்

ஜூலை 19 ஆடி 4

அன்பு, அறிவு

இறையே, உன்னை நேசிக்கவும் அறியவும் கற்றுக்கொள்வேனாக.

உலோபி ஒருவன் பொன்னை நேசிக்கிறான். அதனிடத்து அன்பு வைத்திருக்கிறான். ஆனால், அதன் அமைப்பைப் பற்றிய தத்துவத்தை அவன் அறியான். தாயை இழந்த குழந்தையொன்று நோயால் வருந்துகிறது. அதன் உடலைப் பீடித்த நோய் இன்னதென்று டாக்டர் அறிகிறார். ஆனால் அதன் உள்ளத்தில் உள்ள துயரத்தை அவர் அறியார். அன்பு அறிவாக வடிவெடுக்கவேண்டும். அறிவு அன்பாக வடிவெடுக்கவேண்டும். கடவுளிடத்து அன்பு வைப்பதும் அவரை அறிவதும் ஒன்றே.

அன்பருக் கன்பான மெய்யன்-ஐயன்
ஆனந்த மோனன் அருட்குரு நாதன்
தன்பாதம் சென்னியில் வைத்தான்-என்னைத்
தானறிந் தேன்மனந் தானிறந் தேனே.

— தாயுமானவர்

ஜூலை 20 ஆடி 5

உற்ற உபாயம்

மன்னே, உன்னை மேலும் மேலும் ஒருமை மனதுடன் நாடுவேனாக.

நிறைநிலையடைதற்கு இரகசிய வழி ஏதாவது உண்டாவென்று பலர் கேட்கின்றனர். பக்தி பண்ணுவது ஒன்றே உற்ற உபாயம். பேசிக்கொண்டிருப்பதால் ஒருவன் பேசப் பழகுகிறான். வாசிப்பதன் மூலம் ஒருவன் வாசிக்கக் கற்றுக்கொள்கிறான். ஓடுவதால் ஒருவன் ஓடவல்லவனாகிறான். வேலை செய்வதால் ஒருவன் வேலையில் நிபுணனாகிறான். தெய்வத்தையும் மனிதனையும் நேசிப்பதால் ஒருவன் அன்பு மயமாகிறான். இடையறாது அன்பு செலுத்துக.

என்புருகிநெஞ்சம் இளகிக்கரைந்து கரைந்து
அன்புருவாய் நிற்க அலந்தேன் பராபரமே.

— தாயுமானவர்

அச்சுருவாணி

அண்ணலே, உலகனைத்தும் அசைகிற தெனினும் என் உள்ளம் அசையாதிருக்கு மாக.

சக்கரம் சுழல்கிறது. அதனுள் உள்ள அச்சுருவாணி சுழல்வதில்லை. சக்கரத்தைச் சுழற்றுதற்கு அச்சுருவாணி அசையாதிருக்க வேண்டும். சக்கரம்போன்று சுழல்கிற மனது அச்சுருவாணி போன்று அசையாதிருத்தல் வேண்டும். அசையாத மனது ஆத்ம சொரூபமாய் விடுகிறது. நடுநிலையை அணுக அணுக அதன் அசைவு குறைகிறது. நடுநிலைக்கே வந்துவிடும்பொழுது அது அசைவதில்லை.

நடுவுநின் றார்சிலர் ஞானிக ளாவர்
நடுவுநின் றார்சிலர் தேவரு மாவர்
நடுவுநின் றார்சிலர் நம்பனு மாவர்
நடுவுநின் றாரொடு நானும்நின் றேனே.

— திருமந்திரம்

பிரம்மாஸ்திரம்

பெரிய பொருளே, உன் துணையிருந்தால் எனக்குத் தடையேது? உன் துணையில்லா விட்டால் மற்ற துணைகள் என் செய்யும்?

நேர்மைக்குப் பிரம்மாஸ்திரம் என்று பெயர். நேர்மையான மனிதன் எதையும் மறைத்து வைப்பதில்லை. தன் செயலை மற்றவர்கள் பார்க்கக்கூடாது என்று அவன் கருதுவதில்லை. பிறர்க்குத் தீங்கு செய்யாமையால் அவன் அஞ்சுவதில்லை. அவனுடைய நடையுடை பாவனை நேர்மையானவை. அவன் யாரையும் ஏமாற்றுவதில்லையாகையால் யாரும் அவனை ஏமாற்ற முடியாது.

தொண்டர்காள் தூசிசெல்லீர்
பத்தர்காள் சூழப்போகீர்
ஒண்திறல் யோகிகளே
பேரணி உந்தீர்கள்
திண்திறல் சித்தர்களே
கடைக்கூழை சென்மின்கள்
அண்டர்நாடு ஆள்வோம் நாம்
அல்லற்படை வாராமே.

— மாணிக்கவாசகர்

மேலாம் பாடம்

நல்லாரிடமிருந்து நல்வாழ்வை நான் கற்றுக்கொள்வேனாக.

சமயக்குரவர் ஒருவரைக் குவலயத்தில் காண்பது அரிது. ஒருவேளை ஆயிரம் வருஷத்துக்கு ஒரு தடவை ஒருவர் வரலாம். அத்தகையவர் நல்வாழ்வு வாழ்ந்து உலகுக்கு வழிகாட்டுகிறார். புத்தகங்களும் பிரசங்கங்களும் பின்னணிக்குப் போய்விடுகின்றன. எத்தகைய வாழ்வு மனிதன் வாழவேண்டுமென்று அவர் தாமே வாழ்ந்து காட்டுகிறார். வாய்ப்பேச்சாலல்ல, வாழ்க்கையின் மூலம் புகட்டும் பாடமே மேலானது.

தர்க்கமிட்டுப் பாழாஞ்
சமயக் குதர்க்கம்விட்டு
நிற்குமவர் கண்டவழி
நேர்பெறுவ தெந்நாளோ?

— தாயுமானவர்

மனச்சாட்சி

உள்ளிருக்கும் ஒண்பொருளே, உன்னை நான் உலகெலாம் தேடியலைகிறேன், என்னே!

ஒவ்வோர் உயிர்க்கும் உயிராய் மனத்தினுள் தெய்வம் மனச்சாட்சியாய் எழுந்தருளியுள்ளது. ஆனால் அதை இன்னதென்று சுட்டிக்காட்ட இயலாது. பின்பு அதைப் புறக்கணிக்கவும் இயலாது. தன்போக்கில் தன் காரியத்தை அது நிறைவேற்றுகிறது. நமது ஆணவம் தலையெடுத்திருக்கும்போது மனச்சாட்சி மறைந்திருக்கிறது. ஆணவத்தை ஒதுக்கி வைத்துவிட்டு அமைதியுற்றிருக்கும்போது மனச்சாட்சி பேசுகிறது.

நீக்கப் பிரியா நினைக்கமறக் கக்கூடாப்
போக்குவர வற்ற பொருளனைவ தெந்நாளோ?

— தாயுமானவர்

அறிதற்கெளியது

வானில் இலங்கும் சூரியன்போன்று செம் பொருளே, நீ என் உள்ளத்தில் இலங்கு கின்றாய்.

சான்றோர் புகட்டிய செந்நெறியைக் கடைப் பிடித்தால் மக்கள் சான்றோர் ஆகக்கூடும். அச்செந்நெறி அறிதற்கெளியது, நேரானது; அதற்கு வியாக்கியானம் எழுதவேண்டிய தில்லை. கல்லாதவர்க்கும் குழந்தைகளுக்கும் அது விளங்குகிறது. அது பேச்சுக்குரிய தல்ல; வாழ்வோடு சம்பந்தப்பட்டது. அதை அனுஷ்டிக்குமளவு மனத்தகத்துள்ள தெய் விகத்தையும் நாம் அறிந்துகொள்ளமுடியும்.

திரையற்ற நீர்போல் தெளியெனத் தேர்ந்த
உரைபற்றி உற்றங்கு ஒடுங்குநாள் எந்நாளோ?

— தாயுமானவர்

பேரியல்பு

பெம்மானே, உன்னைப் போற்றுதலும் எனது பேரியல்பைப் பெறுதலும் ஒன்றேயாம்.

தூய உள்ளம், நேரான எண்ணம், நல்வினை ஆகிய இவை யாவும் மனிதனது பேரியல்பைப் பெருக்குதற்கென்று அமைந்தவைகளாம். அதிகமான ஆற்றலும், பெருநன்மையும், தெவிட்டாத இன்பமும் உண்டாவது மனபரிபாகத்தினின்றேயாம். பெரு முயற்சி, ஆழ்ந்த எண்ணம், தெய்விகப்பற்று ஆகிய இவைகளின் மூலமாகவே மேலோர் எக்காலத்திலும் தங்களது மேலான இயல்பை வளர்க்கலாயினர். சிற்றியல்புடைய மனிதன் மனபரிபாகத்தால் பேரியல்புடைய மனிதனாக மாறியமைகிறான்.

விறகில் தீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்
முருக வாங்கிக் கடையமுன் நிற்குமே.

— அப்பர்

தக்ஷ யக்ஞம்

அண்ணலே, உன் அருளோடு கலவாத பொருள்களெல்லாம், இலக்கத்தோடு தொடர்பில்லாத பூஜ்யங்கள்போன்று பயனற்றுப் போய்விடுகின்றன.

தக்ஷப்பிரஜாபதியின் யக்ஞத்தில் எல்லாம் இருந்தன. பொருள்களுக்குக் குறைவில்லை; போகத்துக் குறைவில்லை. போகப் பொருள்களைப் புசிக்க வந்தவர்களுக்கும் குறைவில்லை. கடவுள் ஒருவர்க்குமட்டும் ஆங்கு இடமில்லை. எஜமானன் தெய்வத்தை இகழவும் செய்தான். ஆகையால் எல்லாம் அனர்த்தமாய் முடிந்தது.

தெளிந்தார் கலங்கினும் நீ கலங் காதே
அளிந்தாங் கடைவதெம் ஆதிப் பிரானை
விளிந்தானத் தக்கன் அவ்வேள்வியைவியச்
சுளிந்தாங் கருள்செய்த தூய்மொழி யானே.

— திருமந்திரம்

ஜூலை 28 ஆடி 13

ஆளுதலும் ஆட்படுதலும்

வேந்தே, நான் மனதை அடக்கியாளவும் உனக்கு ஆட்படவும் கற்றுக்கொள்வேனாக.

பாரமார்த்திகப் பேருண்மையை அறியாத பாமரர்கள் எண்ணத்துக்கு அடிமையாகிறார்கள். ஞானியோ எண்ணத்துக்கு இறைவன். அப்போதைக்கப்போது கிடைக்கும் இன்பத்தை விரும்பி ஆடுமாடுபோன்று பாமரர் சிற்றியல்புக்கு ஆட்படுகின்றனர். மருந்துக்குரிய செடியை மருத்துவன் தேடியெடுப்பது போன்று, நலம் தரும் சீரிய எண்ணத்தை ஞானி மனத்தின்கண் நாட்டுகிறான். வாழ்க்கை என்னும் ராஜ்யத்தை ஞானி ஆளுகிறான். மற்றவர் வாழ்க்கைக்கு ஆட்படுகின்றனர்.

**வானூடு அடங்கும் வளிபோல இன்புருவாங்
கோனூடு அடங்கும்குறிப்பறிவ தெந்நாளோ?**

— தாயுமானவர்

ஞானதீபம்

தேஜோமயானந்தமே, யாண்டும் ஒளி வீசும் ஞான விளக்கை என் உள்ளத்தினுள்ளே ஏற்றிவைப்பாயாக.

விவேகமே வடிவெடுத்தது ஞானதீபம். பக்தியினின்று பெருக்கெடுக்கும் அமைதியே அதற்கு எண்ணெய். ஈசுவரத்தியானம் அது எரிவதற்கு ஏற்ற நல்ல காற்றாகிறது. இடையறாப் பிரம்மச்சரியத்தினின்று வரும் பேருணர்வு அத்தீபத்துக்குத் திரியாகிறது. பற்றற்ற உள்ளம் அந்த விளக்கை வைப்பதற்கேற்ற இடமாகிறது. அங்கு ஆசையென்னும் புயல் காற்றடிக்காதிருக்க வேண்டும். ஈசுவர சொரூபம் அத்தீபத்தில் எரியும் ஒளிப் பிழம்பாகிறது.

விளக்கைப் பிளந்து விளக்கினை யேற்றி
விளக்கினுக் குள்ளே விளக்கினைத் தூண்டி
விளக்கில் விளக்கை விளக்கவல் லார்க்கு
விளக்குடை யான்கழல் மேவலு மாமே.

— திருமந்திரம்

ஆள் இல்லாத படகு

அஹங்காரம் அற்ற இடத்தில் அண்ணலே, நீ வீற்றிருக்கிருய்.

படகு ஒன்றில் நிறையப் போக்கிரிகள் போய்க்கொண்டிருந்தார்கள். சினமும், சச்சரவும், செருக்கும் வடிவெடுத்தவர்கள் அவர்கள். அன்னவர் ஊர்ந்து சென்ற படகைக் காலிப் படகு ஒன்று மிதந்துகொண்டு வந்து மோதியது. அது மோதியதை முன்னிட்டு யாரும் மனத்தாங்கல் கொள்ளவில்லை. அதற்கு மாருக, அது ஓர் ஆளாவது ஊர்ந்த படகாயிருந்திருக்குமாயின் வம்பு மிக வந்திருக்கும். நமது மனம் என்ற படகில் ஆணவ அஹங்காரம் என்ற ஆட்கள் இல்லாவிட்டால் நம்முடன் யாரும் சண்டைக்கு வரமுடியாது.

சொல்லும் பொருளும் அற்றுச் சும்மா இருப்பதற்கே
அல்லும் பகலும் எனக்கு ஆசை பராபரமே.

— தாயுமானவர்

பட்சபாதம்

தராசு முள் எடையை உள்ளபடி காட்டுவது போன்று தேவே, எனக்குரியதை நீ நேர்மையுடன் நல்குகின்றாய்.

இயற்கையின் நடைமுறை நேர்மையே வடிவெடுத்தது. பட்ச பாதம் அதனிடத்தில்லை. அதை எதிர்த்தால் துன்பம் வருகிறது; அதை அனுசரித்தால் இன்பம் வருகிறது. தவறுதலுக்குத் தண்டனையில்லாது போய்விட்டால் நேர்மைக்கு வெகுமதியும் இல்லாது போய் விடும். அத்தகைய நிலையே பட்சபாதம் எனப்படுவது. இறைவனுடைய ஆதிக்கத்தில் பட்சபாதத்துக்கு இடமில்லை. வினைக்கேற்ற வினைப்பயனை அவர் விதித்துள்ளார்.

மாலுங்காட்டி வழிகாட்டி
வாராவுலக நெறியேறக்
கோலங்காட்டி ஆண்டானைக் கொடியேன்
என்றோ கூடுவதே?

— மாணிக்கவாசகர்

ஆகஸ்ட் 1 ஆடி 17

விசுவரூபம்

அண்ட நாயகா, நலம் கேடு அனைத்தும் உன் செயல்களே என்பதை நான் அறிந்து கொள்வேனாக.

அண்டத்தினுடைய நடைமுறையில் இனிமை தென்படுவது போன்று கோரக் காட்சிகளும் தென்படுகின்றன. பஞ்சம், கொள்ளைநோய், பூகம்பம், போராட்டம் இத்தகையவைகளுக்கு இறைவன் ஏன் இடம் கொடுத்தான் என்ற கேள்வி எழுகிறது. குறுகிய காட்சியில் அவைகள் கோரமானவைகளே. பரந்த விசுவரூபத்தின்கண் வைத்துப் பார்க்குமிடத்து உண்மை புலப்படும். துன்பமும் அவனுடைய அருளினின்று வருகிறது. துன்பங்கள் வாயிலாக உயிர்களை அவன் பண்படுத்துகிறான்.

ஓரெழுத் தாலே உலகெங்குந் தானாகி
ஈரெழுத் தாலே இசைந்தங் கிருவராய்
மூவெழுத் தாலே முளைக்கின்ற சோதியை
மாவெழுத் தாலே மயக்கமே உற்றதே.

— திருமந்திரம்

ஆகஸ்ட் 2 ஆடி 18

பெருவாழ்வு

நாதா, நான் வாழும் வாழ்வு யாண்டும் உனக்குகந்த வழிபாடாகுக.

நெறியான வாழ்வு மனிதனை மேலோன் ஆக்குகிறது. பரந்த காட்சியும் ஆழ்ந்த உணர்ச்சியும் அப்பொழுது உருவெடுக்கின்றன. மனிதன் தேவன் ஆகிறான் என்று அப்பொழுது இயம்பலாம். புதிய ஆற்றலும் அப்பொழுது அவனுக்கு உண்டாகிறது. எல்லாம் தெய்வ சொரூபமாக மாறுகிறது. அதன் பிறகே மனிதனுக்கு உண்மையான வாழ்வு வந்தமைகிறது.

எட்டத் தொலையாத
எந்தைபிரான் சந்நிதியில்
பட்டப் பகல்விளக்காய்ப்
பண்புறுவ தென்நாளோ?

— தாயுமானவர்

உதவி

செம்பொருளே, உன்னைச் சார்ந்திருப்பதற்கு ஒப்பான உதவி எனக்கோ உலகுக்கோ வேறு எதுவும் இல்லை.

உலகில் உள்ள அக்கிரமங்களைப்பற்றியோ பாபங்களைப் பற்றியோ பேசாதே. அக்கிரமங்களைக் காணக்கூடிய குறைபாடு உன்னிடத்தில் இருப்பதைக் குறித்துக் கதறியழு. உன்னிடத்து எது இருக்கிறதோ அதையே உலகில் நீ காண்கிருய். உலகுக்கு உதவி செய்ய நீ விரும்பினுல் அதைப் பழிகூருதே. பழிகூறுவதால் உலகையும் உன்னையும் இன்னும் அதிகமாகக் கீழ்மைப்படுத்துகிருய். குறைகாண்போன் நிறைவை நல்கான்.

அவ்வுயிர்போல் எவ்வுயிரும்
ஆனபிரான் தன்னடிமை
எவ்வுயிரு மென்றுபணி
யாஞ்செய்வ தெந்நாளோ?

— தாயுமானவர்

உண்டி

இறையே, உணவின்றி நான் சில நாள் வாழ முடியும்; உனது உணர்வின்றிக் கணப் பொழுதும் உயிர் தரியேன்.

உடலுக்குத் தரும் உண்டி உள்ளத்தையும் பேணவல்லது. உள்ளத்தில் அமைதியுண்டு பண்ணுகிற நல்லுணவையே அருந்துதல் வேண்டும். மிகைபடவோ குறைபடவோ உண்டியை ஏற்பது பொருந்தாது. அளவுபட உண்பது யோகியர் செயல். அவரவர்க்குப் பொருந்துகிற உணவை அவரவரே கண்டு கொள்ள வேண்டும்.

**அண்டம் சுருங்கில் அதற்கோர் அழிவில்லை
பிண்டம் சுருங்கில் பிராணன் நிலைபெறும்
உண்டி சுருங்கில் உபாயம் பலவுள
கண்டங் கறுத்த கபாலியு மாமே.**

— *திருமந்திரம்*

முயற்சி

கீழே விழுந்த குழந்தை எழுந்து நடக்க முயலுவது போன்று அழுதும் தொழுதும் அண்ணலே, உன்னை நான் அடைய முயலுவேனாக.

தோல்வியைப் பொருள்படுத்தாதே. இயற்கையில் அதற்கும் இடமுண்டு. வாழ்க்கையைத் தோல்வியானது அலங்கரிக்கிறது. வாழ்க்கைக்கு அது கவிதை ரசமும் கொடுக்கிறது. தோல்வியடையவும் திரும்ப முயற்சி எடுத்துக்கொள்ளவும் அமையாத வாழ்வு வாழ்வன்று. ஆயிரம் தடவை நீ தோல்வியடைந்தாலும் தளர்வுறாதே. திரும்பவும் முயற்சியெடுத்துக்கொள். முயற்சி திருவினையாக்கும்.

துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை.

— *திருக்குறள்*

ஆகஸ்ட் 6 ஆடி 22

புதையல்

உள்குவார் உள்ளிருக்கும் இறைவா, உன்னை நான் எண்ணுமளவு, உன்னை எனக்குச் சொந்தமாக்குகிறேன்.

அழியும் பாங்குடையது உனது உடல். ஆனால் அதனுள் எவ்வளவு சக்தி, எத்தனைவித வல்லமைகள், எத்தகைய விசைகள் மறைந்திருக்கின்றனவென்று உனக்குத் தெரியுமா? மனிதன் மண்ணுலகினுள் வந்து யுகங்கள் பல கடந்துபோய் விட்டன. ஆனால் அவனுக்குரிய வல்லமைகளில் அணுவளவுக்குமேல் இன்னும் வெளியாகவில்லை. ஆகையால் மனிதன் ஒன்றுக்கும் உதவாதவன் என்று சொல்லிவிடலாகாது. உள்ளே புதைந்திருக்கும் சக்தி அளப்பரியது. எவ்வளவுதான் புலப்படுத்தினாலும் அது முடிவில்லாதது.

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின் றேனே.

— திருமந்திரம்

பேரமைப்பு

அண்ட நாயகா, நீ அண்டங்களை அமைத்திருக்கும் முறையைக் காண்போர் மனங் கலங்குவதுமில்லை, குறை கூறுவதுமில்லை.

இயற்கையின் அமைப்பு அருளே வடிவெடுத்தது. இம்மியளவு கேட்டையோ பட்சபாதத்தையோ அதில் காணமுடியாது. நுண்ணிய தளிரை இரக்கத்தோடு அது பாதுகாக்கிறது. பெருவலிவு படைத்த ஒன்று அவ்வலிவை முறைதவறிக் கையாளாதிருக்கும்படி இயற்கை பார்த்துக்கொள்கிறது. அது கேட்டைக் களையவும் நலத்தைக் காக்கவும் செய்கிறது. இவ்வமைப்பை அறிவதும் அருளை அறிவதும் ஒன்றே. அதை அறிபவர் அமைதி பெறுகின்றனர்.

இம் மாநிலத்தில் இருந்தபடி யேயிருந்து
சும்மா அருளைத் தொடருநாள் எந்நாளோ?

— தாயுமானவர்

கள் வெறி

கடவுளே, உனது உணர்ச்சியில் நான் கள் குடியனபோன்று ஆய்விடுவேனாக.

மிகைபடக் குடித்த ஒருவன் ஒரு வண்டியி னின்று கீழே விழுகிறான். வண்டியில் போய்க் கொண்டிருந்த உணர்ச்சி அவனுக்கில்லை; கீழே வீழ்ந்த உணர்ச்சியும் இல்லை. உயிர் வாழ்ந்திருப்பது, மரணமடைவது, அஞ்சுதல் —இவைபோன்ற எண்ணங்களுக்கு அப்பால் அவன் போய்விடுகிறான். கள்ளுடன் வைத்த தொடர்பு தாற்காலிகமாக இத்தகைய பேரு ணர்ச்சியைக் கொண்டுவருமானால், கடவுளு டன் வைக்கும் தொடர்வு எத்தகைய நிலைத்த நல்லுணர்ச்சியைக் கொண்டு வராது!

நித்திரையிற் செத்தபிணம்
நேருமுடற்கு இச்சைவையாச்
சுத்தர்களே நல்ல
துறவோர் பராபரமே.

— தாயுமானவர்

அதிசயம்

சூரிய வெளிச்சத்தில் இருந்துகொண்டு சூரியனைத் தேடுவதுபோன்று தேவே, உன்னை நான் தேடியலைகிறேன்.

பொருளிலெல்லாம் மிகப் பெரிய பொருள் கடவுள்; ஆனால் அது யார்க்கும் புலப்படுவதில்லை. பெருங்கூச்சலிட்டு அழைப்பவன் கடவுள்; ஆனால் அவன் அழைப்பை யாரும் கேட்பதில்லை. மிக அருகில் இருப்பவன் கடவுள்; ஆனால் யாரும் அவனை உணர்வதில்லை. எல்லார்க்கும்அவன் தன்னைப் பங்கிட்டுக்கொடுத்திருக்கிறான்; ஆனால் அவன் பெயர் யாருக்கும் தெரியாது. கடவுளைக் காணமுடியாது என்று சொல்லிக்கொண்டு அவனிடமே மக்கள் ஓடுவது அதிசயமன்றோ!

எவ்வடிவும் பூரணமாம்
எந்தையுரு என்றிசைந்த
அவ்வடிவுக் குள்ளே
அடங்குநாள் எந்நாளோ?

— தாயுமானவர்

ஆகஸ்ட் 10 ஆடி 26

ஒப்பற்ற வெற்றி

என்னை நான் ஒழுங்குபடுத்தி விட்டால் தகையே, நான் உனக்குகந்தவன் ஆய்விடுகிறேன்.

ஒருவன் தன்னைத் திருத்தியமைக்க அமைக்க அகத்தில் அமைதியுண்டாகிறது. ஒரு மனிதனுக்குப் பகை வெளியுலகில் இல்லை. காமம், குரோதம், மதம், மாச்சரியம் முதலிய விரோதிகள் மனத்தினுள் இருக்கின்றன. இவைகளை வென்றவன் உலகையே வென்றவன் ஆகிறான். பிறரை வென்றவனுக்குப் பிறகு தோல்வி ஏற்படலாம். தன்னையே வென்றவனுக்குத் தோல்வியில்லை. அவன் அனைத்தும் அடையப்பெற்றவன் ஆகிறான்.

பார்க்கின் அணுப் போற்கிடந்த
பாழ்ஞ்சிந்தை மாளின்என்னை
யார்க்குச் சரியிடலாம் ஐயா பராபரமே?

— தாயுமானவர்

ஆசிரியர்

இறைவா, எனக்கு நீ நல்லாசிரியஞயிருந்து ஓயாது என்னை ஒழுங்குபடுத்தி வருவதை நான் அறிவேனுக.

உலகம் என்னும் பள்ளிக்கூடத்தில் பல வகுப்புகள் இருக்கின்றன. ஒவ்வொரு வகுப்புக்கும் ஆசிரியன் உண்டு. புகட்டவேண்டிய பாடத்தைப் புகட்டுதற்கு ஆசிரியனுக்கு அதிகாரமுண்டு. ஆனல் ஆசிரியனுக்குப் பாடம் புகட்டும் அதிகாரமும், பாடத்தின் முறையை மாற்றும் அதிகாரமும் மாணுக்கனுக்கு இல்லை. ஓர் ஆசிரியனிடம் பாடம் கற்றுன பிறகு மாணுக்கன் இன்னெருவனிடம் அனுப்பப்படுகிறுன். ஆசிரியனுக்கும் அப்படி அனுப்புதலில் மகிழ்ச்சி உண்டாகிறது. தரித்திரம், திருப்தி, கேடு, நலன், துன்பம், இன்பம் ஆகியவைகள் ஆசிரியர்கள் ஆகின்றன.

**கலக்கமுற நெஞ்சைக் கலக்கித் திரும்பத்
துலக்குபவன் நீயலேயோ சொல்லாய் பராபரமே.**

— தாயுமானவர்

கஸ்தூரிமான்

சித்தமிசை குடிகொண்ட செம்பொருளே, ஜகமெங்கும் உன்னை நான் தேடியலைவ தேனோ!

கஸ்தூரிமான் தனது உடலினின்று கஸ்தூரியை உண்டுபண்ணுகிறது. அதன் வாசனையை நாடி அது பிறகு உலகெலாம் தேடியலைகிறது. தான் தேடுவது தன்னிடத்தே இருப்பது அதற்குத் தெரியாது. மனிதன் வெளியுலகில் நாடுவதெல்லாம் அவனிடத்திலேயே இருக்கிறது. எத்தனை ஜன்மாந்தரங்களில் உழன்றுன பிறகு இவ்வுண்மையை அவன் கண்டுபிடிக்கிறுன்! மனத்தகத்து மிளிரும் தெய்வத்தை அவன் கண்டுகொண்டால் உலகெங்கும் அதே தெய்வம் நிறைந்திருப்பதை அவன் உணர்வான்.

செம்மை யறிவால் அறிந்து தேகாதிக்குள்
இசைந்த
எம்மைப் புலப்படவே யாமறிவ தெந்நாளோ?

— தாயுமானவர்

சிறைவாசம்

கண்ணை இறுக மூடிக்கொண்டு சூரியனைத் தேடுபவர் போன்று தேவே, உன்னை நான் எங்கெங்கோ தேடியலைகிறேன்.

மனிதனைத் துன்புறுத்துவது உலகில் ஒன்றுமில்லை. தனக்குத்தானே அவன் சிறை கட்டிக்கொண்டிருக்கிருன். தன்னுடைய ஆசா பாசம், தனக்குவிருப்பமான இடம், பொருள், அந்தஸ்து இவைகளில் அவன் கட்டுண்டு கிடக்கிருன். அவைகளை விட்டுவிட்டால் தனக்குக் கதி வேறென்றுமில்லையென்று அவன் வருந்துகிருன். தான் கட்டிக்கொண்ட சிறிய சிறைச்சாலையை நீத்துவிட்டால் தனக்கு வேறு என்ன கதியுளது என்று அவன் ஏங்கியிருக்கிருன்.

நீக்கிமலக் கட்டறுத்து
நேரே வெளியில் எம்மைத்
தூக்கிவைக்கும் தாளைத்
தொழுதிடுநாள் எந்நாளோ?

— தாயுமானவர்

ஆகஸ்ட் 14 ஆடி 30

ஞாயிறு புகுந்த ஞாலம்

உன்னை நான் அணுகில் ஐயனே, உன் மயம் ஆய்விடுவேன் என்பதில் ஐயமொன்று மில்லை.

வெளிச்சத்தையும் வெப்பத்தையும் ஓயாது வழங்கிக் கொண்டிருப்பது ஞாயிறு. நாம் வசித்து வரும் இந்த ஞாலம் முன்பு ஒருகால் அந்த ஞாயிற்றினிடம் இருந்தது. அதைப் பிரிந்து வந்து பல காலத்துக்குப் பிறகு இது வெப்பத்தையும் வெளிச்சத்தையும் இழந்துவிட்டது. திரும்பவும் இந்தப் பூமியைச் சூரியனுக்குள் எடுத்துப் போட்டால் இது பழையபடி சூரிய சொரூபம் ஆய்விடும். பரமாத்மாவிடமிருந்துதான் பிரிந்திருப்பதாக ஜீவாத்மன் அக்ஞானத்தால் உணர்கிறது. பரபோதம் பெற்றதும் ஜீவன் பரம்பொருள் அய்விடும்.

யான்எனது என்னும் செருக்கு அறுப்பான் [வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்.

— *திருக்குறள்*

ஆகஸ்ட் 15 ஆடி 31

தாயின் உள்ளம்

தன் குழந்தையிடத்துக் குற்றம் ஒன்றும் காணுது குணமே காணும் பாங்குடையவள் தாய். என் தாயே, உனதருளாலன்றி உய்யும் ஆறு நான் அறிகிலேன்.

கடவுளை நோக்கி நாம் ஓர் அடி சென்ருல் அவர் நம்மை நோக்கிப் பத்து அடி வருகிருர். பெற்ற தாய் படைத்துள்ள உள்ளக்கசிவு கடவுளின் கருணையேயாம். தாயின் உள்ளத்தை அறிபவன் கடவுளின் கருணையை அறிபவன் ஆகிருன்.

எத்தன்மைக் குற்றம்
இயற்றிடினுந் தாய்பொறுக்கும்
அத்தன்மை நின்னருளும்
அன்ருே பராபரமே.

— தாயுமானவர்

உணர்தல்

கடவுளைத் தேடித் திரியாதே; நெஞ்சத்தினுள் அவர் வீற்றிருப்பதை உணர்ந்து கொண்டிரு.

பக்கத்தில் படுத்துறங்கிய தாயின் மீது வேற்றூர் உடையைப் போட்டு யாரோ மூடி விட்டார்கள். எழுந்திருந்த குழந்தை தன் தாயைக் காணவில்லையே என்று வீடெல்லாம் தேடிப்பார்த்து அழுதது. தாயினும் சாலப்பரிந்து பராமரிக்கும் பரம்பொருள் உள்ளத்தினுள் உறைவதை உணர்ந்து கொள்.

அன்னையில்லாச் சேய்போல்
அலக்கணுற்றேன் கண்ணுர
என்னகத்தில் தாய்போல்
இருக்கும் பராபரமே.

— தாயுமானவர்

ஆகஸ்ட் 17 ஆவணி 2

ஆற்றலின் அதிகரிப்பு

நீ கடவுளுக்கென்று காரியங்களைச் செய்யும் பொழுது உன் ஆற்றல் அதிகரிக்கிறது.

நாட்டினின்று விரட்டியோட்டப்பட்ட சுக்ரீவனுக்காகவென்று ஹனுமான் சேவைபுரிந்து கொண்டிருந்தான். அது சுயநலமற்ற சேவை. ஆதலால் அவன் ஆற்றல் மிகப் படைத்தவன் ஆனான். பின்பு அதே ஹனுமான் ஸ்ரீ ராமனுக்காகவென்று பணிவிடைகள் புரிந்த பொழுது அவனுடைய ஆற்றல் பன்மடங்கு பெரிதாய்விட்டது. தெய்வத்துக்கென்றே தொண்டுபுரிபவர் தெய்விக ஆற்றல் மிகப் பெறுகின்றனர்.

சிந்தித்த தெல்லாஞ் சிவபூரணமாக
வந்தித்துவாழ்த்தி வணங்குநாள் எந்நாளோ?

— தாயுமானவர்

ஆகஸ்ட் 18 ஆவணி 3

மரணத்தைப் பற்றிய நினைவு

சூரியனிடத்திருந்து இருளைக் காண முடியாது. பகவத் சிந்தனையில் ஆழ்ந்திருப்பவர் உள்ளத்தில் மரணத்தைப் பற்றிய நினைவு வருவதில்லை.

அப்பர் சுவாமிகளுக்கு மெய்யுணர்வு வந்தபொழுது மதம் மாறினார். அதைக் குறித்துப் பழைய மதவாதிகள் அவரைப் படாதபாடுபடுத்தினர். அவரைக் கொல்ல முயன்றனர். கடவுள் எண்ணத்திலேயே நிலைத்திருந்த அவருக்கு மரணத்தைப்பற்றிய நினைவே வரவில்லை. யார் கடவுளை சாக்ஷாத்கரிக்கின்றனரோ அவர் மரண நினைவைக் கடந்து விடுகின்றனர்.

மார்க்கண்டர்க் காக
மறலிபட்ட பாட்டை உன்னிப்
பார்க்கின் அன்பர்க் கென்ன
பயங்காண் பராபரமே.

— தாயுமானவர்

ஆகஸ்ட் 19 ஆவணி 4

கோபுரம் தாங்கி

எனது ஆணவத்தை ஒதுக்கி வைத்து விட்டு இறைவா, உன்னை நான் வழுத்து வேனாக.

கோபுரத்தைச் சுமந்து கொண்டிருப்பது போன்று கோபுரம் தாங்கி காட்சி கொடுக்கிறது. ஆனல் உண்மை அதற்கு நேர்மாறானது. கோபுரம் தாங்கியைத் தாங்குவது கோபுரம். உலகில் எத்தனையோ காரியங்களைத் தான் தாங்கிக்கொண்டிருப்பதாக மனிதன் எண்ணுகிறன். தன்னிலும் மிக்கதொரு சக்தி தன்னைத் தாங்கிக்கொண்டிருக்கிறது என்பதை மனிதன் அறிந்துகொள்வதில்லை.

என் செயினும் என் பெறினும்
என்னிறைவா ஏழையன்யான்
நின் செயலென் றுன்னும்
நினைவுவரக் காண்பேனே?

— தாயுமானவர்

ஆகஸ்ட் 20 ஆவணி 5

பொரித்த பறவை

முட்டையை உடைத்துக்கொண்டு பறவை பறந்து போவது போன்று இறைவா, நான் உடலைக் களைந்துவிட்டு உன்னிடம் வருவேனாக.

வெளிச்சத்தையோ, வடிவங்களையோ, நிறங்களையோ காணும் வாய்ப்பு முட்டையினுள் உள்ள குஞ்சுக்கு இல்லை. வெளியே வந்ததும் அதற்குப் பரந்த புதிய உலகம் புலனாகிறது. இன்பம் பன்மடங்கு அதிகரிக்கிறது. வாழ்வு பெருவாழ்வு ஆகிறது. உடலைக் களைந்தவன் பெறும் பேறு அத்தகையது.

உடம்பறியும் என்னும் அந்த
ஊழல்எல்லாந் தீரத்
திடம்பெறவே எம்மைத்
தெரிசிப்ப தெந்நாளோ?

— தாயுமானவர்

ஆகஸ்ட் 21 ஆவணி 6

நிழல்

நிழல் என்னைச் சார்ந்திருப்பதுபோன்று எந்தையே, நின்னை நான் யாண்டும் சார்ந் திருக்கும் பேறு அருள்வாயாக.

சூரியன் சாய்ந்திருக்கும்போது நிழல் நீண் டிருக்கிறது. சூரியன் உச்சிக்கு வரும்போது நிழல் குறுகுகிறது. பாதம், தலை, சூரியன் ஆகிய மூன்றும் நேர்கோட்டுக்கு வரும்போது நிழல் பாதத்தில் மறைந்து விடுகிறது. இறை வன் உணர்வில் நாம் ஒன்றுபடும்போது உடல் உணர்வு என்னும் நிழல் மறைந்துவிடு கிறது.

ஆராருங்காணுத அற்புதனுர் பொற்படிக்கீழ்
நீரார் நிழல்போல் நிலாவுநாள் எந்நாளோ?

— தாயுமானவர்

அருள் வேட்கை

நீர் வேட்கை பிடித்த மான் நீரின் பொருட்டு அலேவது போன்று இறைவா, நான் உன்பொருட்டு வேட்கை கொண்டிருப்பேனுக.

ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கையில் ஒருவித வேட்கையிருக்கிறது. அதன் பொருட்டு அவன் முயற்சி மிக எடுத்துக் கொள்கிருன். வேட்கைகளுள் எல்லாம் கடவுளுக்காகவென்று உண்டாகும் வேட்கையே ஒப்பு உயர்வு அற்றது.

எள்ளளவும் நின்னேவிட
இல்லா எனமயக்கில்
தள்ளுதலால் என்னபலன்
சாற்ருய் பராபரமே.

— தாயுமானவர்

ஆகஸ்ட் 23 ஆவணி 8

தரித்திரம்

தரித்திரத்துள் பெரிய தரித்திரம் அதிருப்தி. மற்று, திருப்தியடைந்திருப்பவனே தெய்வ சன்னிதியில் இருக்கிறான்.

பிரபஞ்சத்திலுள்ள பொருள்கள் மனிதனுக்கு நிரந்தரமான திருப்தியளிக்கமாட்டா. ஒரு பொருளைப் பெறும்பொழுதே அது போதவில்லையென்ற அதிருப்தியும் சேர்ந்தே வருகிறது. போதவில்லை என்னும் மனக்குறைவுக்குத் தரித்திரம் என்று பெயர்.

அவாஇல்லார்க்கு இல்லாகும் துன்பம்;
அஃதுண்டேல்
தவாஅது மேன்மேல் வரும்.

— *திருக்குறள்*

ஆகஸ்ட் 24 ஆவணி 9

காலி செய்

உன் பொருட்டு என் உள்ளத்தைக் காலி செய்யாவிட்டால் அதனுள் நீ எழுந்தருள்வது எங்ஙனம்?

மனதில் இருக்கும் விதவிதமான எண்ணங்களையெல்லாம் அப்புறப்படுத்தி விட வேண்டும். அப்பொழுது அதனூடு இலகும் பேருயிரும், ஆற்றலும், சுதந்திரமும், ஆனந்தமும் ஒன்றுகூடி வாழ்வைப் பெருவாழ்வாகப் பெருக்கிவிடும்.

உள்ளதும் இல்லது மாய்முன்—உற்ற
உணர்வது வாயுன் உளங்கண்ட தெல்லாந்
தள்ளெனச் சொல்லிஎன் ஐயன்—என்னைத்
தாளுக்கிக்கொண்டசமர்த்தைப்பார்தோழி.

— தாயுமானவர்

ஆகஸ்ட் 25 ஆவணி 10

ஏழைத் தெய்வம்

இறைவா, நீ எடுத்துள்ள எண்ணிறந்த வடிவங்களுள் ஏழை வடிவத்தை நான் என்றென்றும் ஏத்துவேனாக.

இறைவனே உலகனைத்துமாயுள்ளார். அவருடைய வடிவங்களையெல்லாம் பாவித்துப் போற்றுவது இயலாத காரியம். ஏழை எளியவன் வடிவத்தில் நம்மைத் தேடி வந்துள்ள அவரைத் திருப்திப்படுத்தினால் அது அவருக்குகந்த நல்ல ஆராதனையாகிறது.

தரித்ர தேவோ பவ
துக்கி தேவோ பவ
மூர்க்க தேவோ பவ.

— விவேகானந்த உபநிஷதம்

மருந்து

ஆருயிர் மயமாகிய அருமருந்தே, யானு னைப் புசித்துப் பிறவிப் பெருநோயைப் போக்குவேனுக.

நோயின் வேகத்தைத் தடுக்கவல்லது மருந்து. பிறகு நோயைப் போக்கவல்லதும் மருந்து. பண்பட்ட மனதே மருந்துகளுள் மேலானது. அந்த மனத்தைத் தெய்வத்துக்கு உரியதாக்கி விட்டால் மனிதன் கேடில்லாத வனுகி விடுகிறுன்.

முன்னை வினையிரண்டும்
வேரறுத்து முன்னின்றுன்
பின்னைப் பிறப்பறுக்கும்
பேராளன்—தென்னன்
பெருந்துறையில் மேய
பெருங்கருணை யாளன்
வருந்துயரந் தீர்க்கும் மருந்து.

— மாணிக்கவாசகர்

ஆகஸ்ட் 27 ஆவணி 12

உடம்பு

உடம்பாகிய என்னுள்ளே உயிராகிய இறைவா, உன்னை நீ விளக்கியருள் வாயாக.

உயிரை விளக்குதற்கென்றே உடல் இருக்கிறது. உயிர் இல்லாவிட்டால் உடல் பிணமாய்விடும். பின்பு உடம்பினைப் பண்படுத்துமளவு அதனுள் உயிரானது ஓங்கி மிளிரும்.

உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம்
உடம்பினுள் உத்தமனைக் காண்.

— ஔவைக் குறள்

கருமம்

கடவுளைக் காணுதற் பொருட்டு நான் கருமத்தையெல்லாம் கடந்து செல்வேனாக.

சினிமாப்படம் என்பது நிழல், வெளிச்சம் ஆகியவைகளின் அசைவு. அந்த அசைவு ஓய்ந்தால் திரை தென்படும். இயற்கையின் கருமம் என்பது சத்துவம், ரஜஸ், தமஸ் ஆகியவைகளின் அசைவு. அந்த அசைவு ஓய்ந்தால் இறைவன் தென்படுவார்.

வேண்டார்கள் கன்மம்
விமலனுக் காட்பட்டோர்
வேண்டார்கள் கன்மம்
அதில்இச்சை யற்றபேர்
வேண்டார்கள் கன்மம்
மிகுசிவ யோகிகள்
வேண்டார்கள் கன்மம்
மிகுதியோ ராய்ந்தன்பே.

— *திருமந்திரம்*

பாதுகாப்பு

பரம்பொருளே, நான் யாண்டும் உனது பாதுகாப்பில் இருந்து வருகிறேன். அதை நான் மறவாதிருந்தால் எனக்குக் குறையொன்றுமில்லை.

செல்வமும் செல்வாக்கும் நமக்கு நல்ல பாதுகாப்பு ஆகமாட்டா. அவை நொடிப் பொழுதில் அழிந்துபோம். ஓடும் நதிக்கு அதன் உற்பத்தி ஸ்தானம் உயிர் ஊட்டுகிறது. தெய்வத்திடமிருந்து ஓயாது வரும் பேரியல்பே நமக்கு நல்ல பாதுகாப்பு ஆகிறது.

அத்தன் இருப்பிடத்தை
ஆராய்ந்து பார்த்துநிதம்
செத்த சவம்போல்
திரிவதுஇனி யெக்காலம் ?

— பத்திரகிரியார்

ஆகஸ்ட் 30 ஆவணி 15

தந்திரம்

தேவே உன்னை நான் நேரே வந்தடைவ்தற்கான தந்திரத்தைப் புகட்டியருள்வாய்.

ஒவ்வொரு யந்திரத்தையும் முறையாகக் கையாளுதற்கு உற்ற உபாயம் உண்டு. அந்த உபாயத்துக்குத் தந்திரம் என்று பெயர். உடல் என்னும் யந்திரத்தை இறைவன் பொருட்டுக் கையாளுதலே நல்ல தந்திரமாகும்.

ஊனாக நிற்கும் உணர்வை மறந் தையாநீ
தானாக நிற்கஒரு தந்திரந்தான் இல்லையோ?

— தாயுமானவர்

ஆகஸ்ட் 31 ஆவணி 16

அறுவடை

சிவலோகம் என்னும் நன்னிலத்திலே பேரானந்தம் என்னும் அறுவடையை நான் நன்கு செய்வேனாக.

நல்ல விதை விதைத்தவனுக்கு நல்ல அறுவடை; கெட்ட விதை விதைத்தவனுக்கு அதற்கேற்ற அறுவடை. எத்தகைய வினையை ஒருவன் விதைக்கிறானோ அத்தகைய அறுவடை அவனுக்குரியது. பெருவாழ்வு என்னும் விதை விதைப்பவன் பேராளன் ஆகிறான்.

இந்திரிய வயம்மயங்கி
இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய்
அருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச்
சிவமாக்கி எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம்
அணிகொள்தில்லை கண்டேனே.

— மாணிக்கவாசகர்

செப்டம்பர் 1 ஆவணி 17

பெரியோர் துணை

பெரியோர் கேண்மையைத் துணையாகப் பற்றிப் பிடிப்பதற்குப் பரம்பொருளே, நீ துணைபுரிவாயாக.

ஓநாய்களுக்கிடையில் வளரும் சிறுவன் ஓநாய்போன்று ஆய்விடுவான். துஷ்டர்களுக்கிடையில் வளர்பவன் துஷ்டன் ஆய்விடுவான். சான்றோர்க்கிடையில் வளர்பவன் தானே சான்றோன் ஆய்விடுவான்.

அறிவார் அமரர் தலைவனை நாடிச்
செறிவார் பெறுவர் சிவதத் துவத்தை
நெறிதான் மிகமிக நின்றருள் செய்யும்
பெரியா ருடன்கூடல் பேரின்ப மாமே.

— திருமந்திரம்

செப்டம்பர் 2 ஆவணி 18

கிருத யுகம்

கருணாகரனே, உன்னைச் சார்ந்திருக்கத் தெரிந்து கொள்ளுமளவு நான் கிருதயுக வாசியாவேன்.

நல்ல மனமுடையவர் ஈண்டு இப்பொழுதே கிருதயுகத்தைக் காணலாம். சுய நலத்தை ஒழிப்பது அதற்கு முதல்படி. பொறாமை, பகை, புறங்கூறுதல் ஆகியவைகளைப் புறக்கணிப்பது அடுத்தபடியாகும். உள்ளன்பு ஓங்குதலில் பொற்காலம் என்னும் கிருதயுகம் உதயமாகும்.

தற்போதத் தாலே
தலைகீழ தாகஜயன்
நற்போத இன்புவர
நாட்செலுமோ பைங்கிளியே.

— தாயுமானவர்

செப்டம்பர் 3 ஆவணி 19

யோக நித்திரை

உறக்கத்திலும் விழிப்பிலும் உன்னையே சார்ந்திருக்க அருள்வாய், ஈசா.

விழித்திருக்கும்போது மனது வியவகார மற்றிருக்கவேண்டும். அதனால் பேருணர்வு உறுதி பெறுகிறது. பின்பு, உறக்கத்திலும் அப்பேருணர்வு மறைக்கப்படாதிருக்கிறது. விழிப்புக்கும் உறக்கத்துக்கும் வேற்றுமை அகலும்போது யோக நித்திரை அடையப் பெறுகிறது.

தூங்கிவிழித் தென்னபலன்
தூங்காமல் தூங்கிநிற்கும்
பாங்குகண்டால் அன்றோ
பலன்காண்பேன் பைங்கிளியே.

— தாயுமானவர்

செப்டம்பர் 4 ஆவணி 20

போற்றுமிடம்

உள்ளத்தினுள் வீற்றிருக்கும் ஒண் பொருளே, உள்ளத்தினுள்ளேயே உன்னை நான் போற்றுவேனாக.

கடலினுள்ளே இருக்கும் மீன்ஆனது நீரை நாடி எங்கும் செல்லவேண்டியதில்லை. அதன் உள்ளும் புறமும் நிறைந்திருப்பது நீர். கட வுள் நம் உள்ளத்தினுள் நீக்கமற நிறைந் திருக்கிறார். அவர் சான்னித்தியத்தை உணர் வதே நல்ல அர்ச்சனையாகும்.

உள்ளமே பீடம் உணர்வே சிவலிங்கம்
தெள்ளியர் அர்ச்சிக்கும் ஆறு.

— ஔவைக் குறள்

செப்டம்பர் 5 ஆவணி 21

மொக்கு

மொக்கு போன்ற மனது இறைவணக்கத்துக்கு உதவாது.

மொக்கு தன்னை மறைத்துக்கொண்டிருக்கிறது. பரிபாகம் ஆகாமையே அதற்குக் காரணம். மலரோ தன்னை உலகுக்கு அளிக்கிறது. அது பக்குவத்தின் விளைவு. முக மலர்ச்சியிலான் தன்னை மறைத்துக்கொள்ளட்டும். முகமலர்ச்சியுடையான் உலகுக்குரியவன் ஆகிறான். பின்பு அவன் இறைவனுக்கே தன்னை ஒப்படைத்துவிடுகிறான்.

பாசம்போய் நின்றவர்போற்
பாராட்டி யானாலும்
மோசம் போனேன் நான்
முறையோ பராபரமே.

— தாயுமானவர்

விழிப்பு

பேரறிவே, உன்னைப் போற்றுதற்கு நான் உறக்கத்தினின்று விழித்து எழுந்திருப் பேனுக.

அக்ஞானத்தில் அழுந்திக்கிடப்பது உறக் கத்துக்கு ஒப்பானது. இந்திரியங்களின் வசப்பட்டுக்கிடப்பது உறக்கத்துக்கு ஒப்பா னது. அப்படி எண்ணிறந்த பிறவிகள் போய் விட்டன. ஆத்ம போதத்தில் விழித்து எழுந் திருப்பதே உண்மையான விழிப்பு.

என்னையும் ஆண்டுகொண்டு
இன்னருள் புரியும்
எம்பெருமான் பள்ளி
எழுந்தருளாயே.

— மாணிக்கவாசகர்

செப்டம்பர் 7 ஆவணி 23

காந்த ஊசி

காந்தத்தைச் சேரும் இரும்பு தானே காந்தமாவது போன்று கருணாகரனே, உன்னில் நான் கலப்பேனாக.

கப்பலானது காற்றால் அலைக்கழிக்கப்படும் பொழுதும் அக்கப்பலில் இருக்கும் காந்தவூசி வடதிசையையே காட்டி நிற்கிறது. வாழ்விலே மனிதனுக்கு வரும் இன்னல்களுக்கிடையில் அவனுடைய மனது என்னும் காந்தவூசி கடவுள் என்னும் குறியையே நாடியிருக்கவேண்டும்.

காந்தம் இரும்பைக்
கவர்ந்திழுத்தா லென்னஅருள்
வேந்தன் எமைஇழுத்து
மேவுவனோ பைங்கிளியே.

— தாயுமானவர்

செப்டம்பர் 8 ஆவணி 24

மந்திரம்

மாண்பொருளே, உன்னை நினைவூட்டும் எண்ணம் ஒவ்வொன்றும் மந்திரமாகிறது.

எண்ணத்தால் மனது உறுதிபெறுகிறது; அல்லது தளர்வுறுகிறது. உறுதிப்படுத்தும் எண்ணம் ஒவ்வொன்றும் மந்திரமாகிறது. மந்திரங்கள் எண்ணிக்கையில் அடங்காதவைகள். அவைகளுள் ஒன்றை இறுதியில் உறுதியாய்ப் பிடித்துக்கொண்டால் போதுமானது. மந்திரமே ஈசன் வடிவம்.

மந்திரங்களெல்லாம் மயங்காமல் உள் நினைந்து
முந்துஅரனை அர்ச்சிக்கும் ஆறு.

— ஔவைக் குறள்

செப்டம்பர் 9 ஆவணி 25

ஆவாஹனம்

நீக்கமற எங்கும் நிறைபொருளே, என் மனத்தினுள் உன் சான்னித்தியத்தை என்றும் நிலைநாட்டுவாயாக.

எல்லார் உள்ளங்களிலும் இறைவன் குடி கொண்டிருக்கிறார். ஆதலால் எல்லாரிடத்திலும் பேரியல்பு உண்டு. அப்பேரியல்பை முன்னணிக்குக் கொண்டுவரும்படியான நல் வினைக்கமே தெய்வ சான்னித்தியத்தை வர வழைக்கும் ஆவாஹனமாகிறது.

தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தீ
செல்வமே சிவபெரு மானே
ஈசனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே?

— மாணிக்கவாசகர்

செப்டம்பர் 10 ஆவணி 26

அன்பின் கொடை

தேவே, உன்னை நான் நேசிப்பதால் என்னை உனக்கே கொடுத்துவிடுகிறேன்.

கைம்மாறு கேட்பது அன்பின் வழியல்ல. தன்னிடத்திருப்பதை யெல்லாம் ஓயாது எடுத்து வழங்குவது அன்பின் இயல்பு. அல்லல்படுவதற்கு அன்பு யாண்டும் ஆயத்த மாயிருக்கிறது. தன்னிடத்தில் இருப்பதைக் கொடுப்பதற்கு அன்பு ஆக்ஷேபம் செய்வதில்லை. பழிக்குப்பழி வாங்குவது அன்பின் செயல் அல்ல. அன்பு ஓயாது கொடுக்கிறது.

ஈசன் எனக்கருதி எல்லா உயிர்களையும் நேசத்தால் நீ நினைந்துகொள்.

—ஔவைக் குறள்

செப்டம்பர் 11 ஆவணி 27

புதுப்பித்தல்

பெரியபொருளே, உன்னைப் போற்றுமளவு என்னை நான் பண்புடையவனாகப் புதுப்பித்துக்கொள்கிறேன்.

இயற்கையானது ஓயாது தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது. ஆதலால் அது என்றும் புத்தம் புதியது. எண்ணத்திலும் வாழ்விலும் மனிதன் தன்னை மேலோனாகப் புதுப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறான்.

சிந்திக்குந் தோறும்
தெவிட்டா அமுதேஎன்
புந்திக்குள் நீதான்
பொருந்திடவுங் காண்பேனோ?

— தாயுமானவர்

செப்டம்பர் 12 ஆவணி 28

பிண்டம்

அண்ட நாயகனே, பிண்டமென்னும் என்னூடு நீ நிறைந்துள்ளாய். இதை நான் நன்கு உணர்வேனாக.

கையளவு கடல் நீரை யெடுத்து அதை நன்கு ஆராய்ந்தால் கடல் நீர் முழுதும் ஆராயப்பெற்றதாகிறது. பிண்டமாகிய நமது உடலுக்கு நாயகனாய் இருப்பவனைத் தெரிந்து கொண்டால் அண்ட நாயகனை நாம் அறிந்தவர் ஆகிறோம்.

அண்டத்திலும் இந்தவாறென்று அறிந்திடு பிண்டத்திலும் அதுவே பேசு.

— ஔவைக் குறள்

யந்திரம்

யந்திரங்களுள் மிக அற்புதமானது யாக்கை என்னும் யந்திரம். இறைவனை அடைதற்கு இது உதவுகிறது.

உயிரற்ற யந்திரங்கள், உயிருற்ற யந்திரங்கள் என இரண்டுவித யந்திரங்கள் உண்டு. மனிதனால் பொருத்தப்பெற்ற மனிதன் போன்ற யந்திரம் உண்டு. அது நடக்கவும் பேசவும் செய்யும். ஆனால் அதற்கு உயிரோ உணர்வோ இல்லை. பின்பு, மனிதன் என்னும் உயிர் யந்திரமோ கடவுளையே அறிய வல்லது.

இவ்வுடம்பு நீங்குமுனே
எந்தாய்கேள் இன்னருளாம்
அவ்வுடம்புக் குள்ளே
அவதரிக்கக் காண்பேனோ?

— தாயுமானவர்

செப்டம்பர் 14 ஆவணி 30

ஆறுதல் எங்கே?

எல்லாம் அழிந்துபட்டுப்போம் இவ் அவனியிலே அண்ணலே, நான் எதைச் சார்ந்திருந்து ஆறுதல் அடைவது?

இந்த நிலவுலகிலே எல்லாம் நாசமடைந்து வருகின்றன. நமது அன்புக்குரியவர் அழிந்துபட்டுப்போயினர். நண்பர் என்பார் நம்மைக் கைநழுவ விட்டுவிட்டனர். செல்வம் எல்லாம் சென்று கொண்டிருக்கிறது. ஆனால் உண்மை ஒன்று மட்டும் உறுதியாக நிற்கிறது. அவ்வுண்மையும் இறைவனும் ஒன்றே.

பொய்க்கூடு கொண்டு
புலம்புவனோ எம்மிறைவர்
மெய்க்கூடு சென்று
விளம்பிவா பைங்கிளியே.

— தாயுமானவர்

செப்டம்பர் 15 ஆவணி 31

நெடும் பயணம்

நதி கடலை நோக்கிப்பாய்ந்துகொண்டே இருப்பதுபோன்று இறைவா, நான் உன்னை நோக்கிப் பயணம் வந்துகொண்டே இருப்பேனாக.

பயணங்களுள் பெரியது கடவுளை நோக்கிப் போகும் பயணம். அது பல கற்ப காலமாக நிகழ்ந்துகொண்டே இருக்கலாம். பின்பு, பயணங்களுள் மிகக் குறுகியதும் கடவுளை நோக்கிப்போகும் பயணமேயாம். அது நொடிப்பொழுதில் பூர்த்தி ஆய்விடலாம். அதெல்லாம் மனதைப்பொறுத்தது.

எல்லாப் பிறப்பும்பிறந்து
இளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள்
கண்டு இன்று வீடுற்றேன்.

— மாணிக்கவாசகர்

செப்டம்பர் 16 புரட்டாசி 1

அகத்தில் இருப்பது

எங்கும் நீயே நிறைந்திருப்பதால் இறைவா, உன்னை உள்ளே வழுத்தத் தெரிந்துகொண்டால் புறத்தில் உன்னைப் போற்றுவது எளிதாகிறது.

நம் மனதில் இருப்பதைத்தான் நாம்வெளி யுலகிலும் காண்கிறோம். மனம் திருந்திய மையுமளவு புறவுலகில் ஒழுங்குப்பாடு இருப் பதைக்'காண்போம். மனம் முற்றிலும் நேர் மையடைந்து விட்டால் புறத்திலும் அந்த நேர்மையைக் காண்போம்.

மாசற்ற அன்பர்நெஞ்சே
மாறுத பெட்டகமாத்
தேசுற்ற மாமணிநின்
தேசினையுங் காண்பேனே?

— தாயுமானவர்

பூ

உன் திருவடியில் சாத்துதற்கு நான் தகுதியுடையவன் ஆவேனாக.

படிப்படியாக வளர்ந்து தேவாராதனைக்குத் தகுதியுடையதாகப் பூவானது தன்னை அமைத்துக் கொள்கிறது. மனிதன் நாள்தோறும் தூயவனாகவும் மேலானவனாகவும் தன்னைத் திருத்தியமைத்துக் கொள்ள வேண்டும். நலத்துக்கு நிகரானது நானிலத்தில் வேறு ஏதும் இல்லை.

இணையார் திருவடி
    என்தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள்
    அத்தனையுந் துறந்தொழிந்தேன்
அணையார் புனல்தில்லை
    அம்பலத்தே யாடுகின்ற
புணையாளன் சீர்பாடிப்
    பூவல்லி கொய்யாமோ.

— மாணிக்கவாசகர்

செப்டம்பர் 18 புரட்டாசி 3

திரை

தேவே, உன்னை நான் தரிசித்தற் பொருட்டுத் திரையை நீக்கி வைப்பாயாக.

உள்ளிருக்கும் தெய்வத்தைக் காணவொட்டாது மறைந்திருப்பது அக்ஞானம் என்னும் திரை. ஆசாபாசங்கள், அபிப்பிராயங்கள், வெறுப்பு, வெகுளி—இப்படியெல்லாம் வடிவெடுத்ததாய் இருக்கிறது அத்திரை. இக்குறைபாடுகளையெல்லாம் களையுங்கால் திரையும் நீங்கப்பெறுகிறது.

எம்மை வினையை
இறையையெம்பாற் காட்டாத
அம்மை திரோதை
அகலுநாள் எந்நாளோ?

— தாயுமானவர்

குரங்கு

நான் மனமடங்கியிருக்குமளவு மன்னே, உனக்கு நல்ல ஆராதனை செய்ய வல்லவனு கிறேன்.

அடங்காத மனது குரங்கு போன்றது. அது ஆசை என்னும் கள்ளைக் குடித்துவிட்டது; வெறி பிடித்து ஆடுகிறது. பின்பு பொறாமை என்னும் தேள் அதைக் கொட்டிவிட்டது. அப்பொழுது அது படும்பாடு சொல்லி முடியாதது.

மனமான வானரக்கைம் மாலை ஆக்காமல்
எனையான் அடிகளடி எய்துநாள் எந்நாளோ?

— தாயுமானவர்

செப்டம்பர் 20 புரட்டாசி 5

பொய்யுறவு

மெய்ப்பொருளே, உன்னை அடைதற்குப் பொய்ப் பொருளாகிய உடலைப் பயன்படுத்தக் கற்றுக்கொள்வேனாக.

உடல் ஓயாது மாறியமைந்துகொண்டிருக்கிறது. நேற்று இருந்தது போல் அது இன்று இருப்பதில்லை. திட்பமுற்றிருக்கும்போது தெய்வ வழிபாட்டுக்கு அது நல்ல உறவு ஆகிறது. நோய்வாய்ப் பட்டிருக்கும்போது அது பெருந்தடையாகிறது. எனவே அதன் உறவைப் பொய்யுறவு என்று அறிதல் வேண்டும்.

**உடல்பொய் யுறவாயின் உண்மைஉற வாகக்
கடவார் ஆர்? தண்ணருளே கண்டாய்.**

— தாயுமானவர்

நிராசை

ஆசையற்றிருப்பதே ஈசா, உன்னை ஏத்து தற்கான நல்ல நிலையாகிறது.

பிறவியைப் பெருக்குவது ஆசை. பிரபஞ்ச வாழ்வில் அல்லல்களை உண்டுபண்ணுவது ஆசை. சாந்தியைக் கலைப்பது ஆசை. ஆனந் தத்தை மறைப்பது ஆசை. நிராசையோ மனிதனை தெய்வ சன்னிதியில் சேர்த்துவிடு கிறது.

ஆசையெனும் பெருங்காற்றூ டிலவம்
பஞ்செனவும் மன தலையுங் காலம்
மோசம் வரும் இதனாலே கற்றதும் கேட்
டதும் தூர்ந்து முக்திக்காண
நேசமும் நல்வாசமும் போய்ப் புலனாயிற்
கொடுமைபற்றி நிற்பர் அந்தோ
தேசுபழுத்தருள் பழுத்த பராபரமே
நிராசையின்றேல் தெய்வ முண்டோ.

— தாயுமானவர்

செப்டம்பர் 22 புரட்டாசி 7

மேகமண்டலத்துக்கு மேல்

ஒண்பொருளே, உயர்ந்த எண்ணத்தில் என் உள்ளம் யாண்டும் உறைந்திருப்பதாகுக.

ஆகாய விமானம் மேலே பறக்கிறது. மேக மண்டலத்துக்கு மேலே அது போய்விட்டால் அதன் வேகமான பயணத்துக்குத் தடையொன்றுமில்லை. மனிதன் எண்ணத்தில் மிக உயரமாய்ப் போய்விடுவானாைல் உலகத்தவர்களிடமுள்ள குறைபாடுகளோடு அவனுக்கு முரண்பாடு உண்டாகாது.

ஒன்றுஎன் றிரு; தெய்வம் உண்டென்றிரு
உயர் செல்வமெல்லாம்
அன்றுஎன் றிரு; பசித்தோர் முகம்பார்
நல்அறமும் நட்பும்
நன்றுஎன் றிரு; நடு நீங்காமலே
நமக்கு இட்டபடி
என்றுஎன் றிரு; மனமே உனக்கே
உப தேசம் இதே.

— பட்டினத்தார்

செப்டம்பர் 23 புரட்டாசி 8

நைவேத்தியம்

உனக்கு நைவேத்தியமாகப் படைப்பதற்கேற்ற நல்வாழ்வை நான் யாண்டும் வாழ்ந்து வருவேனாக.

தெய்விகப் பேரியல்பு மனிதனிடத்து மறைந்திருக்கிறது. அதை ஞாபகமூட்டுதற்கான வாழ்வே நல்வாழ்வு ஆகிறது. பிறரோடு மனிதன் செய்கிற இணக்கம் அவர்களிடத்துள்ள பேரியல்பை முன்னணிக்குக் கொண்டு வருவதாயிருக்கவேண்டும். அதை வளர்ப்பதற்கான சொற்களும் செயல்களுமே மேலான சொற்களும் செயல்களும் ஆகின்றன.

அட்டாங்க யோகமும் ஆதாரம்
ஆறும் அவத்தை ஐந்தும்
விட்டேறிப் போன வெளிதனிலே
வியப் பொன்றுகண்டேன்
வட்டாகிச் செம்மதிப் பாலூறல்
உண்டு மகிழ்ந்திருக்க
எட்டாத பேரின்பம் என்னை
விழுங்கி யிருக்கின்றதே.

— *பட்டினத்தார்*

முறை மாற்றம்

போகத்தை நாடுகிற நாட்டம் யோகத்தை நாடுகிற நாட்டமாக என்னிடத்து மாறியமையும்படி ஈசா, அருள்புரிவாயாக.

நீர்வீழ்ச்சி என்னும் ஆகர்ஷண சக்தியை மின்சக்தியாக மாந்தர் மாற்றியமைக்கின்றனர். போராட்டத்தை மனிதன் அமைதியாக மாற்றவேண்டும். காமத்தைக் கடவுள் பக்தியாக்க வேண்டும். வெறுப்பை அருள் கலந்த இரக்கமாக மாற்றிவிட வேண்டும். அப்பொழுது மனிதன் சான்றோனாக மாறி விடுகிறான்.

விட்டேன் உலகம் விரும்பேன்
இருவினை வினைருடன்
கிட்டேன் அவருரை கேட்டும்
இரேன்மெய் கெடாதநிலை
தொட்டேன் சுகதுக்க மற்றுவிட்டேன்
தொல்லை நான்மறைக்கும்
எட்டேன் எனும்பரம் என்னிடத்தே
வந்திங் கெய்தியதே.

— பட்டினத்தார்

எழில் வடிவம்

கல்லைச் செதுக்கி உயிர் ததும்பும் உருவத்தைச் சிற்பி சமைப்பதுபோன்று உள்ளத்தைத் திருத்தி நான் தெய்விகம் திகழ்பவன் ஆவேனாக.

அண்டங்களையெல்லாம் உருவாக்கும் மஹாசிற்பியாக சர்வேசுவரன் இருக்கிறார். என்னை நல்லவனாக உருவாக்கும் சிற்பி நான் ஆவேனாக. உள்ளுறையும் இறைவன் துணைகொண்டு என்னை நான் ஒழுங்குபடுத்தாவிட்டால் வேறு யார்க்கு அது இயலும்?

நினைப்பும் மறப்பும்அற நின்ற பரஞ்சோதி
தனைப்புலமா என்னறிவிற் சந்திப்ப
தெந்நாளோ?

— தாயுமானவர்

இப்பொழுதே

உன் அருளுக்குப் பாத்திரமாவதற்கு ஏற்ற எதிர்காலத்துக்கு நான் காத்திரேன். ஆண்டு, இப்பொழுதே இறைவா, அதை நான் பெற்றாகவேண்டும்.

நல்லாராக எல்லாரும் விரும்புகின்றனர். ஆனால் அதன் பொருட்டு அவர்கள் எதிர் காலத்தை நோக்கி நிற்கின்றனர். பசித்திருப் பவன் இப்பொழுதே புசிக்க விரும்புவது போன்று அருளுக்குப் பாத்திரமாவதற்கு இதுவே தருணம். அதைப் பெற முழு மன துடன் இப்பொழுதே முயலவேண்டும்.

எண்ணிறைந்த மேன்மைபடைத்து
எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்க்
கண்ணிறைந்த சோதியைநாங்
காணவா நல்லறிவே.

— தாயுமானவர்

செப்டம்பர் 27 புரட்டாசி 12

மாணிக்கம்

உலகம் நல்குகிற இன்ப துன்பங்களுக்கிடையில் இறைவா, உன்மீது கொண்டுள்ள பேரன்பை நான் என்றும் மாற்றாது வைத்திருப்பேனாக.

குப்பையில்கிடக்கும்போதும், பொன் பெட்டகத்தில் வைத்திருக்கும்போதும் மாணிக்கம் மாணிக்கமே. அன்பு, ஆனந்தம், அமைதி, பொறுமை, இரக்கம் ஆகிய நற்குணங்கள் வாய்க்கப்பெற்ற சான்றோன் எல்லா நிலைகளிலும் சான்றோனாக இருக்கிறான். தன்னைப் போற்றுபவனிடத்தும் தூற்றுபவனிடத்தும் அவன் சான்றோனாயிருக்கிறான்.

மாணிக்கத் துள்ளொளிபோல்
மருவி யிருந்தாண்டி
பேணித் தொழும்அடியார்
பேசாப் பெருமையன்காண்.

— பட்டினத்தார்

இடிக்கமுடியாத மாளிகை

தேவாதிதேவனே, தெய்வப் பெற்றியைப் பெற்றபின் நான் அதை இழப்பது எங்ஙனம்?

தனது உள்ளத்தில் மனிதன் கட்டும் மாளிகைக்குத் தூய்மை, நல்லறிவு, இரக்கம், அன்பு ஆகிய நான்கும் நான்கு சுவர்கள் ஆகின்றன. அமைதி அதன் கூரை. சிரத்தை அதன் தளம். இறைவழிபாடு அதன் வாயில். அருள் அதனுள் வீசும் காற்று. ஆனந்தம் ஆங்கு நிகழும் இசை.

போக்குவர வற்றவெளி
போல்நிறைந்த போதநிலை
நீக்கமறக் கூடி
நினைப்பறுவ தெந்நாளோ?

— தாயுமானவர்

செப்டம்பர் 29 புரட்டாசி 14

இறந்தகாலமும் எதிர்காலமும்

காலத்துக்கும் காலனுயுள்ள கடவுளே, யான் யாண்டும் உன்னை என் இதயத்தில் காண்பேனுக.

இறந்தகாலம் இனி வருவதில்லை. கனவு போன்று அது மறைந்து போய்விட்டது. அதைப்பற்றிய எண்ணமோ நிகழ்காலத்துக்குரியது. எதிர்காலம் வெறும் மனே கற்பனை. அக்கற்பனையும் நிகழ்காலத்தில்தான் இருக்கிறது. இடையரு நிகழ்காலமே யாண்டும் உளது. ஆத்ம சன்னிதானம் என்பது இதுவே.

அன்றுமுதல் இன்றளவும் அறியாப்பருவ
மதில்
என்றும் பொதுவாயிருந்த நிராமயன்காண்.

— பட்டினத்தார்

செப்டம்பர் 30 புரட்டாசி 15

ஈசன் நிலே

புறப்பட்ட இடமாகிய உன்னையே வந்தடைய ஈசா, நான் ஓயாது முயன்று கொண்டிருக்கிறேன்.

இயற்கையில் ஒவ்வொரு பொருளும் தன் மூலஸ்தானத்தையே போய்ச்சேர முயன்று கொண்டிருக்கிறது. கடலினின்று புறப்பட்ட நீராவி இறுதியில் கடலை எட்டிவிடுகிறது. மனிதன் கடவுளிடத்திலிருந்து புறப்பட்டவன். அவனிடத்துள்ள மனோவிகாரங்களாகிய அச்சம், அகங்காரம் ஆகியவைகளை ஒழித்தால் அவன் மூலஸ்தானத்தை எட்டிவிடுகிறான்.

அச்சம் ஆங்காரம் அகத்தடக்கினால்
நிச்சயமாம் ஈச னிலே. [பின்னே

— ஔவைக் குறள்

சன்மார்க்கம்

எந்தையே, உன் சன்னிதியை அணுகுமளவு உனக்கும் எனக்குமுள்ள தொடர்வை நான் நன்கு அறிகிறேன்.

சத்பொருளாகிய பரமனை நோக்கிப் போகும் மார்க்கம் சன்மார்க்கமாம். அம்மார்க்கத்திலே முன்னேற்றமடைந்து வருமளவு மனம் தெளிவடைகிறது. தெளிந்த மனதே தெய்வத்தைத் தெரிந்துகொள்கிறது.

தெளிவறி யாதார் சிவனை யறியார்
தெளிவறி யாதார் சீவனு மாகார்
தெளிவறி யாதார் சிவமாக மாட்டார்
தெளிவறி யாதவர் தீரார் பிறப்பே.

— திருமந்திரம்

பாய்மரம்

பிரபஞ்ச வாழ்வு என்னும் கரைகாணக் கடலிலே எனக்குக் கப்பல் போன்று இருப்பவர் தாமே.

கடலில் சென்ற கப்பலின் பாய்மரத்தில் பறவையொன்று உட்கார்ந்திருந்தது. ஒரே இடத்தில். எவ்வளவு நேரம் இருப்பது என்று எண்ணிய பறவை புறத்தே பறந்து போனது. எங்குச்சென்றும் உட்காரக் கடலில் இடம் கிடைக்கவில்லை. பழையபடி பாய்மரத்துக்கே வந்துவிட்டது. கடவுள் நமக்கு அப்பாய்மரம் போன்றவர்.

ஆழித் துரும்பெனவே அங்குமிங்கும்
உன்னடிமை
பாழில் திரிவதென்ன பாவம் பராபரமே.

— தாயுமானவர்

அக்டோபர் 3 புரட்டாசி 18

வீண் பேச்சு

அருள் தேவா, உன் பெருமையையே பேசுவேன். அல்லது பேச்சற்றுச் சும்மா இருப்பேன்.

சொல்லால், பார்வையால் அல்லது சைகையால் பிறரை ஏமாற்றி விடாதே. வீண் பேச்சை நச்சுப்பாம்புபோன்று விலக்கி விடு. பிறரிடமுள்ள குறைபாடுகளைப் பேசாதே.நலம் தரும் உண்மையையே நவில். அதையும் அளவுடன் பேசு.

ஒருரையால் வாய்க்குமுண்மைக்கு
ஓரனந்த நூல்கோடிப்
பேருரையாற் பேசில்என்ன
பேறும் பராபரமே.

— *தாயுமானவர்*

தன் கடன்

எனக்கு ஏற்பட்டுள்ள கடமையை இறைவா, உனது ஆராதனையாக நான் அல்லும் பகலும் ஆற்றுவேனாக.

உடலில் உள்ள ஒவ்வோர் உறுப்புக்கும் அதனதன் கடமையுண்டு. இறைவனுடைய ஆட்சியில் எல்லாவுயிர்களுக்கும் பலதரப்பட்ட கடமைகள் உண்டு. தனக்கு அமைந்துள்ள கடமையை ஒழுங்காகச் செய்வது மானுட வாழ்வின் நோக்கமாகும். கடமையை தேவாராதனை போன்று செய்வதே முன்னேற்றத்துக்கு உற்ற உபாயம்.

தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே.

— அப்பர்

யுக்தி

முறையாக ஆராயுமிடத்து மெய்ப் பொருளே, எல்லாம் உன்மயம் என்பது வெளியாகும்.

நிறைகோலானது பொருள்களை உள்ளபடி எடை போடுகிறது. யுக்தி அல்லது மெய்ப் பொருள் விசாரணையை முறையாகச் செய்து கொண்டு போனால் அந்த யுக்தியானது மனிதனை தெய்வ சன்னிதானத்துக்குப் பக்கத்தில் கொண்டு சேர்க்கும். யுக்தியைப் பயன் படுத்துவதும் ஆத்ம சாதனமேயாம்.

பொல்லாத காமப் புலைத்தொழிலில் என்னறிவு
செல்லாமல் நன்னெறியிற் சேருநாள்
[எந்நாளோ ?

— தாயுமானவர்

சாரம் கட்டுதல்

உலகப் பொருள்களின் துணைகொண்டு இறைவா, உன்னை நான் நன்கு போற்றுவேனாக.

வீடு கட்டுதற்கு முதலில் சாரம் கட்டுகிறோம். சாரம் இல்லாவிட்டால் கட்டடத்தை உயரமாக எழுப்ப முடியாது. ஆனால் கடைசியில் சாரத்தைக் கலைத்தாக வேண்டும். கடவுளை அடைதற்கு உடல் வாழ்வு சாரம். அவரை அடைந்தான பிறகு சரீரம் என்னும் சாரத்தைக் கலைக்கவேண்டும்.

பேய்போல் திரிந்து
 பிணம்போல் கிடந்துபெண்ணைத்
தாய்போல் நினைத்துத்
 தவம்முடிப்பது எக்காலம்?

— பத்திரகிரியார்

அக்டோபர் 7 புரட்டாசி 22

நிலைத்த உறவு

போற்றுதற்கும் சார்ந்திருப்பதற்கும் நின்னையல்லால் வேறு நட்பு யாரையும் யான் அறிந்திலேன்.

உற்றார் உறவினர் என்பார் எல்லாரும் அவரவர் வினையை முடிக்க இவ்வையகத்தில் வந்துளர். அப்படி வருவதும் போவதும் தனித்தனியே நிகழ்கின்றன. ஒருவருக்காக இன்னொருவர் தனது போக்கு வரவை மாற்றுவதில்லை. ஆதலால் இவர்கள் நிலைத்த உறவினர் ஆகார். கடவுள் ஒருவரே நிலைத்த உறவு ஆகிறார்.

என்பெற்ற தாயாரும் என்னைப்
பிணமென்று இகழ்ந்துவிட்டார்
பொன்பெற்ற மாதரும் போவென்று
சொல்லிப் புலம்பிவிட்டார்
கொன்பெற்ற மைந்தரும் பின்வலம்
வந்து குடமுடைத்தார்
உன்பற் றொழிய வொருபற்றும்
இல்லை உடையவனே.

— பட்டினத்தார்

அக்டோபர் 8 புரட்டாசி 23

உனது விருப்பம்

அண்ணலுக்கே நான் ஆட்பட்டவன். அவருக்குத் தொண்டு புரிவதல்லாது வேறு எதையும் அறியேன்.

நல்ல வேலைக்காரன் ஒருவன் தனது தலைவனிடம் தன்னை ஒப்படைத்து விடுகிறான். சம்பளம் கேட்பதில்லை; எதைக்கொடுத்தாலும் திருப்தியோடு ஏற்றுக் கொள்கிறான்; கொடாவிட்டால் குறை கூறுவதில்லை. அத்தகைய வேலைக்காரன் விஷயத்தில் தலைவனது பொறுப்பு மிகப் பெரியது ஆகிறது. கடவுள் தலைவன்; நான் வேலைக்காரன்.

வேண்டத்தக்கது அறிவோய் நீ வேண்ட
முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற்கு அரியோய் நீ வேண்டி
என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயாது அருள் செய்தாய் யானும்
அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன்று உண்டென்னில்
அதுவும் உன்தன் விருப்பன்றே.

— மாணிக்கவாசகர்

அக்டோபர் 9 புரட்டாசி 24

சீர்திருத்தம்

உன்னை நாடுகிற பெருநாட்டத்தில் ஈசா, நான் உன் மயம் ஆய்விடுகிறேன்.

எண்ணத்துக்கு ஏற்றவாறு புறவுலகம் காட்சி கொடுக்கிறது. கெட்ட எண்ணமுடையவனுக்குப் புறவுலகில் கேடு மிக நிறைந்திருக்கிறது. எண்ணத்தை ஒழுங்குபடுத்துமளவு கேடு உலகினின்று அகன்று விடுகிறது. சீர்திருத்தம் யாவும் மனதில் இருக்கிறது.

வான்கெடுத்துத் தேடும்
மதிகேடர் போலஎமை
நான்கெடுத்துத் தேடாமல்
நன்கறிவ தெந்நாளோ?

— தாயுமானவர்

தீங்கிழைத்தல்

நிகழ்வதெல்லாம் நின் செயல் எனக் காண்பவனுக்கு நலமேது, தீது ஏது?

மனிதன் ஒருவனுக்குப் பிறர் தீங்கு இழைக்கின்றனர். அத்தீங்கு அவனுக்கு எப்படி வந்ததென்று எண்ணிப் பார்க்கவேண்டும். தனது மனதில் உள்ள தீங்கு புறச்செயலாக வடிவெடுத்து அவனிடம் வந்தது. தீங்கை ஏற்பதற்கான தீய மனமுடையவனுக்கே புறவுலகினின்று தீங்கு விளைகிறது. சான்றோனுக்கு வரும் தீங்கை அவன் தீங்காக ஏற்பதில்லை.

புண்ணியபா வங்கள்
பொருந்தாமெய் யன்பரெல்லாம்
நண்ணியபே ரின்பசுகம்
நானணைவ தென்நாளோ?

—தாயுமானவர்

நல்ல வாய்ப்பு

கருணாகரனே, நான் உன் கையில் கருவியாயிருக்கக் கற்றுக்கொள்வேனாகில் ஒவ்வொரு வேளையும் எனக்கு நல்ல வாய்ப்பே.

செல்வம், செல்வாக்கு, சுதந்திரம் முதலிய வாய்புக்கள் அமைந்தால்தான் அரும்பெரும் செயல்களைச் செய்யமுடியும் என்று எண்ணுபவன் உண்டு. ஆனால் நல்லவாய்ப்பு என்பது மனிதனுடைய மன நிலையைப் பொறுத்தது. நல்ல மனமுடையவனுக்கு அமைவதெல்லாம் நல்ல வாய்ப்பேயாம்.

ஆருமறி யாமலெனை அந்தரங்க மாகவந்து
சேரும் படிஇறைக்குச் செப்பிவா பைங்கிளியே.

— *தாயுமானவர்*

சிருஷ்டி கர்த்தா

உன்னையே எண்ணியிருந்து இறைவா, உன்னை நான் அடைவேனாக.

சிருஷ்டி கர்த்தாவாகிய நான்முகக்கடவுள் இப்பிரபஞ்ச சொரூபமாக இருந்து எண்ணிறந்த புதிய வடிவங்களை எடுத்து வருகிறார். ஆதலால் அந்தந்த உயிர் தன்னைத்தானே புதியதாக சிருஷ்டித்துக்கொள்கிறது. மனிதன் தன்னை மேலோனாக சிருஷ்டித்துக் கொள்ள முடியும். ஓயாது எண்ணுகிற எண்ணம் அவனை அப்படியமைக்கிறது.

உன்னைநினைந் துன்நிறைவின்
உள்ளே உலாவும்என்னை
அன்னைவயிற் றின்னம்
அடைக்காதே பராபரமே.

— தாயுமானவர்

ஓயாத பாடம்

உன்னை அடைதற்கான பாடத்தை ஈசா, நீ ஓயாது புகட்டிக்கொண்டே இருக்கிறாய்.

மனிதன் ஆனந்தத்தை நாடுகிறான். ஆனால் நிலையற்ற உலகப் பொருள்களிடத்தில் அவன் அதை நாடி ஏமாற்றமடைகிறான். அடிமேல் அடியடித்து இயற்கைத்தாய் அந்த இன்பம் அழியும் பொருள்களிடத்து இல்லை யென்ற பாடத்தைப் புகட்டுகிறாள். ஆனந் தத்துக்கு இருப்பிடம் இறைவன் என்பதை அறிந்துகொள்ளும்வரை அப்பாடம் நடக் கிறது.

ஓயாதோ என்கவலை உள்ளே ஆனந்த
வெள்ளம்
பாயாதோ ஐயா பகராய் பராபரமே.

— தாயுமானவர்

அக்டோபர் 14 புரட்டாசி 29

விவேகம்

சித்தமிசை குடிகொண்டுள்ள அறிவான தெய்வமே, விவேகம் என்னும் விளக்கேற்றி வைத்து உன்னைத் தரிசிப்பேனாக.

நித்தியமாய், மனிதனுக்கு நலன் தருவதாய் இருப்பது எது என்று பாகுபடுத்த வேண்டும். உடலையும் உள்ளத்தையும் பற்றிய யாவும் ஓயாது மாறிக்கொண்டிருக்கின்றன. ஆகையால் அவை நித்தியமானவைகள் அல்ல. அறிவையும் ஆனந்தத்தையும் பற்றியது நித்தியமானது. இதை அறிந்து கொள்ளுதல் விவேகம்.

எப்பொருளும் நீயெனவே
எண்ணிநான் தோன்றாத
வைப்பைஅழி யாநிலையா
வையாய் பராபரமே.

— தாயுமானவர்

அக்டோபர் 15 புரட்டாசி 30

வியாகூலம்

கருணைக் கடலே, உன்னை நான் அணுக வில்லையே என்ற வியாகூலம் என் உள்ளத்தில் பொங்கிக்கொண்டிருக்குமாக.

பணம், போகம், பதவி, புகழ் ஆகியவைகளைப்பற்றி அல்லும் பகலும் மனிதன் வியாகூலப்படுகிறான். அதிவிரைவில் அவை யாவும் மறைந்து போகக்கூடியவைகள் என்பதை அவன் எண்ணிப்பார்ப்பதில்லை. அதே வியாகூலத்தைக் கடவுளின் பொருட்டு அவன் அடைவானாகில் அது நித்தியானந்தத்துக்கு வழிகாட்டிவிடும்.

தாகமறிந்து இன்பநிட்டை
தாராயேல் ஆகெடுவேன்
தேகம் விழுந்திடின்என்
செய்வேன் பராபரமே.

— **தாயுமானவர்**

அக்டோபர் 16 புரட்டாசி 31

வைராக்கியம்

பொய்யாகிய பிரபஞ்ச வாழ்க்கையில் வைராக்கியம் வைக்காது மெய்யாகிய பரமனே, உன்னை நான் அடைவது எங்ஙனம்?

விடாப்பிடி கொள்வதைச் சிலர் வைராக்கியம் என்று எண்ணுகின்றனர். உண்மை அதுவன்று. ராகம் என்றால் பற்றுதல். விராகம் அல்லது வைராக்கியம் என்றால் பற்றற்ற நிலை. உலக விஷயங்களில் வைராக்கியம் வந்தால் பகவத் விஷயங்களில் இயல்பாக நாட்டம் உண்டாகும். வைராக்கியம் இல்லாதவனுக்கு ஆத்மசாதனம் இல்லை.

சுரப்பற்று வல்வினை சுற்றமு
மற்றுத் தொழில்களற்றுக்
கரப்பற்று மங்கையர் கையிணைக்
கற்றுக் கவலையற்று
வரப்பற்று நாதனை வாயார
வாழ்த்தி மனமடங்கப்
பரப்பற் றிருப்பதன் றோபர
மாபர மானந்தமே.

— பட்டினத்தார்

சமம்

தேங்கிய நீரில் திங்களின் பிம்பம் தென்படுவது போன்று அமைதியுற்ற உள்ளத்தில் அண்ணலே, உன் திருக்காட்சி தென்படுகிறது.

தத்தளித்துக் கொண்டிருக்கும் நீரில் மனிதன் தனது பிம்பத்தையோ, ஒரு மரத்தின் பிம்பத்தையோ, சந்திரனது பிம்பத்தையோ சரியாகக் காணமுடியாது. அலைந்துகொண்டிருக்கும் மனதில் உண்மை ஒளிர்வதில்லை. சமம் என்பது மனம் அடங்கிய நிலை. ஞானத்துக்கு அது முற்றிலும் அவசியமானது.

ஒன்றைநினைந்து ஒன்றைமறந்து
ஓடுமனம் எல்லாம் நீ
என்றறிந்தால் எங்கே
இயங்கும் பராபரமே.

— தாயுமானவர்

அக்டோபர் 18 ஐப்பசி 2

தமம்

பொறிவழியே போகுமளவு பரம்பொருளே, நான் உனக்கு வேற்றான் ஆய் விடுகிறேன்.

சுவையை நம்பி மீன் தூண்டிலில் சிக்கிக் கொள்கிறது. கண்கொண்டு தீயில் பற்று வைத்து விட்டில் பூச்சி அதில் வீழ்ந்து மாய்கிறது. ஊறு அல்லது ஸ்பரிசத்தை நம்பி யானை பிடிபடுகிறது. ஓசைக்கு அடிமையாகி மான் பிடிபடுகிறது. மணத்தை நாடி வண்டு மலரில் அகப்படுகிறது. இந்த ஐம்பொறிகளையும் நம்பியோடுகிற மனிதன் கதி என்னுவது? ஐம்பொறிகளை அடக்குவது தமம்.

ஆமை வரும்ஆட்கண்டு
ஐந்தடக்கஞ் செய்தாற்போல்
ஊமை உருக்கொண்டு
ஒடுங்குவதும் எக்காலம்?

—பத்திரகிரியார்

அக்டோபர் 19 ஐப்பசி 3

உள்ளக் கொதிப்பு

உள்ளக் கொதிப்பு ஒடுங்கினலொழிய ஆனந்தமான பரத்தை அதனூடு காண முடியாது என்பதை நான் அறிந்துகொள் வேனாக.

பொருந்தியவைகளும் பொருந்தாதவை களுமாகிய எண்ணிறந்த விருத்திகள் மனதி னுள் உதித்துக்கொண்டே இருக்கின்றன. அவைகளை ஓய்ந்திருக்கப் பண்ணவேண்டும். தோன்றத் தோன்ற அவைகளை ஒதுக்கி வைக்கவும் வேண்டும். திரையற்ற கடல் போன்று மனம் ஆய்விட்டால் அது உபரதி யாகும்.

வாதனைவிட் டுன்னருளின்
மன்னினலல்லால் வேறுமொரு
சாதனைதான் உண்டோ நீ
சாற்ருய் பராபரமே.

— தாயுமானவர்

அக்டோபர் 20 ஐப்பசி 4

சகித்தல்

பரிபூரணானந்தமே, உன்னில் நான் திளைத்திருக்குங்கால் உலக வாழ்வு உண்டுபண்ணும் துன்பத்தைச் சகிக்கும் திறன் தானே வந்துவிடுகிறது.

மண்ணுலகில் பிறப்பெடுத்திருப்பவர்களுக்குத் துன்பத்துக்குமேல் துன்பம் வந்து கொண்டேயிருக்கும். அவைகளைப் பொறுத்துக்கொள்ளுமளவு மனது உறுதி பெறுகிறது. துன்பத்தில் தளர்வுறுமளவு மனவலிவு குறைகிறது. உறுதியான உள்ளம் படைத்துத் துன்பத்தைப் பொருள்படுத்தாதிருப்பது திதிக்ஷை.

**காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூங்கு இல்லை உயிர்க்கு.**

— திருக்குறள்

சிரத்தை

அன்னே, உன்னை அடைய வேண்டும் என்னும் ஊக்கம் ஓயாது என் உள்ளத்தில் குடிகொண்டிருப்பதாகுக.

சிரத்தைக் கேற்றவாறு மனிதன் மேன்மையடைகிருன். தான் மேன்மையடைந்தே ஆகவேண்டுமென்று முதலில் அவன் அதன் மீது சிரத்தை வைத்தாகவேண்டும். தான் அடையும் லக்ஷியமே தனக்கேற்ற பெருநிலையென்று அந்த லக்ஷியத்தின் மீது அடுத்தபடி சிரத்தை காட்டவேண்டும். மூன்ருவதாகத் தான் ஒழுகும் மார்க்கத்தில் சிரத்தை வைக்கவேண்டும்.

உள்ளம் உடைமை உடைமை
பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.

— திருக்குறள்

சமாதானம்

என்னை உன் சொரூபத்தில் ஒடுக்கினலொழிய சமாதானத்தை நான் எங்ஙனம் காண்பேன், ஈசா?

சமாதானம் வேண்டுமென்று உலகத்தவர் ஓலமிடுகின்றனர். ஆனல் அவர்கள் உள்ளத்தில் ஓயாது பொங்கியெழுந்து கொண்டிருப்பது போராட்டமும் சஞ்சலமுமேயாம். தான் தனது என்பனவற்றைத் துறந்தார்க்கன்றி நிலைத்த சமாதானம் உண்டாகாது.

கட்டறுக்க வொண்ணுக்
கருவிகர ணுதியெல்லாஞ்
சுட்டறுத்து நிட்டையிலே
தூங்குவது மெக்காலம்?

— பத்திரகிரியார்

அக்டோபர் 23 ஐப்பசி 7

முமுக்ஷுத்வம்

சச்சிதானந்த சிவமே, உன்னை நான் அடைந்தாக வேண்டுமென்று முழு மனதோடு முயன்றால் நொடிப்பொழுதில் உன்னில் நான் ஒன்றித்து விடுவேன்.

தண்ணீருக்குள் அமிழ்த்தி வைக்கப்பட்டிருப்பவனுக்கு வேறு எந்த விதமான நாட்டமும் உண்டாவதில்லை. சுவாசிப்பதற்குக் கொஞ்சம் காற்றுக் கிடைத்தால் போதுமென்று அதன் பொருட்டே அவன் திணறுவான். உயிரைக் காப்பாற்றத் திண்டாடுவது போன்று தெய்வத்தை அடையத் திண்டாடுவது முமுக்ஷுத்வம்.

தித்திக்குந் தெள்ளமிர்தை சித்தாந்தத்துட்
பொருளை
முத்திக்கு வித்தை முதனினைப்பதெக்
காலம்?

— பத்திரகிரியார்

அக்டோபர் 24 ஐப்பசி 8

கடலின் அடிமட்டம்

உள்ளத்தினுள்ளே அமைதியில் நிலைத்திருந்து இறைவா, உன்னை நான் போற்றுவேனாக.

கடலின் மேற்பகுதியில் அலை வீசுகிறது. மலைபோன்று அது உயர எழுகிறது. ஆனால் ஆழமான அடிமட்டத்தில் அது அசையாதிருக்கிறது. மனிதனுடைய மனதின் அடிப்பகுதி அங்ஙனம் அசையாதிருக்க வேண்டும். தெய்வ சாந்தி நிலவுதற்கு அந்த அடிப்பகுதியே உற்ற இடமாகும்.

மற்றிடத்தைத் தேடியென்றன்
வாழ்நாளைப் போக்காமல்
உற்றிடத்தைத் தேடி
உறங்குவது மெக்காலம் ?

— பத்திரகிரியார்

அக்டோபர் 25 ஐப்பசி 9

பரபோதம்

உலகை எண்ணி உலகமயமாய் இருக்கும் நான், உன்னை எண்ணி உனது போதத்தில் நிலைத்து நின்று விடுவேனாக.

மாறுபடும் இரண்டு எண்ணங்கள் மனதில் ஏக காலத்தில் வருவதில்லை. ஓர் எண்ணத்தில் அது ஊறியிருக்கும்போது ஏனைய எண்ணங்கள் அடிபட்டுப் போய் விடுகின்றன. பரபோதம் என்னும் பேரறிவில் எண்ணங்கள் யாவும் அடிபட்டுப் போய் விட்டால் பேரறிவே எஞ்சி நிற்கும்.

பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னில் மறைந்தது பொன்னணி பூடணம்
தன்னை மறைத்தது தன்கர ணங்களாம்
தன்னில் மறைந்தது தன்கர ணங்களே.

— திருமந்திரம்

அக்டோபர் 26 ஐப்பசி 10

சரியை

குழந்தையாயிருந்து வாழ்வைத் துவக்கு வது போன்று சாதனம் சரியையில் துவங்கு கிறது. பின்பு வாழ்நாளெல்லாம் அது அனுஷ்டிக்கப்படுகிறது.

ஒரு குடும்பத்துள் பிறந்து வளரும் குழந் தைக்கு முதலில் வாழ்க்கைமுறை புகட்டப் படுகிறது. பெற்றோர் சொற்படிஅது பணிந்து நடக்கவேண்டும். பெற்றோர் ஒழுகுவதைப் பார்த்தும் அது பின்பற்றுகிறது. பழக்கத் தால் நல்ல வாழ்க்கை வாழுதலில் படிந்து விடுவது சரியை.

நாடு நகரமும் நற்றிருக் கோயிலுந்
தேடித் திரிந்து சிவபெரு மான்என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக்
கொள்வனே.

— திருமந்திரம்

கிரியை

மனம், மொழி, மெய் ஆகிய திரிகரணங்களால் தேவே, உனக்கென்றே நான் செயல் புரிவேனாக.

வயது வரும்பொழுது ஒவ்வொரு மனிதனும் வினையாற்றத் தகுதியுடையவன் ஆகிறான். அவன் புரியும் கருமம் தனக்கு மட்டுமல்லாது உலகுக்கும் நன்கு பயன்படவேண்டும். அத்தகைய கருமத்தைக் கடவுளுக்கென்றே செய்வது கிரியை ஆகிறது.

இதுபணிந் தெண்டிசை மண்டலம் எல்லாம்
அதுபணி செய்கின் றவனொரு கூறன்
இதுபணி மானுடர் செய்பணி ஈசன்
பதிபணி செய்வது பத்திமை காணே.

— *திருமந்திரம்*

சம்யோகம்

யான், எனது என்பனவற்றையெல்லாம் நீ, உனது என்று உன்மயமாகக் கற்றுக் கொள்வேணுக.

கடலினுக்குப் புறம்பாக அலைக்கு வியக்தியில்லை. கடவுளுக்குப் புறம்பாக மனிதனுக்கு வியக்தியில்லை. கடலைச் சார்ந்திருந்தே அலை தன் வலிவைப் பெறுகிறது. கடவுளைச் சார்ந்திருந்தே மனிதன் தனது ஆற்றலைப் பெறுகிறான். தனக்குரிய யாவையும் கடவுளிடத்திருந்து பெறுவது சம்யோகம்.

யோகச் சமயமே யோகம் பலவுன்னல்
யோக விசேடமே அட்டாங்க யோகமாம்
யோகநிர் வாணமே உற்ற பரோதயம்
யோக அபிடேகமே ஒண்சித்தி யுற்றலே.

— *திருமந்திரம்*

அக்டோபர் 29 ஐப்பசி 13

ஞானம்

ஆதிபகவன் எனும் சிவசக்தியினிடத்திருந்தே உலகனைத்தும் உருவெடுத்திருக்கின்றன என்பதை அறிந்துகொள்வேணுக.

ஜடப்பொருள்களுள் வேற்றுமை காண்பதும் ஜீவர்களுக்கிடையில் வேற்றுமை காண்பதும் அக்ஞானம். அவையாவும் ஒரே மூலப்பொருளிடத்திருந்து தோற்றத்துக்கு வந்துள்ளன. ஒரு பொருளே பலவாய்த் தோன்றிக்கொண்டிருக்கிறது என்பதை அறிந்துகொள்வது ஞானம்.

ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று
ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவாம்
ஞானத்தின் மிக்கார் நரரின்மிக் காரே.

— *திருமந்திரம்*

அக்டோபர் 30 ஐப்பசி 14

சோம்பல்

யாண்டும் பேருக்கம் படைத்திருந்து பரமனைப் போற்றி வருவோமாக.

ஆத்ம சாதனத்துக்குப் பேரிடைஞ்சலா யிருப்பது சோம்பல். அதை அகற்ற இயலாத வர்க்கு முன்னேற்றமில்லை. தேவைக்குமேல் உடலுக்கு ஓய்வும், உறக்கமும் கொடுத்தால் அது சோம்பலாகும். இன்று செய்து முடிக்க வேண்டியதை நாளைக்கென்று ஒத்திவைப் பது சோம்பல்.

மடியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்.

— *திருக்குறள்*

அக்டோபர் 31 ஐப்பசி 15

செயலும் சாந்தியும்

இடையருது வினையாற்றுவதும், மனது யாண்டும் அமைதியுற்றிருப்பதும் ஒன்று சேர்ந்து நல்ல வழிபாடு ஆகிறது.

ஹிருதயம் ஓயாது அடித்துக் கொண்டிருக்கிறது. அதனால் அது களைப்புறுவதில்லை. உடல் அங்ஙனம் உழைத்துக்கொண்டிருக்கட்டும். மனது சாந்தியில் நிலைத்திருந்தால் உழைக்கிற உடலுக்கு ஆயாசம் உண்டாகாது. வினையாற்றுதலும் விச்ராந்தியும் சேர்ந்தே நிகழ்கின்றன.

சித்த நினைவுஞ் செயுஞ்செயலும் நீயெனவாழ்
உத்தமர்கட் கான உறவே பராபரமே.

— தாயுமானவர்

சில்லரை மாற்றுதல்

பரம்பொருளே, உன்னை உள்ளத்தினுள் உள்குவதும் உரக்க உன்னைப் போற்றிப் புகழ்வதும் எல்லாம் உனக்குகந்த வழிபாடே.

பொன் காசு ஒன்றுக்குச் சில்லரை மாற்றினால் பை நிறைய தாமிரக்காசுகள் கிடைக்கும். சிறிய பண்டங்களை விலைக்கு வாங்குதற்கும் அவைகள் உதவும். ஆனால் அவைகளின் மதிப்போ குறைவானது. கடவுளைப் பற்றி மனதில் உணர்வது பொற்காசு போன்றது. அவரைப்பற்றிப் பேசுவது தாமிர சில்லரைக்காசு போன்றது.

அல்லும் பகலும் அறிவாகி நின்றவர்க்கே
சொல்லும் பொருளுஞ் சுமைகாண் பராபரமே.

— தாயுமானவர்

சப்பாணிப் பருவம்

எங்கும் நிறைபொருளே, உன்னை நான் எப்படி வழுத்தினாலும் அது உனக்கு ஏற்புடையதே.

பிறந்த குழந்தை மல்லாந்து கிடக்கிறது; முயன்று குப்புறப்படுக்கிறது; தவழ்கிறது; நிற்கிறது; வீழ்கிறது; பிடித்து நடக்கிறது; தத்தி நடக்கிறது; பின்பு நேரே நடக்கிறது. இறைவணக்கத்தில் சாதகன் அப்படி முயன்று முயன்று மேல் நிலைக்கு வரவேண்டும்.

முக்குணத்தைச் சீவனென்னும் மூடத்தை
விட்டருளால்
அக்கணமே எம்மை அறிந்துகொள்வ
தெந்நாளோ?

— தாயுமானவர்

மின் விளக்கு

உன்னைச் சார்ந்திருப்பதாலேயே ஒண் பொருளே, நான் உயிர் தரித்திருக்கிறேன்.

இருட்டறையில் இருக்கும் மின்விளக்கு மற்ற பொருள்களைப் போன்று மறைந்து கிடக்கிறது. ஆனால் அதனுள் மின்சக்தி வந்ததும் அது சுடர் விளக்கு ஆகிறது. ஜோதி சொருபமாகிய அது அறையில் உள்ள பொருள்களையெல்லாம் விளக்குகிறது. அங்ஙனம் இறைவன் அருளால் ஜீவாத்மாக்கள் தங்களை உணர்கின்றனர்; ஏனைய பொருள்களையும் பார்க்கின்றனர்.

யானே பொய் என் நெஞ்சும் பொய்
என் அன்பும்பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே!

— மாணிக்கவாசகர்

நவம்பர் 4 ஐப்பசி 19

ஊழ்

உடலில் வசித்திருக்கும் பொழுதும் உடல் உணர்வு இல்லாதவன் ஆவேனாக.

அறையில் உள்ள குளிரோ, வெப்பமோ, குப்பையோ குடியிருப்பவனால் உணரப்படுகிறது. ஊழை முன்னிட்டு உடலுக்கு வரும் நலம் கேடுகளை ஆத்மா உணருகிறது. ஆனால் அவைகளை உணராதிருந்து பழகவேண்டும்.

வானின் றிடிக்கிலென் மாகடல் பொங்கிலென்
கானின்ற செந்தீக் கலந்துடன் வேகிலென்
தானென்றி மாருதஞ் சண்டம் அடிக்கிலென்
நானென்றி நாதனை நாடுவன் நானே.

— திருமந்திரம்

வருந்துதற் கொன்றுமில்லை

பரிபூரணானந்தமே, உனது பேரமைப்பில் குறைபாடு ஒன்றுமில்லை என்பதை நான் கண்டு கொள்வேனாக.

தரையில் நிற்பவர்களுக்கு மேடுகளும் மடுக்களும் தென்படுகின்றன. மலையுச்சியி னின்று பார்ப்பவர்க்கோ எல்லாம் ஒரே சம வெளியாம். அண்டத்தின் பேரமைப்பை உள்ளபடி காண்கின்றவர்களுக்கு அதன் நடைமுறையில் குறைபாடு ஒன்றும் தென் படுவதில்லை. ஆதலால் அவர்களுக்குவருந்து தற்கு ஒன்றுமில்லை.

ஒயாக் கவலையினால் உள்ளுடைந்து வாடாமல்
மாயாப் பிறவி மயக்கறுப்ப தெக்காலம்?

— பத்திரகிரியார்

நீ ஏழையா ?

கடவுளோடு கூட்டுறவு கொண்டிருப்பதால் நான் பெறுதற்கரியதைப் பெற்றவனாகிறேன்.

பொருள் குறைந்து போய்விட்டதினால் நீ ஏழையாய் விட்டாயா? ஏழ்மை பொருளைப் பொறுத்ததன்று. உடைமையில் வறியர் பலர் இருக்கின்றனர். மனவுறுதி படைத்திருப்பவன் ஏழையல்லன். கஷ்டதசையையும் மனவுறுதி ஒழுங்குப்படுத்தி விடுகிறது. கஷ்டகாலத்தை முன்னிட்டு மனம் தளர்வுறுபவன் ஏழை. அதை உறுதியுடன் சமாளிப்பவன் ஏழையல்லன்.

உணர்த்தும்உனை நாடாது உணர்ந்தவையே நாடி
இணக்குறுமென் ஏழைமைதான் என்னே பராபரமே.

— தாயுமானவர்

நேர்மை

நேர்மை தவறிவிடின் திருவருளுக்கு அன்னியனுய்ப் புல்லியன் ஆய்விடுவேன், அந்தோ !

நேர்மையில் ஒழுகுகிறவன் மறைத்துவைப்பதற்கு ஒன்றுமில்லை. திருட்டுத்தனமாய் அவன் எதையும் செய்வதில்லை. பொருந்தாத ஆசைக்கு அவன் அடிமைப்படுவதில்லையாதலால் அவன் யாருக்கும் அஞ்சுவதில்லை. ஏறு போல் அவன் நடக்கிருன்; நிமிர்ந்திருக்கிருன்; தெளிவுறப் பேசுகிருன்; நேரே முகத்தைப் பார்க்கிருன். அவனே நேர்மைக்கு விளக்கமாகிருன்.

இடுக்கண் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்.

— திருக்குறள்

அரண்

குழந்தைக்கும், குழந்தை போன்ற சான்ரோனுக்கும் அரண் ஆவது பேரன்பு.

வாழ்வுக்கு உறுதுணையாவது அன்பு. மேலும் அன்பின் வழியது உயிர்நிலை. தடைகளையெல்லாம் தகர்க்கவல்லது அன்பு. வெறுப்பு, பகை, துன்பம் என்னும் எதிரிகளையெல்லாம் உள்ளே வரவொட்டாது தடுக்கும் அரண் ஆக அமைந்திருப்பதும் அன்பு. அதினின்று உலப்பில்லாத பேரானந்தம் பிறக்கிறது.

அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்துஞ் சிறப்பு.

— *திருக்குறள்*

போதனு முறை

எண்ணிறந்த ஜீவர்களாகத் தோன்றி யிருக்கும் சச்சிதானந்த சிவமே, உனக்குப் பாடம் புகட்டுதல் என்னும் எண்ணம் என் உள்ளத்தினுள் புகுந்துவிடலாகாது.

பரதத்துவத்தைப் பழக்கத்தில் கொண்டு வருவதே நல்ல போதனு முறை. வெறும் பேச்சாளன் போதிக்கவல்லவனுகான். உண்மைக்கு ஒப்ப வாழ்கின்றவனது ஒவ்வொரு செயலும் வலிவு மிகப் படைத்தது; ஒவ்வொரு சொல்லும் உள்ளத்தை மாற்றியமைக்க வல்லது. நல்வாழ்வு சர்வகாலமும் பாடம் புகட்டும் போதனு முறையாகிறது.

காச்சச் சுடர்விடும்பொற் கட்டிபோல் நின்மலமாய்ப்
பேச்சற் றவரே பிறவார் பராபரமே.

— தாயுமானவர்

நவம்பர் 10 ஐப்பசி 25

தற்போதம்

உலக வாழ்வு என்னும் தூக்கத்தினின்று பாரமார்த்திக வாழ்வு என்னும் விழிப்பு நிலைக்குப் போவோமாக.

தூங்குபவனுடைய தரம் யாது என்று நமக்கு விளங்குவதில்லை. விழித்தான பிறகு அது நன்கு வெளியாகிறது. பாரமார்த்திக உணர்விலே விழித்து எழுந்திருப்பவனுக்குப் பெருவாழ்வு துவங்குகிறது. அவனுடைய செயல்களெல்லாம் அவனை மேன்மையின் கண் எடுத்துச் செல்வனவாகும். தெய்வப் பெற்றியே அவன்பால் பொலிகிறது.

**உள்ளும் புறம்பும் உவட்டாத ஆனந்தக்
கள்ளருந்தி நின்றதிலே கண்ணுற்றாய் நெஞ்சமே.**

— பட்டினத்தார்

தனித்திரு

தெய்வ சிந்தனையில் ஊறியிருத்தற் பொருட்டு தனித்திருந்து பழகுவோனாக.

மனிதன் உலகுக்குள் வந்தது தனியாக. அவன் உலகைவிட்டு ஏகுவது தனியாக. உலகில் இருக்கும்பொழுதும் இடையிடையே அவன் தனித்திருந்து பழகவேண்டும். பாரமார்த்திக வாழ்வுக்குப் பக்குவம் ஆகாதவன் தனித்திருக்க முடியாது. பக்குவப்பட்டவனுக்கு அது தெய்வ சான்னித்தியத்துக்கு ஒப்பானது.

தனிமுதலைப் பார்த்துத்
தனித்திருந்து வாழாமல்
அணியாய மாய்ப்பிறந்திங்கு
அலைந்துநின்றேன் பூரணமே.

— பட்டினத்தார்

நவம்பர் 12 ஐப்பசி 27

பசித்திரு

அருட்பசியெடுத்து அழுவேனுகில் அகிலாண்ட நாயகி அப்பசியைப் போக்கியருள்வாள்.

பசியெடுத்திருப்பவனுக்குஉறக்கம்இல்லை. உணவை அவன் நாடுகிருன். கடவுளை அடையவேண்டும் என்ற பசி யாருக்கு வருகிறதோ அவன் பாக்கியவான். யாரும் புகட்டாது அருள் நாட்டம் தானுகவே அவனுக்கு வந்துவிடுகிறது.

விசுத்தி மகேசுரனை விழிதிறந்து பாராமல்
பசித்துருகி நெஞ்சம் பதறினேன் பூரணமே.

— பட்டினத்தார்

நவம்பர் 13 ஐப்பசி 28

சாக்ஷி

பிரபஞ்சத்தின் நடைமுறை அனைத்துக்கும் பரம்பொருளே, நீ சாக்ஷியாயிருப்பது போன்று எனது உடல் வாழ்க்கைக்கு நான் வெறும் சாக்ஷியாயிருப்பேனாக.

அழகிய படம் ஒன்றை ஒருவன் விலைக்கு விற்கிறான். மற்றொருவன் வாங்குதற்குப் பேரம் பண்ணுகிறான். இருவர் கருத்தும் விலையிலேயே சென்றுகொண்டிருக்கிறது. வழிப்போக்கன் ஒருவனோ படத்தின் ஓவியத் திறமையை ரசித்துக்கொண்டிருக்கிறான். பிரபஞ்சம் என்னும் படத்தை அதற்கு சாக்ஷியாயிருப்பவனே ரசிக்கிறான். அதில் கட்டுண்டிருப்பவன் ரசிப்பதில்லை.

சொல்லால் மனத்தால் தொடராச் சம்பூரணத்தில்
நில்லா நிலையாய் நிலைநிற்ப தென்னாளோ?

— தாயுமானவர்

நவம்பர் 14 ஐப்பசி 29

பிண நெஞ்சு

நான் யாண்டும் ஜீவபோதத்தில் மூழ்கியிருப்பதால் உள்ளிருக்கும் சிவம் சவம் போன்று கிடக்கிறது.

அடுப்புக்கரி தன்னளவில் கன்னங்கறேரென்று கிடக்கிறது. ஆனால் அதைத் தீயுடன் சேர்த்தால் அது தேஜோமயமாகத் திகழ்கிறது. மனது அதுபோன்றது. உலக விஷயங்களில் சேர்ந்தால் அது பிண நெஞ்சு. பரம்பொருளைச் சார்ந்தால் அது சித் சொரூபம் ஆகிறது.

ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற்கு
அன்பிலை என்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதும் செய்கிலை
பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின் றதுமிலை
துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை
செய்வதொன் றறியேனே.

— மாணிக்கவாசகர்

பூனையின் பல்

நன்றுடையானே, தீதில்லானே, உன்னை வந்தடைந்த பிறகே நான் தீதில்லாதவன் ஆகிறேன்.

பூனையின் பல் கருணைக்கு இருப்பிடமா, கொடூரத்துக்கு இருப்பிடமா? பூனைக்குட்டி அது கருணைக்கு இருப்பிடம் என்று சொல்லும். ஆனால் எலியோ அது கொடூரத்துக்கு இருப்பிடம் என இயம்பும். உலகம் நல்லதா, கெட்டதா என்னும் கேள்வி எழுகிறது. கடவுள் மயமாய் அதைக் காண்பவனுக்கு அது நல்லது; மற்றவனுக்கு அது கெட்டது.

எண்ணமுந்தான் நின்னைவிட இல்லை
யென்றால் யான்முனமே
பண்ணவினை யேது பகராய் பராபரமே.

— தாயுமானவர்

பொறுமை

பிரபஞ்சத்திலுள்ள அனைத்தையும் பண்படுத்தும் பெரிய பொருளே, உன்போன்று நான் பொறுமை படைத்திருப்பேனாக.

அமைதி ஆற்றலுக்கு அறிகுறி. பயிற்சியில் பண்பாடு அடைந்து பொறுமையுடன் இருக்கும் மனதில் ஆற்றல் மிக உண்டு. எப்படி வினையாற்றுவது என்பது பொறுமையாளனுக்குத் தெரியும். அவன் வீண் பேச்சுப் பேசான். அவனுடைய வேலைத்திட்டம் யந்திரம் போன்று ஒழுங்கானது. முன்யோசனை அவனுக்கு மிகவுண்டு. நாடிய கருமத்தை முறையாக அவன் செய்துமுடிப்பான். இதுவே பொறுமையின் விளைவு.

உள்ளும் புறம்பும் ஒருபடித்தாய் நின்றுசுகங்
கொள்ளும் படிக்கிறைநீ கூட்டிடவுங்
காண்பேனோ?

— தாயுமானவர்

நவம்பர் 17 கார்த்திகை 2

உடலை அலங்கரித்தல்

உடல் ஞாபகம் மறந்துபோகவும் பரபோதம் மேலோங்கவும் இறைவா, எனக்கு நீ அருள்புரிவாயாக.

உடல் பற்று வைத்திருப்பவனே உடலை அலங்கரிக்கிருன். பாபங்கள் அனைத்தும் உடல்பற்றினின்று உதிக்கின்றன. உள்ளம் பரிபக்குவம் அடையுமளவு உடலைப்பற்றிய எண்ணம் மறைந்துபோய்விடுகிறது. உடல் வாழ்க்கை வாழ்ந்திருக்கும்பொழுதும் உடலைப்பற்றி எண்ணுதிருப்பவனே நல்ல ஆத்ம சாதகன்.

அநித்தியத்தை நித்தியமென்று ஆதரவா
யெண்ணுதே
தவித்திருக்கேன் என்குதே தனைமறக்கேன்
என்குதே.

— பட்டினத்தார்

நவம்பர் 18 கார்த்திகை 3

வைகறையில் துயில் எழு

இறைவா, உன்னைப் போற்றுதற்குரிய பிரம்ம முகூர்த்தத்தில் நான் உறங்கிக் கொண்டிருப்பது முறையோ!

சூரியோதயத்துக்கு ஒரு மணி நேரத்துக்கு முன்பே பிரம்ம முகூர்த்தம் உச்சத்துக்கு வந்துவிடுகிறது. அப்பொழுது தூங்கிக் கொண்டிருப்பவர்களுக்கு அருள் துறையிலோ பொருள் துறையிலோ முன்னேற்றமில்லை. வைகறையில் விழித்தெழுந்திருப்பவர்க்கு எல்லாவித முன்னேற்றமும் உண்டு.

ஏதங்கள் அறுத்து எம்மை ஆண்டருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

— மாணிக்கவாசகர்

நவம்பர் 19 கார்த்திகை 4

சண்டையிடல்

இறைவணக்கத்துக்கு நேரம் போத வில்லையே என்று ஏங்கியிருப்பவனுக்குப் பிறரோடு சண்டையிட நேரமெங்கே!

முற்றிலும் பரிபக்குவம் அடைந்திருப்பவன் மற்றவர்களோடு சண்டையிடுவதில்லை. பிறர் கூறும் கடுஞ்சொல்லை அவன் இன்சொல் கொண்டு எதிரழைக்கிறுன். சினத்துக்கு அவன் உள்ளத்தில் இடம்கொடுப்பதில்லை யாதலால் பிறர் சினம் அவன் முன்னிலையில் மாயமாய் மறைந்துபோய்விடுகிறது.

இனிய உளவாக இனறுத கூறல்
கனியிருப்பக் காய்க்கவர்ந் தற்று.

—திருக்குறள்

நவம்பர் 20 கார்த்திகை 5

இயற்கையில் நம்பிக்கை

இயற்கையின் செயலும் இறைவன் செயலும் ஒன்றே என்று உணர்ந்து அதை முற்றிலும் நம்பியிருப்பேனாக.

குடியானவன் ஒருவன் நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபடுகிறான்; பூமியைத் திருத்தியமைக்கிறான்; பருவத்தில் விதை விதைக்கிறான். பிறகு அவன் முற்றிலும் இயற்கையை நம்பியிருக்கிறான். மழை, காற்று, வெயில் முதலியன முறையாக அமையவேண்டுமென்று வழுத்துகிறான். இயற்கையில் வைக்கும் நம்பிக்கையும் தெய்வத்திடம் வைக்கும் நம்பிக்கையும் ஒன்றேயாம்.

**ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்.**

— *திருக்குறள்*

நவம்பர் 21 கார்த்திகை 6

தனக்குத் தானே துணை

உயர்நிலையெய்த விரும்பாத என்னை யார்தான் உயர்நிலைக்கு எடுத்துச் செல்ல முடியும்?

தான் உண்ணும் உணவை மனிதன் தானே ஜீரணம் பண்ணியாக வேண்டும். உடல் வளர்ச்சி தன்னையே பொறுத்தது. அறிவு வளர்ச்சியும் தனக்குத் தானே செய்துகொள்வதாகும். வழிகாட்டித் தருவதோடு ஆசிரியர் வேலை நின்று விடுகிறது. அருள் துறையில் முன்னேற்றம் அடைவதற்கும் தானே முயன்றாக வேண்டும். யாண்டும் தனக்குத் தானே சுற்றம்.

தாமே தமக்குச் சுற்றமும் தாமே தமக்கு விதிவகையும்
யாமார் எமதார் பாசமார் என்ன மாயம்!

— மாணிக்கவாசகர்

வேள்வி

பரம்பொருள் என்னும் வேள்வித்தீயில் என்னைப் படைத்துவிடுவேனாக.

உலகினின்று தான் ஏற்பதைவிட யார் உலகுக்கு அதிகமாக வழங்குகிறானோ அவன் வேள்வி வேட்பவன் ஆகிறான். வேள்வியின் மூலமாகவன்றி வாழ்க்கையில் முன்னேற்ற மில்லை. வேள்வி வேட்காதவன் திருடன். வேள்வி வேட்பவனே இகம் பரம் ஆகிய இரண்டையும் பெறுகிறான்.

காமக் கடல்கடந்து கரையேறிப் போவதற்கே
ஓமக் கனல்வளர்த்தி உள்ளிருப்ப தெக்காலம்?

— பத்திரகிரியார்

ஐம்பெரு வேள்வி

பல வடிவங்களில் இருக்கும் பரம்பொருளுக்கு என்னைப் பண்புடன் பகுத்துக் கொடுத்து விடுவேனாக.

நித்தம் செய்யும் பரம்பொருள் வழிபாடே தேவ யக்ஞம். பக்தியுடன் பனுவல் படிப்பது ரிஷி யக்ஞம். பெற்றோர்க்குப் பணிவிடை செய்வதும் காலஞ் சென்ற முன்னோர்க்கு நல்லெண்ணம் செலுத்துவதும் பிதிர் யக்ஞம். மக்களுக்குத் தொண்டு புரிவது நர யக்ஞம். மற்ற உயிர்களிடத்து அன்பாயிருப்பது பூத யக்ஞம். இவ்வைந்தும் பெருவேள்விகளாம்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை.

— திருக்குறள்

நவம்பர் 24 கார்த்திகை 9

சக்தி பூஜை

நான் பொல்லாத சேய் எனினும் தாயாகிய நீ என்னைத் தள்ளுதல் நீதமோ? உன்னையன்றி எனக்குப் புகல் இடம் ஏது?

தாயின் வாஞ்சையை அறிகிறவன் தெய்வத்தின் கருணையை அறிகிறான். கருத்தரித்த நாள் முதல் காலமெல்லாம் தன் குழந்தைக்கென்றே வாழ்ந்திருப்பவள் தாய். அன்னை பராசக்தி உயிர்களைப் பரத்தினிடம் சேர்க்கும் வரையில் தனது கருணைகரக் கண்காணிப்பைச் செலுத்தி வருகிறாள்.

ஒன்றுமறியா இருளாம் உள்ளம் படைத்தஎனக்கு
என்று கதிவருவது? எந்தாய் பராபரமே!

— தாயுமானவர்

நவம்பர் 25 கார்த்திகை 10

சிவ பூஜை

சிவபெருமானே எண்ணிறந்த ஜீவகோடிகளாக வடிவெடுத்து இலங்குகிருர் என்று உணர்ந்து அத்தனை வடிவங்களில் அவ்வரைப் போற்றக் கற்றுக் கொள்வேளுக.

ஆண்டவனே ஆருயிர் வடிவங்களில் இலங்குகிருர்.ஒவ்வோர் உயிரோடும் இணக்கம் கொள்ளும் போது அது இறைவனேடு கொள்ளும் இணக்கம் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டால் அந்த இணக்கம் தானுகவே நல்லிணக்கம் ஆய்விடும்.

எத்தனையோ தேர்ந்தாலும் என்னுலே
இன்பமுண்டோ
சித்துருவே இன்பச் சிவமே பராபரமே.

— *தாயுமானவர்*

நவம்பர் 26 கார்த்திகை 11

நாராயண சேவை

நரர்கள் எல்லாரும் நாராயண சொரூபங்கள் என்று அவர்களைப் போற்றுவோமாக.

ஆலயத்தின்கண் எழுந்தருளப் பண்ணியிருக்கும் மூர்த்தியை ஆராதிப்பதன் மூலம் ஆராதனை முறையைக் கற்றுக்கொள்கிறோம். பின்பு நாம் தொடர்வுகொள்ளும் உயிர்கள் அனைத்துக்கும் உள்ளன்போடு பணிவிடை செய்தல் வேண்டும். உயிர்களிடத்து நாம் கொண்டுள்ள இணக்கமே இறைவணக்கம் என்னும் பெயர் பெறுகிறது.

ஆதிமுதலாகி நின்ற அரியென்ற அட்சரத்தை
ஓதியறிந் துள்ளே உணர்வதினி எக்காலம்?

— பத்திரகிரியார்

நவம்பர் 27 கார்த்திகை 12

விநயம்

கனி நிறைந்த கிளை தானாக வளைவது போன்று கருணாகரனே, நான் கிருபைக்கு ஆளாகும்பொழுது விநயம் என்னிடம் தானாக வந்துவிடுகிறது.

மேட்டில் மழை நீர் நிற்பதில்லை. பள்ளமான இடத்துக்கு அது பாய்ந்து சாகுபடிக்கு உதவுகிறது. வீண் பெருமை கொண்டிருப்பவன் உள்ளத்தில் இறைவன் அருள் தங்குவதில்லை. விநயத்துடன் பணிந்திருப்பவன் உள்ளமே அருளுக்குத் தங்குமிடமாகிறது.

பணியுமாம் என்றும் பெருமை; சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து.

— திருக்குறள்

நல்வழி

நான் நலவழியில் நடந்தால் இறைவா, உன்னையன்றி வேறு எங்கே போகமுடியும்?

அரசனது ஆதரவு நல்வழியின் ஆதரவுக்கு நிகராகாது. செல்வத்தின் ஆதிக்கம் நல்வழியின் ஆதிக்கத்துக்கு ஈடாகாது. ஆயுதத்தின் வல்லமை நல்வழியின் வல்லமைக்கு ஒப்பாகாது. நண்பனது நட்பு நல்வழியின் நட்புக்குச் சமனுகாது. நல்வழி ஒன்றே மனிதனுக்கு யாண்டும் பெருந்துணையாகிறது.

நல்லாற்ருல் நாடி அருளாள்க பல்லாற்ருல்
தேரினும் அஃதே துணை.

— திருக்குறள்

நவம்பர் 29 கார்த்திகை 14

முன்யோசனை

அடையப் பெறுபவைகளுள் அண்ணலே, உனக்கு ஒப்பானது ஒன்றுமில்லை என்பதை நான் இளமையிலேயே கற்றுக்கொள்வேனாக.

செய்து சாதிப்பதற்குக் கடினமானதை முன்யோசனை செய்பவன் எளிதில் முடித்து விடுகிறான். மிகப் பெரிய காரியத்துக்கும் சிறிய துவக்கமிருக்கிறது என்பதை முன்யோசனைக்காரன் தெரிந்து கொள்கிறான். சிறு செயல்களிடத்தும் ஆழ்ந்து கருத்துச் செலுத்துபவன் சான்றோன்.

பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்.

— திருக்குறள்

நவம்பர் 30 கார்த்திகை 15

தொண்டன்

உனக்குத் தொண்டு புரிந்தே நின் அன்பர்கள் எல்லாம் உனக்குரியவர் ஆயினர். நான் யாண்டும் தொண்டனயிருக்கக் கற்றுக் கொள்வேனுக.

மேடுகளில் இருக்கும் சிற்ருறுகளெல்லாம் பள்ளத்தில் இருக்கும் பேராற்றில் கலக்கின்றன. உயிர்கள் எல்லாம் தொண்டனுக்குச் சொந்தமாய்விடுகின்றன. மற்றவர்களுக்கு அவன் தலைவன் எனினும் தலைச்சுமை போன்று அவன் யாருக்கும் தொந்தரவு கொடுப்பதில்லை. மற்றவர்களுக்கு அவன் முன்நிற்பவன் எனினும் யாருக்கும் இடைஞ்சல் செய்வதில்லை. தொண்டன் யாருக்கும் எதிரியல்லன்.

அன்புறு சிந்தைய ராகி யடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமண மேவிநின்று
இன்புறும் எந்தை இணையடி யேத்துவார்
துன்புறு வாரல்லர் தொண்டுசெய் வாரே.

— திருஞானசம்பந்தர்

டிசம்பர் 1 கார்த்திகை 16

ஏட்டுக் கல்வி

சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே, உன் சான்னித்தியத்தை உணரும்போது நூல் ஆராய்ச்சி சுவையற்றுப்போய் விடுகிறது.

வெளியூரில் இருக்கும் புதல்வன் ஒருவனுக்கு அவனுடைய பெற்றோரிடமிருந்து கடிதம் ஒன்று வந்தது. அதைப்படித்துக்கொண்டிருக்கும்போது பெற்றோரே நேரில் வந்து விட்டனர். உடனே மகன் கடிதத்தை ஒரு புறம் வைத்துவிட்டுத் தாய் தந்தையருடன் பேச ஆரம்பித்தான். அதே விதத்தில் ஏட்டுக் கல்வி கடவுளின் அருளைப் பெறும்வரையில்தான் பயன்படுகிறது.

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

— திருக்குறள்

பித்தன்

பாரினில் உள்ளோர் வெவ்வேறு பொருள்களைக் குறித்துப் பித்துப் பிடித்திருக்கையில் பெம்மானே, நான் உன்பொருட்டுப் பித்தன் ஆவேனாக.

பரம்பொருளுக்கு அமைந்துள்ள பல பெயர்களுள் பித்தன் என்பது முற்றிலும் பொருத்தமானது. உயிர்களைத் தனக்கு உரிமையாக்கிக்கொள்ளுதலில் அவன் பெரும் பித்துப் பிடித்திருக்கிறான். இனி அவனை அடையவேண்டும் என்னும் பித்தம் உயிர்களுக்கு வந்துவிட்டால் முன்னேற்றம் மிக எளிதாகிவிடுகிறது.

எத்தாற் பிழைப்பேனோ எந்தையே
நின்னருட்கே
பித்தானேன் மெத்தவுநான் பேதை
பராபரமே.

— தாயுமானவர்

டிசம்பர் 3 கார்த்திகை 18

கலை

கலைகள் யாவும் முடிவில் கடவுளின் பெருமையையே விளக்குகின்றன என்பதை நான் அறிந்துகொள்வேனாக.

கலைஞானங்கள் யாவும் உலகத்தில் உள்ள அதிசயங்களை விளக்குகின்றன. ஒவ்வொரு கலையும் கடைசியில் கடவுள்தான் இவ்வுலகாகத் தோன்றிக்கொண்டிருக்கிறார் என்னும் உண்மையை வெளிப்படுத்துகிறது. எனவே கற்கவேண்டிய முறையில் கலையைக் கற்றால் மெய்ப்பொருளை அடைதற்கு அது உபாயமாகும்.

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து.

— திருக்குறள்

நிலை

எனது உடல் வாழ்க்கை தேர் ஓட்டத்துக்கு ஒப்பானது. தேர் நிலைக்கு வருவது போன்று இறைவா, உன்னை அடையுங்கால் நான் நிலைக்கு வந்தவனாகிறேன்.

ஒவ்வொரு பொருளுக்கும் உற்ற நிலையுண்டு. தனது நிலையை அடையும் வரையில் எப்பொருளுக்கும் ஓய்வு இல்லை. நீரானது கடலைப்போய் அடையும் வரையில் அதற்கு நிலை தடுமாற்றமே நிகழ்கிறது. மனிதன் தெய்வத்தை அடையும்வரையில் அவன் நிலை தடுமாறித் தத்தளித்துக்கொண்டிருக்கிறான்.

தேடாத தேட்டினரே செங்கைத் துலாக்
கோல்போல்
வாடாச் சமநிலையில் வாழ்வார் பராபரமே.

— தாயுமானவர்

டிசம்பர் 5 கார்த்திகை 20

அந்தர்யோகம்

விளையாடும் பொம்மைகளை விட்டெறிந்து விட்டுக் குழந்தை தன் தாயை நாடுவது போன்று இறைவா, உன்னை நான் நாடுவேனாக.

காலமெல்லாம் மனிதன் உலக வியவகாரத்தில் மூழ்கியிருப்பது பொருந்தாது. அவைகளை ஒதுக்கி வைத்துவிட்டு இடையிடையே அருள் நாட்டம் கொள்ளவேண்டும். அப்படிச் செய்தால் அவன் பிறவிப் பெருங்கடலில் மூழ்கிப்போய்விடமாட்டான்.

ஐவரொடுங்கூடாமல் அந்தரங்க
சேவைதந்த
தெய்வ அறிவே சிவமே பராபரமே.

— தாயுமானவர்

டிசம்பர் 6 கார்த்திகை 21

அந்தக்கரணம்

உலகைக் காண்பதற்குப் பயன்படுகிற அந்தக்கரணத்தை இறைவா, உன்னிடம் திருப்பி உன்னையே காணப் பழகி வரு வேணுக.

அந்தக்கரணம் அல்லது மனது புறவுலகைக் காண உதவுகிறது. கெட்ட மனமுடையவர்க்கு உலகம் கேடுடையதாகத் தெரிகிறது. மனம் நல்லதாக மாறுமளவு உலகும் நல்லதாகத் தோன்றுகிறது. தெய்வீக மனதுக்கு தெய்வக் காட்சியே எங்கும் தென்படுகிறது. மனதை தெய்வத்தில் ஒடுக்கிவிட்டால் மனிதன் தெய்வத்தை அடையப்பெறுகிறுன்.

அந்தக்கரணம் அடங்கத் துறப்பதுவே
எந்தத் துறவினும்நன் றெந்தாய் பராபரமே.

— தாயுமானவர்

ஆணவம்

இறைவா, நான் யாண்டும் உன்னுடைய சன்னிதியிலேயே இருக்கிறேன் எனினும் ஆணவம் குறுக்கிட்டு உன் காட்சியை மறைக்கிறது, என்னே!

சூரியனைவிடப் பன்மடங்கு சிறியது பூமி. சூரியன் இப்பூமிக்கும் இன்னும் பல கிரகங்களுக்கும் வெளிச்சம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் மூடுபனி அவ்வெளிச்சத்தை வரவொட்டாது தடுத்து விடுகிறது. அற்ப ஆணவத்துக்கு இறைக் காட்சியை மறைக்கும் திறமையிருக்கிறது. சூரிய வெப்பத்தால் மூடு பனியை அகற்றுவது போன்று இறைவன் அருளால் ஆணவ மலத்தை அகற்றவேண்டும்.

கெட்டவழி ஆணவப்பேய் கீழாக மேலான
சிட்டருனைப் பூஜை செய்வார் பராபரமே.

— தாயுமானவர்

டிசம்பர் 8 கார்த்திகை 23

முக்கனி

யோகம், பக்தி, ஞானம் என்னும் முக்கனியை இறைவா, உனக்குப் படைத்து வணங்க நான் கற்றுக்கொள்வேனாக.

வாழை, மா, பலா ஆகிய மூன்றை முக்கனி என்கிறோம். இவைகளுள் ஒவ்வொன்றும் தன்னளவில் சுவையும் சத்தும் உடையது. பின்பு மூன்றுஞ்சேருங்கால் சுவையிலும் உணவுச் சத்திலும் அவை பன்மடங்கு மேலோங்குகின்றன. கடவுளுக்குப் படைக்க அவை முற்றிலும் பொருத்தமானவைகள். மனம், மொழி, மெய்யாகிய முக்கனிகளை நாம் கடவுளுக்குக் கொடுத்துவிட வேண்டும்.

**தானந் தவந்தருமஞ் சந்தமுஞ் செய்வர்சிவ
ஞானன் தனையணைய நல்லோர் பராபரமே.**

—தாயுமானவர்

மாயை

ஈசா, உனது யோக மாயையினுல் நீ உலகாகக் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கிருய். மாயை சொரூபமாக அல்லாது உன்னை நான் உள்ளபடி காண்பேனுக.

முதலில் முட்டையாயிருந்து பிறகு பறவை யாவது பறப்பனவற்றின் இயல்பு. பரம் பொருள் பிரபஞ்ச சொரூபமாகக் காட்சி கொடுத்துக்கொண்டிருக்கிருர். ஞானக்கண் பெறுகிறவர்களுக்குப் பிறகு அவர் உள்ளபடி தமது மெய்க்காட்சியளிக்கிருர். பிரபஞ்ச மாக தம்மைக் காட்டிக்கொள்வது அவருடைய இயல்பு. இந்த இயல்பை மாயை என்கிரேும்.

வல்லமையே காட்டுகின்ற மாமாயை
நாஞெருவன்
இல்லையெனின் எங்கே இருக்கும் பராபரமே.

—தாயுமானவர்

நெறி

இறையே, உன் காட்சியைப் பெறுதிருக்கிறபொழுதும் உன்னை அடைதற்கான நெறியில் நான் சென்றுகொண்டிருப்பேனாக.

வீண்காலம் கழிக்காது சரியான பாதையில் போய்க்கொண்டிருப்பவர்கள் சேர வேண்டிய இடத்தைப் போய்ச் சேருவர். நாம் அனைவரும் பரம்பொருளிடத்து யாத்திரை போய்க்கொண்டிருக்கிறோம். நெறி அல்லது வழி பிசகாதிருப்போமாகில் அவரைச்சென்றடைவது திண்ணம்.

மின்னனைய பொய்யுடலை மெய்யென்று
நம்பிஐயோ
நின்னை மறக்கை நெறியோ பராபரமே.

— தாயுமானவர்

டிசம்பர் 11 கார்த்திகை 26

நீர்க்குமிழி

இறைவா, நீ நீர். நான் நீர்க்குமிழி. என் வடிவத்தில் நான் வாஞ்சை வைக்காது உன் சொருபத்தைப் பற்றியிருப்பேனாக.

நாமரூபத்தில் நாம் மயங்கியிருக்கிறோம். ஆனால் ரூபம் ஓயாது மாறுவதால் நாமமும் மாறுகிறது. பின்பு பொருளோ நாமரூபத்தில் பாதிக்கப்படாதிருக்கிறது. நீர்க்குமிழி போன்றது நாமரூபம். அது நிலைத்திருப்பதில்லை. அழிகிற நாமரூபத்தை ஒதுக்கிவிட்டுப் பொருளைக் காணக் கற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

நித்தியமொன் றில்லாத நீர்க்குமிழி
போன்றவுடற்
கித்தனைதான் துன்பமுண்டோ என்னே
பராபரமே.

— தாயுமானவர்

சாகக் கற்றுக்கொள்

எனது முன்னேற்றத்துக்கு வாழ்வு பயன் படுவதுபோன்று சாவும் பயன்படுகிறது என் பதை இறைவா, எனக்குப் புகட்டியருள்வா யாக.

உடலை உறுதிப்படுத்துதற்கும் உள்ளத் தைத் தெளிவுபடுத்துதற்கும் உறக்கம் தேவை. பழுதுபட்ட உடலை மாற்றிக்கொள் ளுதற்கும் புதிய சூழ்நிலையை உண்டுபண் ணிக்கொள்ளுதற்கும் மரணம் முற்றிலும் அவ சியமாயிருக்கிறது. வாழ்ந்திருக்கும்பொழுதே மாய்ந்துபோனவன் போன்று யார் ஆய்விடு கிருனே அவன் ஞானத்துக்குத் தகுதியுடை யவன் ஆகிருன்.

ஆவியொடு காய மழிந்தாலும் மேதினியில்
பாவியென்று நாமம் படையாதே—மேவியசீர்
வித்தார முங்கடம்பும் வேண்டாம்—மடநெஞ்சே
செத்தாரைப் போல திரி.

— பட்டினத்தார்

டிசம்பர் 13 கார்த்திகை 28

அஷ்ட சித்திகள்

எந்தையே, உன் சிருஷ்டியிலுள்ள விந்தைகளைக் கண்டு நான் மயங்கலாகாது. உன்னேடு பிரியாத இணக்கம் கொள்ளுதலையே நான் வேண்டி நிற்கிறேன்.

பேரரசன் ஒருவனைக் கண்டு அவனேடு இணக்கம் பூணச் செல்லும் ஒருவன் அரண்மனையிலுள்ள அதிசயங்களைக் கண்டுகளித்து வருவானாகில் அவன் அறிவிலியாவான். கடவுள் சிருஷ்டியிலுள்ள சித்திகள் பலப்பல. அவையாவும் அஷ்ட சித்திகள் என இயம்பப்படுகின்றன. நீர்மேல் நடப்பது, நிலத்தில் புதையுண்டுசாகாது கிடப்பது போன்றவை அவைகள். ஆத்மசாதகன் அவைகளை நாடலாகாது.

சித்திநெறி கேட்டல் ஜெகமயக்கம் சன்மமற
முத்திநெறி கேட்டல் முறைகாண் பராபரமே.

— தாயுமானவர்

டிசம்பர் 14 கார்த்திகை 29

அக்ஷய பாத்திரம்

அண்ணலே, நீ அக்ஷய பாத்திரம். உன்னிடத்திலிருந்து எதை, எவ்வளவு எடுத்தாலும் நீ குறைவில்லாத நிறை பொருள். உன்னை நான் எனக்குச் சொந்தமாக்கிக் கொள்வேனாக.

உலகம் முழுதுக்கும் மழை நீராக மாறியமைவது கடல் நீர். ஆயினும்அது யாண்டும் குறையாதது. உயிர்கள் அனைத்தும் தாம் வேண்டியவைகளை சர்வேசுவரனிடமிருந்து பெறுகின்றன. தேவைகளை ஓயாது நல்குதற்கிடையில் அவர் அக்ஷய பாத்திரமாகவே இருந்து வருகிறார்.

எத்தனையோ அண்டத்து இருந்தவர்கள்
எத்தனைபேர்
அத்தனைபேர் உண்டாலும் அணுவுங
குறையாண்டி.

— பட்டினத்தார்

டிசம்பர் 15 மார்கழி 1

குறி

இறைவா, நான் அடைதற்குரிய குறியாய் இருப்பவன் நீயே. இதை நான் யாண்டும் நினைவில் வைத்துக்கொள்வேனாக.

அண்டத்திலுள்ள யாவும் புறப்பட்ட இடத்தையே திரும்பிப் போய்ச்சேர்வதைக் குறியாகக் கொண்டிருக்கின்றன. கடலினின்று கிளம்பிய நீராவி திரும்பவும் கடலையே சென்றடைகிறது. நாம் கடவுளிடத்திருந்து புறப்பட்டு வந்தவர்கள். திரும்பவும் அவரைச் சென்றடைவது நமது குறியாகும்.

குறியாகக்கொண்டு குலமளித்த நாயகனைப் பிரியாமற்சேர்ந்து பிறப்பறுப்ப தெக்காலம்?

— பத்திரகிரியார்

டிசம்பர் 16 மார்கழி 2

சூரசம்மாரம்

இறைவா, என்னுள்ளிருக்கும் சிற்றியல்பு என்னும் சூரனைச் சம்மாரம் செய்ய நீ துணை புரிவாயாக.

அசுரனை அழித்தல் என்னும் அரிய செயலை தெய்வம் பல்வேறு வடிவெடுத்துச் செய்திருக்கிறார். நம்முள்ளிருக்கும் கீழ்மையே அசுரன் என உருவகப்படுத்தி இயம்பப்பட்டிருக்கிறது. கீழ்மையோடு கடும்போர் புரிந்து அதை அகற்றவேண்டும்.

மனதையொரு வில்லாக்கி வான்பொறியை
நாணாக்கி
எனதறிவை அம்பாக்கி எய்வதினி
யெக்காலம்?

— பத்திரகிரியார்

டிசம்பர் 17 மார்கழி 3

தடுத்தாளுதல்

அறியாமையினால் தீயவழியில் செல்லும் குழந்தையைத் தாய் காப்பாற்றுவது போன்று என்னை இறைவா, புன்மையின் கண் போகாது தடுத்தாள்வாயாக.

தம்மைத் தடுத்தாள வேண்டுமென்று சுந்தரர் பிறக்கும்பொழுதே பரமனிடம் வரம் வாங்கிக்கொண்டு வந்தார். கிரீசன் என்னும் பாபியை ஸ்ரீராமகிருஷ்ணர் தடுத்தாண்டார். தகுதி நம்மிடம் முழுதுமில்லை யெனினும் நம்மைத் தடுத்தாளும்படி கருணாகரனிடம் நாம் பரிந்து கேட்டுக்கொள்ளலாம்.

தானாக வந்து தடுத்தாண் டெனையின்ப
வானாகச் செய்தஇன்ப வானே பராபரமே.

— தாயுமானவர்

பொய் மான்

பிரபஞ்ச வாழ்வு என்னும் பொய்மானைப் பார்த்தோடாதிருக்குமாறு பரம்பொருளே, நீ அருள்புரிவாயாக.

தவத்துக்காகக் காட்டுக்குச் சென்றிருந்த ஸ்ரீ ராமனும் சீதையும் சிறிது நேரம் பொய்மானுக்கு ஆசைப்பட்டார்கள். அந்த ஆசைக்கு இடங்கொடுத்ததால் அவர்கள் பெருந்துயரத்துக்கு ஆளானார்கள். மக்கள் எல்லாரும் படும் துயரத்துக்கு மூலகாரணம் பொறி வழியே அவர்கள் பிரபஞ்சப் பொருள்கள் என்னும் பொய்மானை நாடிச் செல்வதாம். அதைப் புறக்கணிக்குமளவு துன்பம் தவிர்க்கப்படும்.

இகமுழுதும் பொய்யெனவே
ஏய்த்துணர்ந்தால் ஆங்கே
மிகவளர வந்தஅருள்
மெய்யே—அகநெகிழப்
பாரீர் ஒருசொற் படியே அனுபவத்தைச்
சேரீர் அதுவே திறம்.

— தாயுமானவர்

டிசம்பர் 19 மார்கழி 5

அபயம்

அபயகரங்காட்டி என்னை வாவென்று அழைத்த வண்ணமாயிருக்கும் இறைவா, நான் விரைவில் உன் சந்நிதி வந்து சார வேணுக.

தீக்கு அருகில் வருகிறவர்களுக்குக் குளிர் போகிறது. உணவை ஏற்பவர்க்குப் பசி போகிறது. கடவுளை அடைபவர்க்குப் பயம் போகிறது. கடவுளில் ஒன்றித்துவிடுபவர்க்கு ஆபத்து ஒன்றுமேயில்லை. கடவுளை அடைவதும் அபயத்தில் நிலைபெறுவதும் ஒன்றேயாம்.

இக்காயம் பொய்யென்றோர் ஈட்டத்து
உனக்கபயம்
புக்காதார் உண்டோ புகலாய்
பராபரமே.

—தாயுமானவர்

நின் செயல்

பிரபஞ்சத்தில் நிகழ்வதெல்லாம் இறைவா, நின் செயல். என் செயல் என்று சிலவற்றுள் நான் உரிமை பாராட்டி பந்த பாசத்தை உண்டுபண்ணிக்கொள்கிறேன்.

மின் சக்தியால் இயக்கப்பெற்றுச் சக்கரம் சுழல்கிறது; தீபம் எரிகிறது; ஒலிபெருக்கி ஓலமிடுகிறது; அடுப்பு வெப்பம் கொடுக்கிறது. அப்படித் தெய்வத்தின் ஆணையால் இயற்கையில் யாவும் நடைபெறுகின்றன. இதை அறியாத மனிதன் தன்னைச் செயலுக்குக் கர்த்தாவாக்கிக்கொள்கிறான்.

பார்க்கின் அண்டபிண்டப் பரப்பனைத்தும்
நின்செயலே
யார்க்குஞ் செயலில்லையே ஐயா பராபரமே.

— தாயுமானவர்

மனது

தீயில் போட்ட அடுப்புக்கரி தானே தீ யாவது போன்று தேவே, என் மனதை உன்னிடம் கொடுத்துவிட்டால் அது உன் சொரூபம் ஆய்விடுகிறது

மனம் இருக்கும் வரையில் உலகக் காட்சி யிருக்கிறது. நல்ல மனதுக்கு உலகம் நல்ல தாகக் காட்சியளிக்கிறது; கெட்ட மனதுக்கு உலகம் கெட்டதாகத் தென்படுகிறது. தெய் விக மனதுக்குத் தெய்வக் காட்சி தென்படு கிறது. மனம் அழியுங்கால் காணப்படும் உலகும் மறைகிறது. மனோ நாசத்துக்குப் பிறகு எஞ்சியிருப்பது மெய்ப்பொருள்.

சிந்தை பிறந்ததும் ஆங்கே—அந்தச்
சிந்தை இறந்து தெளிந்ததும் ஆங்கே
எந்த நிலைகளும் ஆங்கே—கண்ட
யான்தான் இரண்டற்று இருந்ததும்
ஆங்கே.

—தாயுமானவர்

டிசம்பர் 22 மார்கழி 8

நான்

நான் என்பதை இறைவா, உனக்கே உரியதாக்கி விடுவேனாக.

நான் என்பதற்கு இலக்காயிருப்பது எது? உடலா, தசையா, ரத்தமா, எலும்பா? மனம், புத்தி முதலிய அந்தக்கரணமா? நான் என்பது வெங்காயம் போன்றது. சருகுகளை ஒவ்வொன்றாக நீக்கிய பிறகு வெங்காயத்தில் எஞ்சியிருப்பது ஒன்றுமில்லை. கருவி கரணங்களை நீக்கிய பிறகு நான் என்பதற்கு இலக்காக ஒன்றுமில்லை.

ஊன்கெட்டு உயிர்கெட்டு
    உணர்வுகெட்டு என் உள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித்
    தெள்ளேணங் கொட்டாமோ?

— மாணிக்கவாசகர்

அருள் நிலை

மருளிலே மயங்கி மாயாஜகத்தில் உழலும் என்னை எம்மானே, அருளிலே அசையாதிருக்க வைப்பாயாக.

மனிதன் ஏக காலத்தில் மாறுபடும் இரண்டு காட்சிகளைக் காண்பதில்லை. பாம்பு என்னும் காட்சி தென்படும் பொழுது கயிறு என்னும் காட்சியில்லை. கயிற்றைக் கயிறாக உணரும்போது பாம்பு இல்லை. பொருளை இயற்கையாகக் காண்பது மருள் நிலை. பொருளைப் பரமனைக் காண்பது அருள்நிலை.

அருள் எலாந்திரண்டு ஓர்வடி வாகிய
பொருள் எலாம்வல்ல பொற்பொதுநாத! என்
மருள் எலாங்கெடுத் தேஉளம் மன்னலால்
இருள் எலாம்இரிந்து எங்கோளித் திட்டதே?

— தாயுமானவர்

டிசம்பர் 24 மார்கழி 10

நீங்கியிரு

இறைவனுக்கு அன்னியமானதிலிருந்து மனமே நீ நீங்கியிரு. நித்தியானந்தம் அப்பொழுது உனக்குச் சொந்தம்.

நீர் ஒன்று நீங்கலாக ஏனைய எல்லாவற்றினின்றும் மீன் விலகியிருக்கிறது. ஏனையவற்றைச் சார்ந்தால் அதற்குத் துன்பம். சச்சிதானந்தத்தைத் தவிர மற்ற எல்லாப் பொருள்களிடத்திருந்தும் நீ விலகியிரு. அப்பொழுது உனக்குக் கேடு ஒன்றுமில்லை.

உண்டோ நமைப்போல வஞ்சர்—மலம்
ஊறித் ததும்பும் உடலைமெய் யென்று
கொண்டோ பிழைப்பது இங்கு ஐயோ—
அருட்
கோலத்தை மெய்யென்று கொள்ளவேண்
டாவோ !

— தாயுமானவர்

சஹஜ நிஷ்டை

சஹஜ நிஷ்டைக்கும் என் சிந்தைக்கும் வெகுதூரம். நான் ஏகமாய் நின்றேடிருக்கும் நாள் எந்த நாள்? இந்நாளில் அது முற்றுருதோ?

அரசாங்க உத்தியோகஸ்தன் ஒருவன் தனது சொந்தக்காரியம் போன்று எத்தனை யெத்தனை அலுவல்களையோ செய்து வருகிருன். ஆனால் தனக்கு அதிகாரம் வருவது அரசாங்கத்திடமிருந்து என்பதும், தான் செய்வதெல்லாம் அரசாங்கத்தின் அலுவல்கள் என்பதும் அவனுக்கு நன்கு தெரியும். அதேவிதத்தில் சஹஜ நிஷ்டையில் இருக்கிற ஒருவன் எண்ணிறந்த வியவகாரங்களுக்கிடையில் விச்ராந்தியில் இருக்கிருன்.

சட்டையொத்த இவ்வுடலைத்
தள்ளுமுன்னே நான் சகச
நிட்டையைப்பெற்று ஐயா
நிருவிகற்பங் காண்பேனே?

— தாயுமானவர்

பரத்தினைப்பார்

இருப்பவர் பரம்பொருள் ஒருவரே. யாண்டும் அவரையே கண்டு, அவரோடு களித்திருப்பாய் மனமே.

கயிற்றைப் பாம்பெனக் கருதி மனிதன் படாதபாடு படுகிறான். அப்படித் தான் படும் வேதனைக்கெல்லாம் தனது அக்ஞானமே காரணமாகும். பரம்பொருளைப் பிரபஞ்சமெனக் கருதி மனிதன் அல்லல் மிகப்படுகிறான். பரமனை உள்ளபடி காண்பது மெய்யறிவு.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

— திருக்குறள்

அசையாதிரு

அசைந்து கொண்டிருக்கும் அந்தக்கரணத்தைக் கொண்டு அசையாப் பொருளே, உன்னை நான் அறிவது எங்ஙனம்?

தேங்கியிருக்கிற தண்ணீர்ப் பரப்பிலே திங்களின் பிம்பம் தெளிவுறத் திகழ்கிறது. தண்ணீரில் திரைகளும் அலைகளும் அதிகரிக்குமளவு திங்களின் பிம்பம் பிளவுபட்டுப் போகிறது. சித்தம் அடங்கிச் சும்மாவிருக்கும்பொழுது அதற்கு அடிப்படையாயுள்ள ஆத்மப் பிரகாசம் நன்கு ஒளிர்கிறது.

வேண்டா விருப்பும் வெறுப்பும்—அந்த
வில்லங்கத் தாலே விளையுஞ் ஜனனம்
ஆண்டான் உரைத்தபடியே சற்றும்
அசையா திருந்துகொள் அறிவாகி
நெஞ்சே.

— *தாயுமானவர்*

டிசம்பர் 28 மார்கழி 14

துரியம்

மாறுபடுகிற மனநிலைக்கெல்லாமிடையில் அருட்பேறே, உன் உணர்விலேயே நான் ஓயாது திளைத்திருப்பேனாக.

நாள்தோறும் நனவு, கனவு, கனவற்ற உறக்கம் ஆகிய மூன்று அவஸ்தைகளில் நாம் மாறி மாறி உழன்று வருகிறோம். இம்மூன்று மனநிலைகளுக்கு நாம் அடிமைப்பட்டவர்களாகவும் இருந்து வருகிறோம். இம்மூன்றுக்கும் பொதுவாயும் இம்மூன்றினுள் தோயாதும் இருக்கிற அறிவு நிலையே துரியம்.

கருதும்அடி யார்கள்உளங் காணவெள.

யாகுந்

துரியநிறை வான சுகமே பராபரமே.

— தாயுமானவர்

அத்வைதம்

சூரியனும் சூரியகிரணமும் போன்று இறைவா, நான் உனக்கு அன்னியமானவன் அல்லன் என்பதை அறிந்துகொள்ள அருள் புரிவாயாக.

அலையும் கடலும் இரண்டு பொருள்கள் அல்ல. அவைகள் அத்வைதம். சிவமும் சக்தியும் அத்வைதம்; பிரம்மமும் மாயையும் அத்வைதம்; உடலும் உயிரும் அத்வைதம்; ஜகத்தும் ஜீவனும அத்வைதம்; சேதனமும் அசேதனமும் அத்வைதம்; ஜீவாத்மாவும் பரமாத்மாவும் அத்வைதம்.

சகமனைத்தும் பொய்யெனவே
தானுணர்ந்தால் துக்க
சுகமனைத்தும் பொய்யன்றோ
சோராது—இகபரத்தும்
விட்டுப் பிரியாத மேலான அத்துவிதக்
கட்டுக்குள் ஆவதென்றோ காண்.

— தாயுமானவர்

டிசம்பர் 30 மார்கழி 16

நிர்விகற்ப சமாதி

மனக்கொதிப்பு அடங்கினால் இறைவா, உனக்கும் எனக்கும் உள்ள தொடர்வு உள்ளபடி விளங்கிவிடும்.

காற்று அடிக்கும்பொழுது தடாகத்தின் மேற்பரப்பு மேடுபள்ளமுடையதாய்விடும். அதில் சந்திரனது பிம்பம் உள்ளபடி தென்படுவதில்லை. தேங்கிய தடாகத்தில் சந்திர பிம்பம் சந்திரன் போன்றது. தேங்கிய மனதில் பிரகாசிக்கும் ஜீவாத்மன் பரமாத்மா போன்றது. மனதற்ற நிலையில் ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றே. மனம் அற்றிருப்பது நிர்விகற்ப சமாதி.

நேச நிருவிகற்ப நிட்டையல்லால்
உன்னடிமைக்கு
ஆசையுண்டோ நீயறியா தன்றே
பராபரமே.

— தாயுமானவர்

பெரிய வீடு

எம்பெருமானே, நான் உன்னை அடைந்து உனது பெரு வீட்டில் வாழாது ஜீவபோதம் என்னும் சிறு வீட்டில் வசித்திருந்து சிறுமைக்கு ஆளாகிறேன், என்னே!

கடல் நீரானது ஆவியாகவும், மேகமாகவும், உறைபனியாகவும் என்னென்னவோ வடிவெடுக்கிறது. பின்பு மழைநீர், ஆற்றுநீர், சேற்றுநீர், கிணற்றுநீர் என்றெல்லாம் அதே நீர் புதிய புதிய பெயர்களை எடுக்கிறது. அது திரும்பவும் கடலைச் சென்றடைந்தான பிறகு இந்த உபாதிகளையெல்லாம் தாண்டி விடுகிறது. உபாதிகளை மலம் என்கிறோம்; அவைகளை அகற்றுகிற ஜீவன் சிவமாகிறான்.

சித்தமலம் அறுவித்துச்
சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக்கு அருளியவா(று)
ஆர் பெறுவார் அச்சோவே.

— மாணிக்கவாசகர்

அகண்டாகாரம்

எண்ணங்களையெல்லாம் ஒதுக்கிவிட்டுப் பேரறிவே, உன்னில் நான் புதைந்திருப் பேனாக.

உப்புப் பொம்மையொன்று கடலில் நீராடச் சென்றது. சிறிது நேரத்துக்குள் அது தன் வடிவை இழந்துவிட்டது; கடல்மயம் ஆய்விட்டது அது. அங்ஙனம் ஆத்ம சாதகன் ஜீவபோதத்தைப் பரபோதத்தில் கரைத்து விடவேண்டும்.

ஆங்கென்றும் ஈங்கென்றும் உண்டோ-
சச்சி
தானந்த ஜோதி அகண்ட வடிவாய்
ஓங்கி நிறைந்தது கண்டால்—பின்னர்
ஒன்றென்று இரண்டென்று உரைத்
திடலாமோ?

— தாயுமானவர்

பூரணம்

இறைவா, உனக்கும் எனக்கும் உள்ள தொடர்வை உணர்ந்தான பிறகு, நான் யாண்டும் பூரணத்திலேயே நிலைத்திருப்பதை நன்கு அறிந்துகொண்டேன்.

அலையானது கடலுக்கு அன்னியமாக ஒரு பொழுதும் இருப்பதில்லை. தன்னை எவ்வளவு சிறியதாக அல்லது பெரியதாக அமைத்துக் கொண்டாலும் அலையானது யாண்டும் கடல் மயமே. ஜீவனானது தன்னை எத்தனை யெத்தனையோ உபாதிகளோடு பொருத்தி வைத்திருக்கிறது. ஆனால் அத்தனை வடிவங்களுக்கிடையில் அது பூரணத்திலேயே புதைந்திருக்கிறது.

தாக்குநல் லானந்த ஜோதி—அணு
தன்றிற் சிறிய எனைத்தன் அருளால்
போக்கு வரவற் றிருக்குஞ்—சுத்த
பூரண மாக்கினன் புதுமைகாண் மின்னே.

— தாயுமானவர்

தலைப்பு அகராதி

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனத்தினின்று
வெளிவரும்

தர்ம சக்கரம்

திங்கள் வெளியீடு

இது இந்தியாவின் பண்பைப் போதிக்கிறது. பாரமார்த்திகத்தைப் பரப்புகிறது. சமயக் கொள்கைகளை விளக்குகிறது. சமயத்தில் புகுந்துள்ள கசடுகளை அகற்றுகிறது. பைந் தமிழைப் பேணுகிறது.

அறிவு வளர்ச்சிக்கும், ஆன்மீக முன்னேற்றத் திற்கும், இல்லற வாழ்விற்கும் இணையற்ற பொக்கிஷம். விவரங்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளுங்கள்.